# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 15 செவ்வாய்க்கிழமை (31.08.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 278


# ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு பொறுப்புக் கூறும் விதத்தில் அரசமைப்பில் திருத்தம்

## அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

கொழும்பு, ஓகஸ்ட் 31

ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பதில் கூறக்கூடியவராகவும் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது நாடாளுமன்றத்துக்கு வருகை தந்து உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கூடியவராகவும் புதிய அரசமைப்புத் திருத்தங்கள் வழி செய்கின்றன.

அரசமைப்புத் திருத்தத்தின்படி ஜனாதிபதி ஒருவர், இரண்டு தடவைகளுக்கு மேல் பதவி வகிக்கலாம். இரண்டு தடவைகள் மட்டுமே பதவி வகிக்கமுடியும் என்ற கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம் செப். 08 இல் சபைக்கு

கொழும்பு, ஓக. 31

அரசமைப்புத் திருத்தம் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். 8ஆம், 9ஆம் திகதிகளில் இது தொடர்பான விவாதம் நடைபெற்று 9ஆம் திகதி மாலை வாக்கெடுப்பு நடைபெறும் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நீதி அமைச்சர் அதாவுத செனவிரத்ன அரசமைப்புத் திருத்தங்களை சபையில் முன்வைப்பார்.

அமைச்சரவை அங்கீகாரம் வழங்கிய அரசமைப்புத் திருத்தங்கள் நேற்றே நீதி ஆலோசனைக்காக (24ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளிகள் 500 பேர் சனியன்று விடுவிக்கப்படுவர்

கொழும்பு, ஓக. 31

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் விடுதலைப் புலிகள் அமைப்பின் மேலும் ஐந்நூறு போராளிகள் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இவ்வைபவம், வவுனியா பம்பைமடு புனர்வாழ்வு நிலையத்தில் சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் டியூ. குணசேகர மற்றும் பிரதியமைச்சர் விஜிதமுனி சொய்சா ஆகியோரின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்தம் தொடர்பான ஐ.தே.கவின் நிலைப்பாடு இன்று தெரியும்

கொழும்பு, ஓக. 31

அரசால் வழங்கப்பட்டிருக்கும் அரசமைப்புத் திருத்த யோசனைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு இன்று வெளியிடப்படும் என்று அக் கட்சியின் ஊடகப் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கயந்த கருணாதிலக்க நேற்றுக் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

அரசமைப்புத் திருத்த யோசனைகள் தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகள் அரசுடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தினர். திருத்த யோசனைகளை எழுத்துமூலம் தருமாறு நாம் அரசிடம் கோரியிருந்தோம். இப்போது எமக்கு அந்த யோசனைகள் அரசால் வழங்கப்பட்டுள்ளன.

நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமையை (23 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? 7 ஆம் திகதி கூடி ஆராயப்படும்

கொழும்பு, ஓக. 31

உத்தேச அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவளிப்பதா இல்லையா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 7ஆம் திகதி கூடி ஆராயவுள்ளது என மட்டக்களப்பு மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதிப் பதவியை இரண்டு தடவைகளுக்கு மேல் வகிக்க முடியாதென்ற தற்போதைய (24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் பிரச்சினைகளை அரசமைப்புத் திருத்தம் தீர்க்காது

### வாசுதேவ நாணயக்கார கூறுகிறார்



கொழும்பு, ஓக. 31

புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்கினால் மட்டுமே தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்றும் அரசமைப்பைத் திருத்துவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வைக் காணமுடியாது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்துள்ளார்.

தெற்காசியாவில் இந்தியாவின் பாதுகாப்பு தொடர்பாக அந்நாடு அதிக கவனம் செலுத்துகிறது.

(24 ஆம் பக்கம்

## யாழ்நகரில் பல்வேறு தரப்பினரையும் இன்று சந்திக்கின்றார் நிருபமாராவ்



யாழ்ப்பாணம், ஓக. 31

இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் தலைமையிலான குழுவினர் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். மாவட்டச் செயலகத் தி[ல்] துரையாடலில் நிருபமா தலைமையிலான குழுவினர் கலந்து கொள்கின்றனர். இந்தக் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க, அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, மாநகர மேயர் ப.யோகேஸ்வரி, திணைக்களத் தலைவர்கள், பிரதேச சபைச் செயலர்கள்

(24 ஆம் பக்கம் பார்க்க)

## தெற்காசிய மாணவர்களும் கற்கக் கூடிய விதத்தில் 10 தனியார் பல்கலைக்கழகங்களை அரசு ஆரம்பிக்கும்

### வன்னி மாணவர்கள் 425 பேருக்கு அமைச்சர் நிதியுதவி



யாழ்ப்பாணம், ஓக. 31

உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களும் பட்டப்படிப்பைத் தொடரும் விதமாக நாடு முழுவதும் 10 தனியார் பல்கலைக்கழங்களை ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது நாளாக நேற்று திங்கட்கிழமை விஜயம் செய்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் இருந்து வெளியேறிய (24 ஆம் பக்கம் பார்க்க)

## பூஸாவிலுள்ள 12 பல்கலை. மாணவர்களையும் விரைவில் விடுவிக்க ஜனாதிபதி சம்மதம்

### நேற்று கோமும்பு சென்று திரும்பிய அமைச்சர் எஸ்.பி. தேரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 31

காலி, பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பன்னிரெண்டு பல்கலைக்கழக மாணவர் களையும் விரைவாக விடுவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளதாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸ நாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு மூன்றுநாள் விஜயம் மேற்கொண்டிருந்த (24 ஆம் பக்கம் பார்க்க)




உள்ளூர் நிகழ்வுகளை உலகறியச்செய்வோம்!

நல்லைக் கந்தனின்

உற்சவக் காலத் திருக்காட்சிகள்

தினமும் உங்கள் உதயனின்

வலைத் தளத்திலும்....

www.uthayan.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லூர் கந்தசுவாமி ஆலய வெளி வீதியில் பக்தர்கள் அடியழிப்பது மற்றும் 'பிரதட்டை' செய்வதற்கு இடையூறாகவுள்ள நாவலர் மணி மண்டப சுற்றுமதில் நேற்று இரவு இடித்து அகற்றப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. இப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் யாழ்.நகர மேயர் திருமதி யோ.பற்குணராஜாவும் நேரில் சென்று பார்வையிட்டனர்

(படங்கள்: லக்ஸ்மன்)

# மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்துகொள்ள கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு இன்னும் கதவடைப்பு

## பஸிலின் வாக்குறுதி காற்றில்

கொழும்பு, ஓக. 31

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு விடுக்கப்படும் எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உறுதியளித்தும் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்துக்கு கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

யாழ்.மாவட்டக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் இத்தகவலை நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் கிளிநொச்சியில் நடைபெற்றது தெரிந்ததே.

இக்கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்படாதது குறித்து சிவஞானம் ஸ்ரீதரன் எம்.பி. இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டம் தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபரைத் தொடர்புகொண்டு கேட்டபோது அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அழைப்பு அனுப்ப வேண்டாமெனத் தமக்குப் பணிப்புரை வழங்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், விவசாயம் உட்பட இன்னோரன்ன பிரச்சினைகள் குறித்து எனக்குத் தெரியும். இவற்றுக்குத் தீர்வுகாண நாங்கள் அபிவிருத்திக் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள வேண்டியுள்ளது. அபிவிருத்திக் குழுக் கூட்டங்களுக்கென இங்கு வந்து செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ கிளிநொச்சி மக்களின் பிரச்சினைகள் குறித்து எதுவும் தெரியாது. நான் கிளிநொச்சியில் மக்களுடன் குடியிருப்பவன். எனக்கு அவர்களது பிரச்சினைகள் தெரியும்.

இந்த விடயம் குறித்து மீண்டும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் சம்பந்தப்பட்டவர்களுடன் பேச்சு நடத்துவேன். இப்படி ஸ்ரீதரன் எம்.பி. தெரிவித்தார்.

## பணிப்பெண் உடம்பில் ஆணி ஏற்றிய விவகாரம்

# சவூதி தூதரகத்துக்கு முன் ஆர்ப்பாட்டம்

சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த இலங்கைப் பணிப்பெண் ஆரியவதியின் உடலில் வீட்டு எஜமான் ஆணிகளை ஏற்றியமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பிலுள்ள இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதரகத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பல பொது அமைப்புகள் கலந்துகொண்டு எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பின.

சவூதி அரேபியாவுக்கு எந்தப் பணிப் பெண்ணையும் வேலைக்கு அனுப்பக் கூடாது என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன் போது இலங்கை அரசிடம் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பாக ரஞ்சன் ராமநாயக்க கூறியவை வருமாறு:-

இலங்கைப் பணிப்பெண் ஆரியவதிக்கு சவூதியில் இழைக்கப்பட்ட கொடுமையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதுபோன்ற நாடுகளுக்கு எமது பணிப்பெண்கள் அனுப்பப்படுவது நிறுத்தப்படவேண்டும்.

சவூதியில் எமது பெண்கள் மிகவும் மோசமாக நடத்தப்படுகின்றனர். அவர்களின் உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. அவர்கள் பலவந்தமாக விபசாரத் தொழிலில் ஈடுபடுத்தப்படுகின்றனர்; கொல்லப்படுகின்றனர்.

எமது பணிப்பெண்களுக்கு எதிரான இந்த மாதிரி நிலைமையை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. இதுதொடர்பாக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட குழுவினர் சவூதி தூதரகத்துக்குச் சென்று தூதுவரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

(ஒ-சி)

# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பொதுவைத்திய நிபுணர் சேவை

தென்மராட்சி, ஓக 31

யாழ்.போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவு பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.கேதீஸ்வரன் பிரதி சனிக்கிழமைகளில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் நடைபெறும் நீரிழிவு சிகிச்சைப் பிரிவிலும் சிகிச்சையளிக்கவுள்ளார்.

வைத்தியசாலையில் கடந்த 2ஆம் திகதி நடைபெற்ற நீரிழிவு சிகிச்சையில் நோயாளர்களையும் மற்றும் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்களையும் பார்வையிட்டார்.

இதேவேளை விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளர்களின் சிறுநீர் பரிசோதனைக்கான மருந்துகள் இல்லாததால் தனியார் மருந்தகங்களில் உரிய மருந்துகள் வாங்கிக் கொடுத்து வைத்தியசாலையில் சலப்பரிசோதனை மேற்கொள்வதாக நோயாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வுகூடத்திலும் சலப்பரிசோ தனைகளை மருந்துகள் கையிருப்பில் இல்லாததால் தனியார் பரிசோதனை நிலையங்களில் பரிசோதனை செய்து அறிக்கையுடன் நீரிழிவு கிளினிக்குக்கு வருவதாக வெளிநோயாளர் பிரிவு நோயாளர்களும் தெரிவித்தனர்.

(த-207)


## கிராமிய வங்கி புதிய இடத்தில்

எமது சங்க கிராமிய வங்கியானது 01.09.2010 திகதி தொடக்கம் துர்க்காதேவி தேவஸ்தானத்திற்கு அருகிலுள்ள எமது தொலைத் தொடர்பு நிலையக் கட்டடத்தில் செயற்படும் என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன்.

பொது முகாமையாளர்
(சி-570476) தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கம்

## USED LAPTOPS FOR SALE



HP DELL FUJITSU COMPUTERS SIEMENS COMPAL

Processor 2.4, 2.8, 2.4 Dual Core, 1.8 Core 2 Duo, DVD Writer, 250GB HDD,1GB Ram, Card Reader Modem, Network, with Bag. from Rs. 32,000.

**STR COMPUTER SYSTEM**
384, Navalar Road, Nallur, Jaffna.
Tel: 021-222 4459, 0774192275, Fax : 222 4460.


## மரண அறிவித்தல்



### பொன்னையா செல்லையா

மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா - செல்லையா நேற்று (30.08.2010) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னார் அமரர்களான பொன்னையா இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக்கணவரும், விமலறோஜினி (சாந்தி - சுவிஸ்), பாஸ்கரன் (அப்பன்- சுவிஸ்), குமுதறோஜினி (மாலா- ஜேர்மனி), ஜீவறோஜினி (ஜீவா- சுவிஸ்), நீல றோஜினி (கோகிலா), சுதாகரன் (சுதன்- லண்டன்), கிருபாகரன் (டயலொக் Telecom- யாழ்) ஆகியோரின் அன்புத் தகப்பனும் சிவநாதன், சிவயோகமலர், பாலபுலேந்திரன், நாகேஸ்வரன், அருந்தவசீலன்(ஆசிரியர் யா/கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வித்), சுபந்தினி, பிரதீபா(பவா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சுஷானா, நிவேதனா, பவிநுதன், அட்சயா, கௌரீசன், துஷாந், நிதுர்ஷன், நிதுர்ஷா, குஸ்மிகா, சியாகன், தபேஷ், ஆகியோரின் அன்புப் பேரனும் அமரர் அன்னப்பிள்ளை மற்றும் முத்துப் பிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரனும், முத்துபொன்னையா, செல்வரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2010) புதன் கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொற்புலவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

T.P: 021 790 1999,
021 7333 666, 0777334 374
மீசாலை கிழக்கு,
மீசாலை.

தகவல்:
கிருபாகரன் (மகன்)
டயலொக் Telecom- யாழ்கிளை

(102698)

## வெள்ளிவிழாக் காணும் தம்பதிகள்



திரு.திருமதி
சுந்தரலிங்கம் சிவகாமசுந்தரி
மாலிசந்தி ஸ்ரீ வரதராஜ
விநாயகர் துணைகொண்டு
இல்லற வாழ்வுதனில்
இணைந்து 25 ஆண்டுகள்
இனிதாய் கடந்த எம் பெற்றோர்

**திரு.திருமதி சுந்தரலிங்கம் சிவகாமசுந்தரி**
தம்பதிகளை இன்று போல் என்றும் பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகின்றோம்.


சதா பொன்ஸ் அல்வாய் கிழக்கு.

**[illegible]**
**வேணு, வேந்தன்,**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிகள்

பிறப்பு
27.08.1979

பறிப்பு
15.12.2007



பிறப்பு
09.11.1981

பறிப்பு
03.09.2007

சுப்பிரமணியம் கௌசிகன் சுப்பிரமணியம் இதயராஜ்

முன்றாண்டுகள் ஆனாலும் ஆறிடுமோ எம் நெஞ்சம்
அன்பாலும் பண்பாலும்அனைவரையும் கவர்ந்து விட்டு
அவனியில் எமைவிட்டுச் சென்றதேனோ?
அழியாத நினைவுகளாய் என்றும் நீங்கள் எம் நெஞ்சில் வாழ்ந்திடுவீர்!

அம்மா, அப்பா,
சகோதர உறவுகள்.

[illegible] இலந்தைக்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(102702)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# புதிய பொதுவுடைமை புலர்கிறதா?

ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் இரண்டு தடவைகளுக்கு மட்டுமன்றி, மக்கள் தமது வாக்குகள் மூலம் தெரிவுசெய்யும் பட்சத்தில் எத்தனை தடவைகளும் அந்தப் பதவியை வகிக்கலாம்.

இந்த வசதியை உண்டாக்கும் அரசமைப்புச் சட்டத் திருத்தம் அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ளது. அது எவ்வித எதிர்ப்பும் இன்றி அங்கு நிறைவேற்றப்படும் என்பதில் கடுகளவு சந்தேகமும் இல்லை.

நிறைவேற்று ஜனாதிபதி முறைக்குப் பதிலாக நாடாளுமன்றுக்குப் பதில் கூறக்கூடிய நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் ஆட்சி முறையை நடைமுறைக்குக் கொண்டுவரும் அரசமைப்புச் சட்டம் குறித்து, ஜனாதிபதிக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்கள் புஷ்வாணமாயிற்று!

ஐக்கிய தேசியக் கட்சியை தனது பொறிக்குள் வீழ்த்தி முடக்கிவிடுவதற்காக, ஜனாதிபதி போட்ட திட்டத்தின் சூட்சுமம் விளங்காது, பாவம் ரணில், அரசியலில் நம்பிக் கெட்டுத் தோற்றுப்போய் அல்லாடுகிறார்!

அவரோடு சேர்ந்தியங்கிய சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசோ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதியின் வலையில் வீழ்ந்துவிட்டது.

இனியென்ன? மஹிந்தர் பட்டுப்பாவாடையில் வலம் வந்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குப் பலத்துடன் தாம் மூன்றாவது தடவையாகவும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதியாக ஆட்சிக் கட்டிலில் ஏறுவதற்கு வகைசெய்துகொள்வார்.

இத்தகைய சூழ்நிலையில், பின்னணியில், மஹிந்த ராஜபக்ஷ, இடதுசாரிப்போக்குடையவர், முற்போக்குவாதி என்று தப்புக்கணக்குப் போட்டு, அவருடன் இணைந்திருக்கும் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஐவரினதும் நிலைப்பாடு என்ன? அந்த ஐவரில் இருவர் அமைச்சர்கள், ஒருவர் பிரதி அமைச்சர்.

தேர்தல் காலம் வரை ஜனாதிபதியின் ஆலோசகராகப் பதவி வகித்தவரான, ஒரு காலத்தில் மக்கள் மதிப்புப் பெற்றிருந்த இடதுசாரித் தலைவராக விளங்கிய வாசுதேவ நாணயக்கார, தாமும் மற்றும் நான்கு இடதுசாரிகளும் கொள்கையளவில் அரசின் அரசமைப்புச் சட்டத்திருத்தத்தை ஆதரிக்கவில்லை என்று சொல்கிறார்.

இடதுசாரி உறுப்பினர்கள் ஐவரும் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதை ஆரம்பத்தில் இருந்தே எதிர்த்து வருவதாகவும் அவர் அடித்துக் கூறுகிறார்.

ஆனால் அரசாங்கத்துடன் கொண்டுள்ள நட்பை முறித்துக்கொள்ளும் விதத்தில் தாம் நடந்துகொள்ளப் போவதில்லை என்றும் வாசுதேவ சொல்கிறார்.

அது எப்படி? ஜனாதிபதியின் பதவிக்காலத்தை இரண்டு தடவைகளுக்கு கூடுதலாக அதிகரிக்கும் அரசமைப்புச் சட்டத்திருத்த விவாதத்துக்கும், வாக்கெடுப்புக்கும் விடப்படும் நாள்களில் நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காமல்(கீழ் வகுப்பு மாணவர்கள் போன்று 'கட்' அடிப்பது) விடுவதே அவர் போட்டிருக்கும் திட்டம் என்று ஊகிக்கலாம்.

இங்கே, தலைமை ஆசிரியரின் அறைக்குள் சென்று, தம்மை மன் னிக்குமாறு இரந்தும், கெஞ்சியும் கேட்டு - முன்கூட்டியே அனுமதி பெற்று - நாடாளுமன்றத்துக்குச் சமுகமளிக்காமல், விடும் உத்தியே வாசுதேவாவினதும் ஏனைய இடதுசாரிகளினதும் உத்தி என்று ஊகிக்கலாம்.

தங்களின் ஒளித்து விளையாடும், ஏகந்த நிலை அரசியலை விளங்கிக்கொள்ள முடியாத அளவுக்கு, இந்த ஐவருக்கும் வாக்களித்த பொதுமக்களை 'கேணையன்கள்' என்று வாசு தேவா நினைக்கிறாரோ, என்னவோ...?

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீட்டுவது போன்று நாடாளுமன்றத்தின் ஆட்சிக்காலத்தையும் அதிகரிக்கும் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு அரசுக்கு அதிகாரம் அளிக்குமாறு ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி, தாமும் ஒரே தடவையில் பன்னிரண்டு வருடங்களுக்கு சபை ஆசனங்களுக்குச் சூடேற்றலாம் என்று இந்த இடதுசாரிகள் ஆலோசனை கூறி, அதனை நடைமுறைப்படுத்தச் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.......!

மக்கள் நலன், நாட்டின் நலன். முதலாளித்துவத்தை இல்லாதொழிப்பது, சமத்துவத்தைக் கட்டி எழுப்புவது என்ற கொள்கைகளையும் கோட்பாடுகளையும் துவம்சம் செய்து தூக்கி எறிந்துவிட்டு, தத்தமது சொந்த நலன்களையும் வளங்களையும் வளர்த்துக் கொள்ளும் போக்கிரித்தனம் கொண்ட புதுவகைப் பொதுவுடைமை அல்லது சோஷலிசம் என்று புதிய சித்தாந்தம் ஒன்றை வாசுதேவா உட்பட்ட ஐவரும் உருவாக்குவோம் என்று கங்கணம் கட்டிவிட்டார்கள் போலும்!

மக்கள் சொல்லுக்கு அரசியல்வாதிகள் மதிப்பளித்து தமது வாக்காளரின் மேம்பாட்டுக்காகக் கோஷம் போட்ட காலம் மாறிவிட்டது. இது நவயுகம், அரசியல்வாதிகள் தமது உயர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் செயற்படுவதே புதிய பொதுவுடைமை என்றும் ஐவரும் இணைந்து புதிய அத்தியாயம் எழுதப் பரணி பாடப் புறப்பட்டுவிட்டார்களோ.....?

ஐயோ, பொதுசனமே! நீ என் செய்வாய்? முதலாளித்துவத்தை விஞ்சிய 'புதிய பொதுவுடைமை'யை நீ ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லையே இந்த நாட்டில்? விதியை நொந்து கொள்வதைவிட உன்னால் என்ன செய்யமுடியும்? சர்வாதிகாரத்துக்கும் புதிய பொதுவுடைமைக்கும் முன்னால் நீ தான் என் செய்வாய்?

# ரூ.30 லட்சம் பெறுமதியான 147 பவுண் நகை, பணம் கைத்தொலை பேசிகள் ஆயுத முனையில் கொள்ளை

## நல்லூர் சங்கிலியன் வீதிப் பகுதியில் சம்பவம்

வலி.வடக்கு, ஓக. 31

அதிகாலை வேளை வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்தவர்களை கத்தி முனையில் அச்சுறுத்தி சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதி கொண்ட 147 பவுண் தங்க நகைகள், பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

நல்லூர் கொடியேற்றத் திருவிழா அன்று நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள வீடொன்றில் இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

அதிகாலை 2 மணியளவில் வீட்டின் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள் நால்வர் வாள்களைக் காட்டி வீட்டில் இருந்தவர்களைக் கடுமையாக அச்சுறுத்தி அவர்களை அறையொன்றில் வைத்துப் பூட்டியுள்ளனர்.

அதன்பின் நல்லூர் ஆலய உற்சவத்தில் கலந்துகொள்வதற்காக அந்த வீட்டில் கொழும்பில் இருந்து வந்து தங்கிநின்ற மூன்று குடும்பப் பெண்களின் தாலிக்கொடிகள் உட்பட சங்கிலிகள், காப்புகள், மோதிரங்கள் என சுமார் 147 பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டதுடன் 16 ஆயிரம் ரூபா பணம், நான்கு கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

வீட்டு அறையில் பூட்டி வைக்கப்பட்டவர்கள் கூக்குரலிட்ட போதும் அயலவர்கள் எவரும் அங்கு செல்லவில்லை என்று கூறப்பட்டது.

கொள்ளையர்கள் தாங்களாகவே வீட்டிலிருந்த மின்குமிழ்களை ஒளிரவிட்டபின்னர் துணிகளை எடுத்து முகத்தை மூடிக் கட்டி மிகவும் ஆறுதலாகவும் நிதானமாகவும் இந்தக் கொள்ளையை மேற்கொண்டதாகக் கூறப்பட்டது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வீட்டுஉரிமையாளர் முறையிட்டதைத் தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (த-86)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கையால் வீதிகளில் குவியும் கழிவுப் பொருள்கள்

## உடன் அகற்றி உதவுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக 31

டெங்குநோயைக் கட்டுப்படுத்தும் வகையில் அகற்றப்படும் கழிவுப் பொருள்கள் பொதுமக்களினால் வீதிகளில் போடப்பட்டு வருகின்றன. இதனால் வீதிகள் அசுத்தமடைவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுன்னாகம் இராணுவ முகாமுக்குப் பின்னால் உள்ள வீதியொன்றில் முக்கிய சந்தியில் குப்பைகள், கழிவுகள் பொது மக்களினால் போடப்பட்டு பல நாள்களாகியும் அவை இதுவரை அகற்றப்படவில்லை.

வீதியோரத்தில் கொட்டப்பட்டுள்ள கழிவினால் பொதுமக்கள் போக்கு வரத்துச் செய்ய முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது. அத்துடன் பழைய தகரங்கள், இரும்புப் பொருள்கள் ஆகியவையும் அதில் உள்ளமை யால் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

வீட்டில் உள்ள கழிவுப் பொருள்களை வீதியில் போட்டாலும் அவற்றில் நீர் தேங்கி நுளம்பு பெருக வாய்ப்புகள் காணப்படுவதினால் கழிவுப் பொருள்களை உடன் அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-86)

# பொதுமக்கள் சுகாதாரக் காப்புறுதித் திட்டம் நாடாளுமன்றில் அடுத்தவருடம் தாக்கலாகும்

## கிராமிய மக்களுக்குப் பேருதவியாக இருக்கும் என நம்பிக்கை

கொழும்பு, ஓக. 31

பொதுமக்கள் சுகாதாரக் காப்புறுதித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார். சாதாரன கிராமிய மக்களுக்குப் பெரும் பயனளிக்கவல்ல இத்திட்டம் அடுத்த ஆண்டு நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு முன்வைக்கப்பட இருப்பதாகஅமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

உத்தேச மக்கள் சுகாதாரத் திட்டம் தொடர்பாக பொதுமக்கள் பொது நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள் தங்கள் கருத்துக்களை, திட்டங்களை மற்றும் கொள்கை விளக்கங்களை அமைச்சுக்கு அனுப்பிவைக்கலாம், அவைகளை ஆராய்ந்து பொதுமக்கள் பயனுறும் வகையில் திட்டம் உருவாக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இத்திட்டம் சாதாரண ஏழை பொது மக்களுக்கு பேருதவியாக இருக்கும் என்பதுபோக அவர்கள் தனியார் மருத்துவ மனைகளில் வைத்திய உதவிகள் பெற்றுக்கொள்ளவும் அனுசரணையாக இருக்கும் என்றார். காப்புறுதி செய்து கொள்ளும் மக்கள் விசேட மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ளும்போது இது மிகவும் உதவியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

கிராமிய மக்கள் விசேட வைத்திய சிகிச்சைகளுக்கு தனியார் வைத்திய சாலைகளுக்கோ தள வைத்தியசாலைகளுக்கோ செல்வதற்கு அதிக பணம் செலவாகும் என்று அஞ்சுகின்றார்கள். இதனால் முக்கிய நோய்களை ஆரம்ப நிலையிலேயே அடையாளம் காண்பது கஷ்டமாக இருந்து வருகின்றது. இதனால் பலர் மரணங்களை எதிர்கொள்ளவும் நேர்கிறது என்று கூறிய அப்பேச்சாளர் உத்தேச திட்டம் ஏழை மக்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்றார்.

ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், நெதர்லாந்து, ஐக்கியராஜ்யம், அமெரிக்கா மற்றும் ஜேர்மனி போன்ற நாடுகளில் பொதுமக்கள் சுகாதாரக் காப்புறுதித் திட்டம் நடைமுறையில் இருந்து வருகின்றது. (ப)

# பொதுநூலகத்தின் சிறுவர் பகுதியை நவீன மயப்படுத்துவது குறித்து ஆராய்வு

## சிங்கப்பூரில் இருந்து வந்த குழுவினர் மேற்கொள்கின்றனர்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்ப்பாணம் பொதுநூலகத்தின் சிறுவர் பகுதியை நவீன மயப்படுத்துவது குறித்து சிங்கப்பூரில் இருந்து நேற்று வருகைதந்துள்ள குழுவினர் ஆராய்வினை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து ஆராய்வினை மேற்கொள்வதற்கு சிங்கப்பூர் தேசிய நிறுவக முகாமையாளர் வின், உதவி முகாமையாளர் பெக். சிங்கப்பூர் தேசிய நூலக உறுப்பினர் அட்ஜிட், சிரேஷ்ட நூலகர் ஆகியோரே வருகை தந்துள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்றது.

இதில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர சபை மேயர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

யாழ்.பொது நூலகத்தின் சிறுவர் பகுதியை மூன்று மாத காலப்பகுதிக்குள் நவீன மயப்படுத்துவது குறித்து இதில் விரிவாக ஆராயப்பட்டது.

இது தொடர்பான திட்டவரைவு ஒன்றைத் தயாரிப்பதற்கு 3 நாள்களுக்குத் தாம் இங்கு தங்கியிருக்கவுள்ளதாக சிங்கப்பூரில் இருந்து வருகை தந்துள்ள குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பாடசாலைகளில் உள்ள நூலகங்களை அபிவிருத்தி செய்வது குறித்து யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் அவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார். (த)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி 16 | : 01.09.2010 |
| | : புதன்கிழமை |
| திதி | : ஸப்தமி |
| | காலை 06.48 வரை |
| நட்சத்திரம் | : கார்த்திகை |
| | மு.ப 10.17 வரை |
| சுபநேரம் | : 04.45 - 06.05 |
| ராகுகாலம் | : 12.05 - 01.35 |

# நல்லை வந்தார் நாவலர்

நல்லையில் இருந்த வண்ணம்
நாநிலம் வியந்து போற்ற
எல்லையில் சமயத் தொண்டை
எந்நாளுமே செய்த மேலோய்
பொல்லாத காலம் போலும்
போயினை நல்லை விட்டு
நல்ல உன் சமயத் தொண்டை
நாநிலம் வியக்கும் வண்ணம்
மெல்லவே நல்லூர் கோயிலண்டை
மீண்டும் நீ இருக்கை கொள்ளும்
செய்தி கேட்ட பின்னர்
சோர்வுற்ற தொண்டர் எல்லாம்
எல்லாமே விதியின் சேட்டை யென
இயம்பியே மகிழ்ச்சி உற்றார்
நல்லை நகர் நாதா உன்னை
நாணியே வரவேற்கின்றோம்
கல் நெஞ்சையும் உருக வைத்து
காலத்தை வென்றாய் வாழி!



விகடகவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை



கொச்சிக்கடை ரூபிகா ஓடுகள் உற்பத்தி நிலையத் தினால் உற்பத்தி செய்யப்படும் நந்தி ஓடுகளின் பெயரினை ஒத்த வேறு சில 'நந்தி' ரக ஓடுகள் சந்தையில் விற்பனை செய்யப்படுவதால் நந்தி ஓடுகள் கொள் வனவு செய்யும்போது 0312277346 தொலை பேசி இலக்கம் ஓடுகளில் பொறிக்கப்பட்டுள்ளதா எனப் பார்த்து கொள்வனவு செய்யவும் 0312258174 தொலைபேசி இலக்கம் பொறித்து விற்பனை செய்யப்படும் ஓடுகள் எமது நிலைய உற்பத்தி அல்ல என்பதை பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

(சி-570464) - நிர்வாகத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
02.10.1937

மறைவு
23.08.2008

திதி
(31.08.2010)

### திருமதி சரோஜினிதேவி நவரட்ணம்

இரண்டு ஆண்டுகள் ஆனால் என்ன அம்மா உங்கள் அன்பினையும்
அரவணைப்பினையும் இனி என்று காண்போமோ...
வாழ்கையின் ஆயிரம் அர்த்தங்கள்
புரியவைத்த நீங்கள் இன்று நாம் வாழும் வாழ்வைக் காண இல்லையே!
என்றும் எம் மனதைவிட்டு அகலாது ஆறாத்துயருடன் உங்கள்
ஆத்ம சாந்திக்காய் என்றும் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வம் மெக்கானிக்,
இணுவில் மேற்கு,இணுவில்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

(சி/570467)

## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

HERO HONDA Supper Splender NP VP XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் புதியது 900Km ஓடியது உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777303003

## காணி விற்பனை

முஸ்லிம் கல்லூரி வீதி, கற்குள லேன், கொட்டடி, யாழ்ப்பாணம் என்னும் இடத் தில் 1½ பரப்புக் காணியில் அமைந் துள்ள வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0778445549

## வேலையாள்கள் தேவை

நவாலி றோட், ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள எமது நிறுவனத்திற்கு பின்வரும் தொழிலாளர்கள் தேவைப் படுகிறார்கள். (அருகில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது).

★அனுபவமுள்ள மேசன்
★பைவர்கிளாஸ் அச்சுவேலை செய்பவர்
★மின்சார வேலை தெரிந்தவர்

தொடர்பு: 0212255090

A/L மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் ஆரம்பம்

**Course Details**

- Diploma In Ms Office - 2 Months -2000/=
- Diploma In DTP - 2 Months -3000/=
- Diploma In Hardware - 2 Months -3000/=
- Diploma In Web Design - 3 Months -3000/=
- Graphic Design -3000/=
- Internet & E-mail - 2 Weeks -1200/=
- Computerized Accounting -3Months- 3000/=

162, Main Street, Jaffna.
TP: 021-222 1417
Sky Computers (Pvt) Ltd
Today You Learn Tomorrow You Lead.

## மாடி வீடு விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் வீதி,
ஆசீர்வாதம் லேன் இல்
சகல வசதிகளுடன்
கூடிய மாடி வீடு
விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0789148913

## மரண அறிவித்தல்

### திருமதி ருக்மணிதேவி சுப்பிரமணியம்



சாரையடி புலோலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ருக்மணி தேவி சுப்பிரமணியம் கடந்த சனிக்கிழமை (28.08.2010இல்) இயற்கையெய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நல்லபிள்ளையின் (இராசம்மா) அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - தங்கரட்ணம் தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் முத்துலக்ஷ்மி (லண்டன்), சிவபாலன் (லண்டன்), கிருஸ்ணராசா (லண்டன்) பாலஸ்கந்தராசா, காலஞ்சென்றவர்களான இந்திரா, யோகராணி, சிவகுலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பார்த்தீபன் பொறியியல் பீட மாணவன் (மலேசியா), பிரதீபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் லீலாவதி, காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, சரசீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.09.2010) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 9 மணியளவில் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சாரையடி,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(98249)

புதிய பிரிவில் இணைந்து . . . . .

## நீங்களும் கணினிப்பட்டதாரியாகலாம்!

Level I Diploma in Computer Science
Level II Adv. Diploma in Computer Science
Level III B.Sc. in Computer Science
Duration: 2 -2 1/2 Years Qualification: O/L or A/L or HND

North Lanka IIT Graduates



16th July 2010 @ BMICH Colombo

New Batch Starts On 01-09-2010

Diploma in Multimedia with IT
Duration: 01 Year Qualification: O/L

**NORTH LANKA IIT (Pvt.) Ltd.**
#113, Laxan Plaza, Navalar Road, Jaffna.
Phone: 0213214305

## இந்தியாவில் இருந்து வருகைதந்த கலைமாமணி பூஷணி கல்யாணராமன் அவர்களின்

## இசைக்கச்சேரியும் இசைப் பயிற்சிப் பட்டறையும்

**இசைக் கச்சேரி**
**காலம்:** *01.09.2010 (புதன்கிழமை) பி.ப. 2.30மணி*
**இடம் :** *கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.*

**இசைப் பயிற்சிப் பட்டறை**
**காலம் :** *02.09.2010 (வியாழன்) மு.ப. 9.30 மணி*
**இடம் :** *இராமநாதன் நுண்கலைப் பீடம், மருதனார்மடம்.*

*இசை ஆர்வலர்கள் மற்றும் இசைத்துறை சார்ந்தோர் அனைவரையும் குறித்த இரு நிகழ்வுகளிலும் தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.*

*அனுமதி இலவசம்*

**யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம்**
**யாழ்.பல்கலைக்கழகம்**

*அனுசரணை:*
**ஐங்கரன் மோட்டோர்ஸ்,** *மானிப்பாய்.*
**ரமீனா ரவல்ஸ்,** *உரும்பிராய்.*
**சுந்தர்ஸன்,** *மானிப்பாய்.*

*(102697)*

## சைவப் புலவர் சங்கத்தின் பொன்விழா போட்டி

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் பொன் விழாவையொட்டி நடத்தப்படும் போட்டிகள் எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தவறாது கலந்துகொள்ளுமாறு சைவப் புலவர் சங்கத்தின் செயலாளர் செ. கந்தசத்தியதாசன் கேட்டுள்ளார். (ஒ-9)

## PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT)LTD

நம்ப முடியாத விலைகள்!!!
என்றும் எதிர்பாராத அதிரடி விலைக் கழிவு
(10 நாட்கள் மட்டுமே)



**PCST 1** — Intel Dual Core 2.7Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 1GB Ram, DVD Writer,Atx Casing, 19' LCD Monitor, DCP UPS,Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 47250/=



**PCST 2** — Intel Dual Core 2.7Ghz, Intel Chipset Mother Board, 500GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer,Atx Casing, 19' LCD Monitor, 650VA UPS,Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 50750/=



**PCST 3** — Intel Dual Core 2.8Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 1GB Ram, DVD Writer,Atx Casing, 19' LCD Monitor, DCP UPS,Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 47800/=



**PCST 4** — Intel Dual Core 2.8Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer,Atx Casing, 19' LCD Monitor, DCP UPS,Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 51250/=



**PCST 5** — Intel Core 2 Dou 2.93Ghz, Intel G41 Mother Board, 500GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer,Atx Casing, 19' LCD Monitor, 650VA UPS,Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 59000/=

Dialog
எல்லையற்ற இணையம்
மாதாந்தம் 690/= மட்டுமே!
3.5 Mbps High Speed
Broadband Available

| | | | |
|---|---|---|---|
| Dongle 7.2mMbps | -6300/= | Router Single Port D.Link | -5000/= |
| Web cam | -1100/= | Prolink Net Book | -44000/= |
| UPS DCP | -4300/= | Printer HP 1102 Laserjet | -15800/= |
| UPS Prolink | -4500/= | Printer HP Inkjet 1660 | -4750/= |
| Keyboard | -600/= | Printer Epson Inkjet T10 | -4900/= |
| Mouse | -400/= | | |
| Headphone | -850/= | | |

PROLINK Atom Netbook — 1 Year Warranty




விசேட விலைக்கழிவு
44000/= மட்டுமே!

M.M.V Road,Nelliady.
T.P: 021 226 4999

305, Kasthuriyar Road, Jaffna.
T.P: 021 222 1101,021 222 9644
E.Mail: pcsjaffna@sltnet.lk

No:5,Kanakapuram Road,Kilinochchi.
T.P: 021 228 5360





ரூ.5000/- போன்ற சிறுதொகையில்
இப்போது உங்களுக்குமொரு நடைமுறைக்கணக்கு

யூனியன் வங்கியின் ATM அட்டையும் இலவசம்

உங்கள் வாழ்க்கைக்கு மேலும் மேலும் வசதி செய்தவண்ணம் யூனியன் வங்கி இப்போது உங்களுக்கென தனிப்பட்ட நடைமுறைக்கணக்கொன்றை அறிமுகம் செய்கிறது.

யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்குக் காசோலைப் புத்தகம் இருக்கும்போது உங்கள் பணக்கொடுப்பனவு விடயங்களை மிக இலகுவாகச் செய்துகொள்ள முடிவதோடு, செலவுகள் குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தவும் முடியும். யூனியன் வங்கியின் Easy Plus நடைமுறைக்கணக்கு உங்களது அன்றாடப் பணக்கொடுக்கல் முகாமைத்துவத்துக்கோர் அரிய வழி.

UNION BANK

15A, அல்பிரட் பிளேஸ், கொழும்பு-03. தொலைபேசி : 011 2370870 www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாநாகராட்சிமன்ற சைவசமய விவகாரக் குழுவின் 'நல்லைக்குமரன்' மலர் வெளியீட்டு விழாவும், 'மகர யாழ்' விருது வழங்கும் வைபவமும் நேற்று நாவலர் மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.மாநகர ஆணையாளரும் சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ, நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் ஆகியோர் உரையாற்றுவதை முதல் இரண்டு படங்களிலும், அமரர் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஏகாந்த நிலையில் வழங்கப்பட்ட சிறந்த சேவயாளருக்கான 'மகர யாழ்' விருது துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜாவிடமிருந்து பெற்றுக்கொள்வதை மூன்றாவது படத்திலும், நிகழ்வில்

*(படங்கள்: லக்ஸ்மன்)*

# 243 குடும்பங்களைச் சேர்ந்த 3,400 பேர் வலி.மேற்கின் 7 நலன்புரி நிலையங்களில்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,ஓக.31

வலி.மேற்கில் 243 குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 400 பேர் 7 நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இக் குடும்பங்கள் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையால் இடம் பெயர்ந்தவர்கள். இவர்கள் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு கஷ்டங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச செயலர் திருமதி தே.பாபு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரதேச நிலைமை தொடர்பாக எடுத்துரைக்கையில் விவரித்தார்.

வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்.மாவட்ட அரச நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்ட பிரதேச செயலர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எமது பிரதேசம் 15 ஆயிரத்து 567 நிரந்தர குடும்பங்களைக் கொண்ட பரந்த பிரதேசம்.

இங்கு தற்போது வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்த ஆயிரத்து 327 குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் வழங்கப்படுகின்றது.

இலகு வேலைத்திட்டத்தின் கீழ் 3 ஆயிரத்து 722 குடும்பங்கள் பயனடைகின்றன என்றார். இக்கூட்டத்தில் கலந்துகொண்ட மின்சார சபை பொறியியலாளர் தெரிவிக்கையில்:

வலி.மேற்கு பிரதேசத்திற்கு மட்டும் 39 மெகாவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. ஆனால் 37.5 மொவாட் மின்சாரம் மட்டுமே கிடைக்கின்றது என்றார்.

இதற்குப் பதிலளித்துப் பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் குறிப்பிடுகையில்:

ஜனாதிபதியின் திட்டத்தின் கீழ் அனைவருக்கும் மின்சாரம் கிடைக்க வேண்டும். இதுவரை மின்சாரம் கிடைக்காத பிரதேசங்களை வகைப்படுத்தி மின்சார சபைக்கு வழங்கிவிட்டு அதன் பட்டியலை என்னிடம் வழங்குங்கள். நான் அதற்கான முழு நடவடிக்கையையும் எடுப்பேன் -என்றார். (த-302)

# குறிகாட்டுவான்-நயினாதீவு இடையே கூடுதலான படகுகள் சேவையில்

யாழ்ப்பாணம்,ஓக.31

குறிக்காட்டுவானுக்கும் நயினாதீவு துறைக்கும் இடையில் இந்த வாரத்தில் கூடுதலான பயணிகள் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சுற்றுலாப் பயணிகளின் வருகை .அதிகரித்ததை அடுத்து மேலதிக படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தினமும் 24 படகுகள் பயணிகளை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

படகுகளில் பயணம் மேற்கொள்ளும் பயணிகளின் பாதுகாப்புக் கருதி பாதுகாப்பு அங்கிகளும் வழங்கப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு 24 படகுகள் சேவையில் ஈடுபடுவதோடு மொத்தமாக 48 படகுகள் சேவைக்கென தயார் நிலையில் உள்ளதாகவும் கூறப்பட்டது. (த-26)

# தொழில் வங்கியில் பதிவு செய்க

கோப்பாய்,ஓக.31

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளைப் பிரதேச செயலக தொழில் வங்கியில் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னதாகப் பதிவு செய்யுமாறு கோப்பாய் பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

அடையாள அட்டை, குடும்ப அட்டை, கல்விச் சான்றிதழ், தொழிற் சான்றிதழ் போன்ற ஆவணங்களை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-72)

# கழிவுப் பொருள்கள் கொள்கலன் விநியோகம்

கோப்பாய்,ஓக.31

கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கான கழிவுப் பொருள் கொள்கலன் விநியோகம் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.கல்வி வலயத்தில் இடம் பெறவுள்ளது.

பெற்றுக்கொள்ளவரும்போது பொது பதிவேட்டு பத்திரத்துடன் வருகை தருமாறு கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எல்.சித்திரவடிவேல் கேட்டுள்ளார். (த-72)




# சொந்த இடத்துக்கு நாவலர்



யாழ்ப்பாணம்,ஓக.31

கடந்த 25 வருடங்களாக யாழ்.மாநகர சபையின் நாவலர் கலாசார மண்டபத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டிருந்த ஆறுமுக நாவலரின் திருஉருவச்சிலை இன்று செவ்வாய்க்கிழமை மீண்டும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்திற்கு இடம்மாற்றப்படுகிறது.

நேற்றுவரை நாவலர் கலாசார மண்டபத்தில் குடியிருந்த நாவலர் பெருமான் இன்று அவரது சொந்த இடத்துக்கு திரும்ப

முன்னர் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று எடுக்கப்பட்ட படம் இது. மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ நாவலர் சிலையைப் பார்வையிடுகிறார். (த-7)

# கைத்தொழில் முயற்சியாளர் பதிவுகளை மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம்,ஓக.31

பிரதேச செயலகங்களில் உள்ள தொழில் துறைத் திணைக்கள நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்களிடம் கைத்தொழில் பயிற்சி பெற விரும்புபவர்களும், கைத்தொழில் கடன்பெற விரும்புபவர்களும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என மாவட்ட செயலக, தொழில்துறை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம், நல்லூர், உடுவில், தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, காரைநகர், உர்காவற்றுறை, கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, மருதங்கேணி ஆகிய 13 பிரதேச செயலகங்களில் கைத்தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காகத் தொழில் முயற்சியாளர் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்வதன் மூலம் முயற்சியாளர்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-310-311-313)

# ஒருங்கிணைப்புக் கூட்டம் பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.31

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவிருந்த நல்லூர் செயலகப் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் எதிர்வரும் 2 ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப.2.30 மணிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நடைபெறும் என நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் அறிவித்துள்ளார். (த-7)

# டெங்கு விழிப்புணர்வை வலியுறுத்தி நேற்று வடமராட்சியில் பேரணி

பருத்தித்துறை,ஓக.31

பருத்தித்துறை பிரதேச செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பருத்தித்துறை பொலிஸார் மற்றும் படையினர் இணைந்து பருத்தித்துறையில் நேற்று நடத்திய டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், அரச திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொலிஸார் உட்பட 500 இற்கு அதிகமானோர் கலந்துகொண்டனர்.

காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலையத்தில் வைத்து பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆரம்பித்து வைத்து தலைமை தாங்கினார் பேரணியில் பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன் சகிதம் முன்னேசெல்ல மாணவர்கள், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியவாறும் "டெங்கை ஒழிப்போம்" எனக் கோசமிட்டவாறும் பின்னே சென்றனர். பேரணிக்கு முன்னால் பருத்தித்துறை பொலிஸார், சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ஒலிபெருக்கி வாகனங்கள் டெங்கு ஒழிப்பு சம்பந்தமான விடயங்களை ஒலி பரப்பிக்கொண்டு சென்றன.

பேரணி யாழ்ப்பாணம் வீதி வழியாக மந்திகை சிலையடியை அடைந்து அங்கிருந்து சாவகச்சேரிவீதி, ஆஸ்பத்திரிவீதி வழியாக மீண்டும் யாழ்ப்பாண வீதி வழியாக இரண்டு மைல் தூரத்தில் உள்ள மந்திகையில் உள்ள பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தை பகல் 11 மணிக்கு சென்றடைந்து முடிவுக்கு வந்தது. பேரணி முடிவில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் கலந்துகொண்டோருக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார்.

பேரணி ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலர் பேசுகையில் உயிர் கொல்லி நோயான டெங்கைக் கட்டுப்படுத்த தடுக்க முற்றாக ஒழிக்க முடியும். இதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படவேண்டும் நாம் வாழும் சுற்றுச் சூழல்களை எந்நேரமும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதுவே டெங்கு நோயை ஒழிப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாகும் எனக் கூறினார். (த-236-190)

# சிவத் தமிழ்ச் செல்விக்கு நேற்று 'மகர யாழ்' விருது வழங்கிக் கௌரவம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.மாநகராட்சிமன்ற சைவசமய விவகாரக் குழுவின் நல்லூர் கந்தசுவாமி கோயில் உற்சவத்தை முன்னிட்டு ஆண்டு தோறும் வெளியிடப்படும் நல்லைக் குமரன் மலரின் 18 ஆவது வெளியீட்டு விழா நேற்று திங்கட்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவருமான மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு சைவத்துக்கும் தமிழுக்கும் சமூக சேவைக்கும் தொண்டாற்றிய அமரர் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஏகாந்த நிலையில் வழங்கிய 'மகர யாழ்' விருதை துர்க்காதேவி தேவஸ்தானத்தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனிடம் கையளித்தார்.

நல்லைக்குமரன் 18 ஆவது மலரை நூலாசிரியர் ந.விஜயசுந்தரத்திடமிருந்து தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான உறுப்பினர் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் கொழும்பு ராமகிருஷ்ணமிஷன் பீடாதிபதி ஸ்ரீமத் சர்வானந்தமகாராஜ், செயலாளர் இ.இரத்தினசிங்கம், பேராசிரியர் ச.சத்தியசீலன், து.சோமசுந்தரம் ஆகியோர் உரையாற்றினார்கள். செல்வி தனசொரூபி நவரத்தினத்தின் பண்ணிசையும் நடைபெற்றது. (த-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறான இலக்கும்

அரசமைப்பில் மாற்றம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் முயற்சி எதிர்பார்க்கும் அளவுக்கு சாதகமாக அமைவது சிரமமொன்றான தாக இருக்கப்போகிறது என விமர்சிக்க முயலும் வகையிலானது இக் கட்டுரை.

'லங்காதீப' சிங்கள மொழிப் பத்திரிகையில் வாராவாரம் வியாழக்கிழமை களில் வெளியாகும் வியாழன் அலசல் கட்டுரைத் தொடரில் கடந்த 26 ஆம் திகதி வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது.

சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் ஐ.தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவைச் சந்தித்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நிறைவேற்று ஜனாதி பதி முறைமைக்குப் பதிலாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் பதவி நடை முறை கொண்ட அரசமைப்பொன்றை அறிமுகம் செய்வது தொடர்பாக உறுதி வழங்கியிருந்தமை குறித்து நாமறிவோம். ஆனால் அத்தகைய தமது உறுதிமொழியை முற்றுமுழுதாக மறந்து விட்டவர் போன்று இவ்வாரம் அதே ஐ.தே.கட்சி பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்தபோது ''நான் 2017 ஆம் ஆண்டில் இடம்பெறவேண்டியுள்ள ஜனா திபதித் தேர்தலிலும் மூன்றாவது தடவை யாகவும் போட்டியிடவுள்ளேன். அதற்குத் தேவைப்படும் அரசமைப்பு விதி மாற்றங் களைக் கொண்டு வந்து நிறைவேற்ற வுள்ளேன்'' எனப் நெஞ்சை நிமிர்த் திக் கொண்டே தெரிவித்துள்ளார்.

அதேசமயம், சந்திரிகாவின் தலை மையிலான கூட்டு முன்னணி அரசு பதவியிலிருந்த சமயம் 2000ஆம் ஆண்டில் - சந்திரிகாவால் நாட்டின் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக முன்வைக்கப்பட்ட தீர்வுப் பொதி யோசனைக்கு எதிராக நாட்டுப் பற் றாளர் அமைப்பு தீவிரமாகச் செயற் பட விழைந்தது. குறிப்பிட்ட அத்தீர் வுப் பொதித் திட்டம் அரசில் அங்கம் வகித்த பேராசியர் ஜீ.எல்.பீரிஸினால் தயா ரிக்கப்பட்டதொன்றாகும். ஆனால் அத் திட்டத்தைத் தீவிரமாக எதிர்த்த தரப்பினர் களின் அணியில் மஹிந்த ராஜபக்ஷ முக் கிய இடம் வகித்தார். அத்தகைய தீவிர எதிர்ப்பாளர்கள் தரப்பின் முக்கியஸ்தர்க ளாக அவ்வேளை செயற்பட்ட எஸ்.எல். குணசேகர மற்றும் ஹோமின் தயாசிறி போன்றோர் மஹிந்த ராஜபக்ஷவின் நிறை வேற்று அதிகாரம் கொண்ட பிரதமர் நடை முறைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி யுள்ள இன்றைய அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதி இந்த அரசமைப்பில் மாற்றம் செய்யும் தமது திட்டத்தை முன்னெடுத் துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை 1989 முதல் 1994 வரையான காலகட்டத்தில் எதிர ணிக்குள்ளே முன்னணித் தலைவராக ஆக் குவதில் முன்னின்றுழைத்த வாசுதேவ நாணயக்கார அண்மையில் இடதுசாரி அரசியல்வாதி ஒருவரது நூல் வெளி யீட்டு வைபவத்தில் கருத்து வெளியிட்ட போது இன்று இந்த நாடு 1980களில் இருந் தமை போன்றதொரு ஆபத்தின் விளிம் பில் நிற்பதாகக் கூறி மஹிந்த ராஜபக்ஷ வின் தலைமையிலான இன்றைய அரசின் போக்கைக் கண்டித்து விமர்சித்துள்ளார்.

உண்மையில் மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் தாம் போட்டியிடத் தக்க வகையில் அரசமைப்பில் திருத்தம் மேற்கொள்ளும் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் திட்டத்தை வாசுதேவ நாண யக்கார முற்று முழுதாக எதிர்க்கிறார். அத் தகைய அரசமைப்புத் திருத்தத்துக்கு அரச கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவைத் திரட்டுவதற்காக நடாத்தப்பட்ட கூட்டத்திலும் அவர் தமது இக்கருத்தை வலியுறுத்திக் கூறியுள்ளார். வாசுதேவ நாணயக்கார மட்டுமல்லாது சமசமாஜ மற் றும் கம்யூனிஸ்ட் கட்சிகளைச் சேர்ந்த இடதுசாரித் தலைவர்களான பேராசிரியர் திஸ்ஸ விதாரண மற்றும் டியூ குணசேகர ஆகியோரும் மஹிந்தவின் அரசமைப்புத் திருத்தத் திட்டத்தை எதிர்க்கின்றனர். இவர் களது எதிர்ப்பைக் கணக்கில் எடுக்காது ஜனாதிபதி அரசமைப்பில் திருத்தம் மேற் கொள்ளும் தமது திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியே தீருவேனெ சூளுரைத்து வரும் நிலையிலேயே வாசுதேவ நாணயக் கார குறிப்பிட்ட நூல் வெளியீட்டு நிகழ் வில் வைத்து இந்த நாடு ஆபத்தின் விளிம் பில் நிற்பதாகக் கூறி ஜனாதிபதிக்கு அபாய அறிவிப்பொன்றை விடுத்துள்ளார். இதன் மூலம் சிறிதுங்க, திஸ்ஸ விதாரண, மற்றும் டியூகுணசேகர போன்ற இடதுசா ரித் தலைவர்களை ஒன்று திரட்டி அரச மைப்பில் மாற்றம் மேற்கொள்ளும் ஜனாதி பதியின் திட்டத்துக்கு எதிராக தம்மால் இடது சாரிகள் முன்னணியொன்றை உருவாக்க இயலுமெனக் கூறாமல் கூறியுள்ளார். அத் தகைய முன்னணியில் பழைய இடதுசாரித் தரப்பினரையும் இணைத்துக்கொள்ள பேச்சுவார்த்தைகள் கூட ஆரம்பிக்கப்பட் டிருப்பதை ஜனாதிபதி மஹிந்த அறியாதி ருக்க முடியாது. அவ்வித பேச்சுவார்த்தை வெற்றியளிக்குமானால் அது வெறும் இடது சாரிகள் முன்னணி என்றல்லாது அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்குமொரு இடதுசாரி முன்னணியாக அமையும்.

1994 ஆம் ஆண்டு முதல் 2005ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தில் சுதந் திரக் கட்சியின் தலைமையிலான அரசுக் குள் மஹிந்த ராஜபக்ஷவை முன்னிலைக்


மஹிந்த ராஜபக்ஷ


வாசுதேவ நாணயக்கார


எஸ்.எல்.குணசேகர


ஹோமின் தயாசிறி

குக் கொண்டுவரக் கடும் பிரயத்தனம் மேற்கொண்ட நாட்டுப்பற்றாளர் தரப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திய எஸ்.எல்.குண சேகர மற்றும் ஹோமின் தயாசிறி போன்ற புத்திஜீவிகள் இன்று மஹிந்த ராஜபக்ஷ வின் தலைமையிலான இன்றைய அரசின் போக்கைக் கடுமையாக விமர்சித்து வரு கின்றனர்.

அண்மையில் தாம் கலந்துகொண்ட சட்டம் தொடர்பான மாநாடொன்றில் வைத்து இந்த நாடு அராஜகப் பாதையில் பயணிப்பததாக எஸ்.எல்.குணசேகர கருத்து வெளியிட்டிருந்தார். ஐ.நா.சபை அலுவல கத்துக்கு முன்பாக விமல் வீரவன்ஸ ஆர்ப்

## தலைதூக்கும் எதிர்ப்பும்

பாட்டம் மேற்கொண்ட சமயம் விமல் வீர வன்ஸ தொடர்பாக ஒருவித சட்டமும், ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத், முன்னாள் இராணுவத் தள பதி சரத்பொன்சேகாவை சிறையிலிருந்து விடுவிக்கக் கோரி காலி நகரத்தில் மேற் கொண்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக பிறி தொரு வகையான சட்டமும் கடைக்கொள் ளப்பட இயலாதெனவும் அவர் குற்றம் சாட்டினார். அது மட்டுமல்லாது முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட பௌத்த பிக்குமார் மீது பொலிஸார் தடிய டிப் பிரயோகம் மேற்கொண்டமை குறித் தும் அவர் அரசை விமர்சித்துக் கருத்து வெளியிட்டிருந்தார்.

**சிங்கள மூலம்:**
**உபுல் யோசெப் பெர்னாண்டோ**

இதே விதத்தில் ஹோமின் தயாசிறி கூட பல தடைவைகள் அரசு ராஜதந்திர செயற்பாடுகளில் தவறான போக்கைக் கைக்கொண்டமை குறித்து அரசைக் கண் டித்துக் கருத்து வெளியிட்டிருந்தார். இத னால் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து 'ரைம்ஸ்' பத்திரிகையில் தாம் எழுதிய பத்தியில் விவரித்திருந்தார்.

உண்மையில் எஸ்.எல்.குணசேகர மற் றும் ஹோமின் தயாசிறி ஆகியோர் முன்னர் கூட்டணி அரசினுள் மஹிந்த ராஜபக்ஷ பிரபல்யம் பெற அரசியல் ரீதியாக முன் னின்று உழைத்த புத்திஜீவிகள் ஆவர்.

முன்னொரு [illegible] கட்சியின் தலை[illegible] ஐக்கிய முன்னணி அரசு ஜீ.எல்.பீரிஸின் பிடிக்குள் அகப்பட்டுக் கொண்டிருப்பதா க்வும் அதிலிருந்து சுதந்திரக் கட்சியையும் அரசையும் காப்பாற்ற வேண்டுமெனவும் கூறிவந்தவர்கள் இந்தநாட்டுப்பற்றாளர் தரப்பினரே. அத்தகைய முயற்சிக்குத் தலைமை தாங்கத்தக்க தகுதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு மட்டுமே உண்டு எனவும் அவர்கள் கூறிவந்தனர். சந்திரிகா லண் டனிலிருந்து திரும்பி வந்து அரசியலில் ஈடுபட ஆரம்பிப்பதற்கு முன்னர் சிறிமா வோவுடன் இணைந்து செயற்பட்ட இந்த நாட்டுப்பற்றாளர் தரப்பினர் சுதந்திரக் கட்சியின் நாட்டுப் பற்றாளர்களாக - அர சின் பாதுகாவலர்களாகச் செயற்பட்டனர்.

சிறிமாவோ போன்றே இந்த நாட்டுப் பற்றாளர் தரப்பின் புத்திஜீவிகளும் நாட் டின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலமே தீர்வுகாண இயலுமென நம்பினர். இதன்காரணமாக ஜே.ஆரால் கொண்டு வரப்பட்ட அரசமைப்பின் 13ஆவது திருத் தத்துக்கு சிறிமாவோவின் தலைமையி லான சுதந்திரக் கட்சியினரும் நாட்டுப்பற் றாளர் தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவித்த னர். அந்த வேளையில் மக்கள் கட்சியில் செயற்பட்ட சந்திரிகா, ஜே. ஆர். அரசின் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்துக்கு ஆதரவு வழங்கிய அதேவேளை மஹிந்த ராஜபக்ஷவோ சுதந்திரக் கட்சியில் இருந்து கொண்டே நாட்டுப்பற்றாளர் தரப்பின் புத்திஜீவிகளது நிலைப்பாட்டை ஏற்று, சிறிமாவோவின் தலைமையில் அரசமைப் பின் 13ஆவது திருத்த யோசனைக்கு எதி ராக நாடளாவிய ரீதியில் எதிர்ப்பு நடவடிக் கைகளை முன்னெடுத்தார்.

சந்திரிகா, சுதந்திரக் கட்சியில் இணைந்து கட்சியின் அதிகாரத்தைக் கைப்பற்றி இந்த நாட்டுப்பற்றாளர் தரப்பின் நிலைப்பாட்டை மாற்றி, இலங்கையில் நிலவுவது பயங்கர வாதப் பிரச்சினையல்ல, உண்மையில் அது இனப்பிரச்சினையே எனவும், அதனை அரசியல் ரீதியில் மட்டுமே தீர்த்துக் கொள்ள இயலுமெனவும் கூறியமை, பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸின் கருத்து நிலைப்பாட்டை ஒட்டியே ஆகும். அவ்விதம் ஜீ.எல்.பீரிஸின் கருத்து நிலைப்பாட்டை ஏற்று தமது கருத்தை சந்திரிகா வெளிப்படுத்த ஆரம் பித்தமை காரணமாக அதிருப்தியுற்ற எஸ்.எல்.குணசேகர மற்றும் ஹோமின் தயாசிறி போன்ற நாட்டுப் பற்றாளர் தரப் பைச் சேர்ந்த புத்திஜீவிகள் சுதந்திரக் கட்சி யிலிருந்து வெளியேறினர். அந்த வேளை யில் சிறிமாவோ சுதந்திரக்கட்சியின் தலை வியாக இருந்த போதிலும் அவர் தமது அதிகாரம் நலிவடைந்த ஒருவராகவே செயற்பட நேர்ந்தது. அதேசமயம் மஹிந்த ராஜபக்ஷவோ அந்த வேளையில் கொடி படரும் பக்கத்துக்குப் பந்தல் அமைப்பது போன்ற பாணியில் மௌனமாகவே செயற் பட்டார்.

சுதந்திரக்கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந் தெடுக்கப்பட்டு செயற்பட்ட எஸ்.எல். குணசேகர பின்னர் சிஹல உறுமயவில் இணைந்து செயற்பட்டார். ஹோமின் தயா சிறியோ, சந்திரிகா- ஜீ. எஸ். பீரிஸ் தரப் பின் கொள்கை நிலைப்பாட்டுக்கு எதிராக சுதந்திரக்கட்சிக்குள்ளேயே கருத்தொன்றை உருவாக்க உற்சாகம் காட்டிச் செயற்பட் டார்.

2000ஆம் ஆண்டில் ஜீ.எல். பீரிஸ்ஸி னால் தயாரிக்கப்பட்ட தீர்வுப் பொதி நாடாளுமன்றத்தின் தியவன்ன ஓயாவைக் கடந்து உள்நுழைந்த போது அத்தீர்வுப் பொதி யோசனைக்கு எதிராக சுதந்திரக்கட் சிக்குள்ளும் அரசுக்குள்ளும் எஸ்.எல். குண சேகரவும் ஹோமின் தயாசிறியும் ஒரு [illegible] உருவாக்கி அதற்குத் தலைமை தாங்குமாறு மஹிந்த ராஜபக் ஷவை கேட்டுக் கொண்டார்கள்.

பின்னர் இவ்விருவரும் ஜே.வி.பியு டன் இணைந்து, ஜீ.எல். பீரிஸ் ஐ.தே. கட்சி பக்கம் சென்ற பின்னர் சந்திரிகா - ஜீ.எல். பீரிஸ் தரப்பின் தீர்வுப் பொதி யோசனை யைத் தோற்கடித்து சுதந்திரக்கட்சியின் மத்தியில் தமது நிலைப்பாட்டை வளர்த் தனர். 2002ஆம் ஆண்டின் போர் நிறுத்த உடன்பாடு மற்றும் 2005ஆம் ஆண்டின் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணக்குழு என்பவற்றுக்கு எதிராக இவர்கள் ஜே.வி. பியுடன் இணைந்து போராடியதன் காரண மாக சுதந் திரக்கட்சிக்குள் சந்திரிகாவின் பிரபல்யம் நலிவடைந்து மஹிந்த ராஜபக் ஷவுக்கான ஆதரவு வளர ஆரம்பித்தது.

2005ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர் தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றி பெற வைக்க இவ்விருவரும் கடும் அக் கறை எடுத்துச் செயற்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் போர் நிறுத்த உடன்படிக் கையை இரத்துச் செய்து விடுதலைப் புலி களுடன் யுத்தத்தை ஆரம்பிக்குமாறு மஹிந்த ராஜபக்ஷவுக்கும் அரசுக்கும் அழுத்தம் கொடுத்தவர்களும் இவர்களே. அந்த வேளையில் ஜே.வி.பி. தரப்பும் அவர்களது வற்புறுத்தலுக்கு ஆதரவளித் தது. பின்னர் ஜே.வி.பி.யினர் அரசிலிருந்து விலகிக் கொண்டாலும் அவர்கள் அரசுக் கும் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பாதுகாப்பு வழங்கியே வந்தனர். 2010ஆம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலின் போதும் இவ்விரு வரும் நாட்டுப் பற்றாளர் தரப்பின் தலை வரொருவராகப் போட்டியிட்ட சரத் பொன் சேகாவைத் தோல்வியுற வைத்து மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறவைக் கும் விதத்தில் செயற்பட்டனர்.

அத்தகைய விதத்தில் மஹிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்காக முன்னின்று உழைத்த இவ்விரு வரும் இன்று மஹிந்த ராஜபக்ஷ வின் நிர்வாகத்துக்கு எதிராகக் காட்டும் எதிர்ப்பால் அரசுக்கு ஏற்படும் பாதிப்பு இலேசான தொன்றல்ல.

சரத் பொன்சேகாவுக்கு வழங் கப்படும் தண்டனை மற்றும் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவாகச் செயற் படும் ஜே.வி.பியை ஒடுக்கிவிட அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைள் என்பன குறித்து எஸ்.எல்.குணசேகர மற்றும் ஹோமின் தயாசிறி பெரிய அளவில் அரசை விமர்சித்து வருவதாகவும் தோன்றுகிறது.

வாசுதேவ நாணயக்கார, டியூ குண சேகர, திஸ்ஸ விதாரண, சிறிதுங்க ஆகி யோர் இடதுசாரி தரப்பொன்றாக ஒன்றி ணைந்தால் , ஜே.வி.பி. மற்றும் எஸ்.எல். குணசேகர - ஹோமின் தயாசிறி புத்திஜீவி கள் தரப்பும் ஒன்றிணைய முடியாதா என்ன? இத்தரப்புக்கள் யாவும், ஐ.தே.கட்சி உரு வாக்கவுள்ள அரசுக்கெதிரான பொது எதிர ணியில் ஒன்றிணைந்து அரசின் அரச மைப்புத் திருத்த முயற்சிக்கு எதிராக பெரும் சக்தியொன்றாக உருவெடுத்தால் நிலைமை என்னவாகும்?

**தமிழில் : வீயெஸ்ரீ**

ஐ.தே.கட்சி, ஜே.வி.பி.தரப்பு, பழைய இடதுசாரிகள், நாட்டுப்பற்றாளர் தரப்பு புத்திஜீவிகள், தொழிற்சங்கங்கள், சிறு பான்மையினக் கட்சிகள் ஒரே அணியாக இணைந்து மஹிந்த ராஜபக்ஷவின் அரச மைப்புத் திருத்த யோசனைக்கு எதிளராக பெரும் சக்தி ஒன்றாக உருவானால், 2000 ஆம் ஆண்டில் சந்திரிகா தனது அரசியல் தீர்வுப் பொதி யோசனையைக் கைவிட நேர்ந்தமை போன்று மஹிந்த ராஜபக்ஷ வும் தமது அரசமைப்புத் திருத்த யோச னையைக் கைவிட நேரும்.

கடக்க வேண்டிய கடலின் கரையைச் சென்றடைய இன்னமும் ஏழுகாத தூரம் இருக்கும் நிலையிலேயே, இப்பால் வைத் துக் கச்சையை உயர்த்திக் கட்டிக் கடலைக் கடக்கத் தயாராவதைப் போன்று, மஹிந்த ராஜபக்ஷவின் முதலாவது பதவிக்காலம் இன்னமும் முடிவடையாத நிலையில், 2017 ஆம் ஆண்டில் இடம்பெற வேண்டியுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்காக இப்போதே தம்மைத் தயார்ப்படுத்தப் போய், கடலில் ஆழிப்பேரலை உருவாகி பொங்கிப் பிரவ கித்து முன்னேறி வந்து அனர்த்தத்தை ஏற் படுத்தக்கூடுமா? என்பது குறித்து நிச்சய மாக எதுவும் கூற இயலவில்லை. ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நாம் எமது பாதையில் பயணிக்கவும், சம உரிமையுடன் வாழவும் சிங்கள மக்கள் ஒத்துழைப்புடன் வழிவிட வேண்டும்

## பரமேஸ்வராக் கல்லூரி நிறுவுநர் நிகழ்வில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஓக.31

இலங்கையின் சுதந்திரம் குறித்து பிரித்தானியாவில் உரையாற்றிவிட்டு சேர் பொன். இராமநாதன் இலங்கைக்குத் திரும்பியபோது சிங்கள மக்கள் அவரை குதிரை வண்டியில் வைத்து இழுத்து வந்தனர். அவர்கள் இன்று எம்மை எமது பாதையில் செல்ல அனுமதிக்க வேண்டும். நாமும் சம உரிமையுடன் வாழ்வதற்கும் விட வேண்டும் என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுநர் தினம் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வுக்குத் தலைமைதாங்கி உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியவை வருமாறு:

சேர் பொன்.இராமநாதனின் ஆளுமைகள் இன்று எவருக்கும் இல்லை. அவர் தந்த கல்வி, அரசியல் வாழ்வே இன்று எமக்கு வழிகாட்டியாக உள்ளது. அவரே தமிழ்ப் பிரதேசத்தில் பல்கலைக்கழக கல்வி மரபை உருவாக்குவதற்கு மூலகாரணமாக அமைந்தார்.

பரமேஸ்வரனின் பெயரால் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதுபோன்று இராமநாதனின் பெயரால் கொழும்பில் மகளிர் கல்லூரி ஒன்று உள்ளது. இவர் போன்ற நல்ல மனிதர்களின் பெயரால் இந்தத் தேசம் முழுவதும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இன்றும் அவரின் தீர்க்கதரிசனம் செல்லுபடியாகின்றது.சேர் பொன்.இராமநாதன் பிரித்தானியாவில் இலங்கைக்கு சுதந்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து உரையாற்றிவிட்டு இலங்கைக்கு வந்தபோது சிங்கள மக்கள் அவரை காலி துறைமுகத்தில் இருந்து குதிரை வண்டியில் இழுத்து வந்தனர்.

இன்று நாம் அவர்களிடம் கேட்பது எம்மை எமது பாதையில் செல்ல அனுமதியுங்கள், நாமும் சமநிலையில் வாழ்வதற்கு விடுங்கள் - என்றார். (த-6-15)

# நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்துக்கு புதிய நுழைவாயில்

நவாலி,ஓக.31

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில் வசந்த மண்டபத்திற்கு நேர் எதிரே தெற்குப்பக்க நுழை வாயிலொன்று புதிதாக நவீன முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் வசந்த மண்டபத்தில் இடம்பெறும் சகல பூசைகளையும் நெருக்கடியில்லாமல் வெளியில் நின்றும் பக்தர்கள் பார்ப்பதற்கு வசதியாக இது அமைந்துள்ளது.

(த-100)

# சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சை பிற்போடப்பட்டது

யாழ்ப்பாணம்,ஓக.31

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினரால் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் நடத்தப்படவிருந்த சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எழுத்துப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை ஏற்கனவே வழங்கப்பட்ட நேர ஒழுங்கில் நடைபெறும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது. (த-310-311-313)

# சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை ஏற்க மறுக்கும் தூதரகங்கள்

தென்மராட்சி,ஓக.31

இலங்கையில் உள்ள வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் பிரதேச செயலகங்களால் வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் ஏற்க மறுத்து திருப்பி அனுப்பப்படுகின்றன.




வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழில் இலங்கை அரசின் இலச்சினை இல்லையெனக் காரணங்கூறப்பட்டு திருப்பி அனுப்பப்படுகிறது.

பிறப்புச் சான்றிதளுக்கு விண்ணப்பிப்போருக்கு வெள்ளைத்தாளில் புகைப்படப் பிரதி செய்யப்பட்டு வழங்கப்படுவதாகவும் இலங்கை அரசின் இலச்சினை பொறிக்கப்பட்ட தாள்கள் பிரதேச செயலகங்களில் இல்லாததால் மூலப்பதிவு புத்தகத்திலிருந்து வெள்ளைத் தாளில் போட்டோ பிரதி செய்து உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படுவதாகவும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-207)

# டெங்கு நோய் அபாயம் குறித்து சுகாதாரப் பகுதியினர் துண்டுப் பிரசுரம்

யாழ்ப்பாணம்,ஓக.31

யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் பரவும் சாத்தியம் அதிகரித்து வருவதனால் பொது மக்கள் விழிப்புடனும் எச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டியது அவசியமானதும், அவசரமானதுமென சுகாதார வைத்தியப் பகுதியினர் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர். அந்தப் பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

டெங்கு நுளம்பினால் பரப்பப்படும் ஒரு வைரஸ் நோய் என்பதனால் நீர்த்தேக்கங்கள், நீர் தேங்கி நிற்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் மற்றும் பரவலாக எறியப்பட்டிருக்கும் வெற்றுப் போத்தல்கள், பாவனைக்குதவாத சட்டிகள் போன்றவற்றிலும், தண்ணீர்த் தொட்டிகள், மழைநீர் தேங்கி நிற்கும் இடங்கள் போன்றவற்றை பொதுமக்கள் சுத்தம் செய்வதோடு தண்ணீரைத் தேக்கி வைக்கும் கொள்கலன்கள் இருப்பின் அவை 07 நாள்களுக்கு ஒரு தடவை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

எனவே இவ்விடயங்களை கவனத்தில் கொண்டு எல்லோரும் செயற்பட்டால் டெங்கு நோயிலிருந்து எம்மை காக்க முடியும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-26)

# அபிவிருத்திக்கான பாதைகள் கருப்பொருளில் திறந்த அரங்கம்

யாழ்ப்பாணம்,ஓக.31

"அறிவைத் தளமாகக் கொண்ட அபிவிருத்திக்கான பாதைகள்" என்னும் கருப்பொருளிலான திறந்த அரங்கமொன்று எதிர்வரும் 2ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பொது நூலகக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகம் (PPID), பிரெட்றி இபேர்ட் ஸ்ரிப்ரங் (FES) அனுசரணையுடன் பிரெட்றிக் இபேர்ட் டிப்டங்கின் வதிவிடப் பிரதிநிதி ஜோக்கிம் ஸ்க்ளுட்டர் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அரங்கில் பிரதம பேச்சாளர்களாக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, எச்.எஸ்.பி.சி. வங்கியைச் சேர்ந்த ந.நிரஞ்சன், யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கச் செயலாளர் த.மகாசிவம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.மற்றும் வடமாகாணத்தின் பாரம்பரிய விவசாயம் மற்றும் மீன்பிடிப் பெருளாதாரத்தை நவீன அறிவைத் தளமாகக் கொண்ட பொருளாதாரமாக மாற்றுவதற்கான வழிமுறைகள், அதற்கான செலவுகள், பயன்கள் என்பவற்றைச் சமர்ப்பிப்பதும் இப்பொது அரங்கின் நோக்கமாகும்.

இதில் இறுதியாக அபிவிருத்திக்கான பருத்தித்துறை ஆய்வகத்தின் பிரதம ஆய்வாளர் கலாநிதி முத்துகிருஷ்ணா சர்வானந்தனின் வழிநடத்தலில் குழுக் கலந்துரையாடல் இடம்பெறும்.

நாட்டின் ஏனைய பகுதிகள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களையும் பங்குபற்ற வைப்பதற்காகவே நல்லூர் ஆலய உற்சவ காலத்தில் இது நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. (த-16-9)

# பரமேஸ்வராக் கல்லூரியை மீண்டும் இயக்க பழைய மாணவர் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.31

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியை மீளவும் இயங்கச் செய்யும் திட்டம் கல்லூரியின் பழைய மாணவர்களிடம் உள்ளது. அதன் மீள் எழுச்சிக்கான தினமாகவே இன்றைய (நேற்றைய) பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர் தினம் அமைந்துள்ளது என்று யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் நிறுவுனர்தினம் நேற்று யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கமும் இது தொடர்பான கோரிக்கை ஒன்றை உயர் கல்வியமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கவிடம் விடுக்கவிருந்தது. எனினும் அமைச்சர் திஸநாயக்கா நேற்றுப் பரமேஸ்வராக் கல்லூரி நிறுவுநர் தின நிகழ்வில் கலந்து கொள்ளவில்லை. ஜனாதிபதி அவசரமாக அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டியுள்ளதால் அவர் கொழும்புக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து இந்தக் கோரிக்கை மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ்.இளங்கோவனிடம் முன்வைக்கப்பட்டது. இந்தக்கோரிக்கை குறித்துச் சாதகமாகப் பரிசீலிக்கப்படும் என்று எஸ்.இளங்கோவன் தனதுரையின்போது குறிப்பிட்டார். (த-6-15)

# ரம்ழான் சிந்தனை

புனித ரம்ழானின் அருள் வளப் புதையலில் உங்களுக்கு என்னென்ன கிடைக்கும்? செழிப்பான நிலத்தைப் போல உங்களுடைய இதயமும் இளகியதாக கண்களும் ஈரமாகவிருந்தால் உங்களுக்குள் ஈமானிய விதையை நடும்போது மேலும் உங்களுடைய திறமைதிறன் ஆற்றலுக்கேற்ப அதனைப் பாதுகாக்கும்போது அந்த விதை பெரும் மரமாக வளரும். அந்த மரத்தில் நற்செயல் எனும் பூக்கும் மலர்களும், கனிகளும் மணம் சேர்க்கும். பிறகு நீங்கள் நிலையான அரசை அறுவடை செய்வீர்கள்.

உங்களுடைய இதயம் கல்லாகவிருந்தால், நீங்களும் அக்கறையில்லாத பொறுப்பற்ற விவசாயியைப் போல தூங்கி வழிந்து கொண்டிருந்தால், நோன்புகள், தராவீஹ் அருள்வளம் ஆகியவற்றின் நீர் வளம் யாவும் அடித்துச் செல்லப்பட்டுவிடும். உங்களுக்கு எதுவுமே கிட்டாது.


எம்.ஏ.காதர்



பரமேஸ்வராக் கல்லூரியின் ஸ்தாபகர்தினம் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சேர் பொன்.இராமநாதனின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்த பின் திருநீறு பூசுவதை முதல் படத்திலும் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை மற்றும் பழைய மாணவர்கள் வணக்கம் செலுத்துவதை இரண்டாவது படத்திலும் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் [illegible] கனகநமநாதன் மங்கள விளக்கு ஏற்றுவதை மூன்றாவது படத்திலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாணக் [illegible] இளங்கோவன் பரமேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் எஸ்.கனகநாதலிங்கம் ஆகியோர் உரையாற்றுவதை இறுதி இரு படங்களிலும் காணலாம். *(படங்கள்: தமிழரசன், டிலீப்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.10.1993

* விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வடபகுதியின் முக்கிய நகரமான யாழ்ப்பாணத்தின் மீது பாரிய தாக்குதலைத் தொடுக்க இலங்கை இராணுவம் தயாராகி வருவதாகத் தெரிவிப்பு.
* வடக்கு -கிழக்கு போர் பற்றிய தவறான செய்திகளையே அரசு சிங்கள மக்கள் மத்தியில் பரப்பி வருகிறது. தமது தாக்குதல்களில் விடுதலைப் புலிகளே இறப்பதாக அரசு கூறினாலும் உண்மையில் அவ்விதம் இறப்பவர்கள் பொதுமக்களே என யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையின் செய்தியாளர் தெரிவிப்பு.

17.10.1993

* கொழும்பு நகரிலும், புறநகர்ப் பகுதிகளிலும் கைது செய்யப்பட்ட 500 இற்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் கொழும்பிலுள்ள பத்து தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிப்பு.
* இவ்வார ஆரம்பத்தில் சுதந்திரக் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்த அனுரா பண்டாரநாயக்க, ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளார் என பி.பி.ஸி. வானொலி தெரிவிப்பு.

18.10.1993

* இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான நான்கு புக்காரா விமானங்களில் மூன்று பழுதடைந்து செயலிழந்த நிலையில் பலாலி விமான ஓடுதளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* பேச்சுவார்த்தைக்கான கதவுகளை நிரந்தரமாக மூடிவிட்டு படைத்தரப்பைப் பலப்படுத்தும் முயற்சியில் அரசு கடும் அக்கறை காட்டிச் செயற்பவதாக விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' பத்திரிகை தெரிவிப்பு.

19.10.1993

* விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதல் படையைச் சேர்ந்த போராளிகள் கொழும்பு நகருக்குள் பெரும் எண்ணிக்கையில் ஊடுருவி இருப்பதாகவும், இதனால் பொது மக்கள் அவர்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறும் பொதுமக்களுக்குப் பொலிஸார் எச்சரிக்கை விடுப்பு.
* முப்படைகளில் இருந்தும் ஓய்வுபெற்ற அதிகாரிகளை மீண்டும் படையில் சேருமாறு இராணுவ உயர்பீடம் அழைப்பு விடுத் துள்ளதாகத் தெரிவிப்பு.

20.10.1993

* கொழும்பு நகருக்குள் ஊடுருவியிருக்கும் விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படையினரின் இலக்கு இராணுவத் தளபதியே எனத் தகவல் கிடைத்திருப்பதாக சிங்கள வார இதழ் ஒன்று தெரிவிப்பு.
* வடபகுதி கடல் போக்குவரத்தைத் தடை செய்யும் இலங்கை அரசின் ஒரு தலைப்பட்ச முடிவு, இந்திய-இலங்கை அரசுகளுக்கு இடையே கடும் வேறுபாட்டை தோற்றுவிக்கும் விடுதலைப்புலிகளின் முயற்சிக்குக் கிடைத்த வெற்றி என 'சண்டே ஐலன்ட்' பத்திரிகை தெரிவிப்பு.

21.10.1993

* கடந்த ஆகஸ்ட் மாதத்தில் திரட்டப்பட்ட 10 படை அணிகளுக்கு மேலதிகமாக மேலும் 5 படையணிகளை இராணுவத்துக்கு திரட்ட நிதி ஒதுக்கித் தருமாறு இராணுவத் தரப்பு அரசிடம் வலியுறுத்தி வருவதாகத் தெரிவிப்பு.
* சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை குறித்து ஆராயவென இங்கு வந்த சுவீடிஸ் குழுவினர் தற்போது அதற்கான சூழ்நிலை இங்கு நிலவவில்லையென சுவீடிஸ் அரசுக்குத் தெரிவிப்பு.

22.10.1993

* கெரில்லா யுத்த முறையை கடைக்கொள்ளும் விடுதலைப் புலிகளை இராணுவ நடவடிக்கைகளால் தோற்கடிக்க இயலாது என சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுருத்த ரத்வத்த நாடாளுமன்றத்தில் தெரிவிப்பு.
* யாழ்.குடாநாட்டு மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்து தென்பகுதி மக்கள் எவரும் சரியாகத் தெரிந்துகொள்ளவில்லை என யாழ்ப்பாணம் வந்துள்ள 'லங்காதீப' பத்திரிகையின் செய்தியாளர்கள் தெரிவிப்பு.

23.10.1993

* ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, உத்தியோகபூர்வமாக அதனை அங்கீகரிக்குமாறு பொதுநல அமைப்பு நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ள தலைவர்களிடம் விடுதலைப்புலிகள் கோரிக்கை முன்வைப்பு.
* தம்மால் கைதுசெய்யப்பட்டு கடந்த ஒரு மாத காலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த 29 இலங்கை மீனவர்களை இந்திய அரசு விடுவித்துள்ளதாகத் தெரிவிப்பு.

24.10.1993

* தமிழீழத்தின் நான்காவது நீதிமன்றம் நேற்று நல்லூரில் திறந்துவைக்கப்பட்டதாகத் தெரிவிப்பு.
* அரசாங்கம் பிறப்பிக்கும் ஊரடங்குச் சட்டம் வடக்கில் அமுலாவதில்லை. அதனை நாம் நேரில் அவதானித்தோம் என யாழ்ப்பாணம் வந்து திரும்பிய 'ராவய' பத்திரிகையின் செய்தியாளர் ஒருவர் தெரிவிப்பு.

25.10.1993

* கொழும்பு நகரில் இரவு வேளைகளில் இலக்கத் தகடு இல்லாத வாகனங்களில் வரும் இனந்தெரியாத குழுக்களால் தமிழ் இளைஞர்கள் கடத்தப்படுவது அதிகரித்து வருவதாகவும் இதனால் சிங்கள மக்கள் மத்தியிலும் கூட பதற்றம் நிலவுவதாகவும் தெரிவிப்பு.
* வடக்கு,கிழக்கு மாகாணங்கள் இணைப்புத் தொடர்பாக சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை விரைவில் நடத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிப்பு.

26.10.1993

* அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக அண்மைக்காலமாகத் தெரிவித்து வரும் கருத்துக்கள் அமைச்சரவைக்குள் தொண்டமானுக்கு எதிரான உணர்வலைகளைத் தோற்றுவித்து இருப்பதாகத் தெரிவிப்பு.
* இலங்கை இராணுவத்துக்கு என அதிசக்தி வாய்ந்த டாங்கிகளை கொள்வனவு செய்வதில் இராணுவத்தரப்பு ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிப்பு.

27.10.1993

* கிழக்குப் பகுதியைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களை விசாரணை எதுவுமின்றி கூட்டிச்சென்று கொலை செய்து அவர்களின் சடலங்களை கொழும்பில் 'ரயர்' போட்டு எரிப்பதற்காக கொழும்புக்கு எடுத்துவரும் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிப்பு.
* ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் அனுரா பண்டாரநாயக்க இணைந்து கொண்டதன் மூலம் அமைச்சர் பதவியொன்றும் அவருக்கு வழங்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு.

28.10.1993

* இலங்கையின் வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டால் மட்டுமே நாட்டுக்குப் பொருளாதார முன்னேற்றம் கிட்டும் என லண்டனில் இருந்து வெளிவரும் பொருளியல் பத்திரிகை ஒன்று விமர்சிப்பு.
* ஆஸ்திரேலியாவிலுள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, ஈழத் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆஸ்திரேலிய அரசு அங்கீகரிக்க வேண்டும் என ஆஸ்திரேலிய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகத் தெரிவிப்பு.

29.10.1993

* வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அவற்றுக்கான ஏற்பாடுகள் குறித்து பொதுசனத் தொடர்பு சாதனங்களுக்கு தகவல் ஏதும் வழங்க வேண்டாம் என சகல இராணுவ முகாம் பொறுப்பதிகாரிகளுக்கும் அரசு அறிவித் துள்ளதாகத் தெரிவிப்பு.
* ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ள அனுரா பண்டாரநாயக்கவுக்கு கல்வி அமைச்சர் பதவி வழங்க அரசு முடிவு செய்திருப்பதாக ஏஜென்சிச் செய்திகள் தெரிவிப்பு.

30.10.1993

* அகதிகளாகப் பலர் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குத் தப்பி ஓடுவதற்கு இலங்கை அரசாங்கத்தால் தூண்டப்பட்ட வன்முறையே காரணம் என பிரிட்டனில் உள்ள அகதிகள் நலன்காக்கும் கவுன்ஸிலின் அறிக்கையில் தெரிவிப்பு.
* ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்கான தமது விண்ணப்பத்தை அனுரா பண்டாரநாயக்க நேற்று ஜனாதிபதி விஜயதுங்கவிடம் கையளித்துள்ளதாகத் தெரிவிப்பு.

31.10.1993

* மட்டக்களப்பு மாவட்டத்தில் மொத்தமுள்ள 12 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் இதுவரை 70 இற்கும் மேற்பட்ட இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பு.
* மடு முகாமைச் சேர்ந்த அகதிகள், அகதிகளுக்கான ஐ.நா.தூதரக ஊழியர்களில் நால்வரை பிடித்து வைத்திருப்பதாகத் தெரிவிப்பு.

# பொன்சேகாவையடுத்து சந்திரிகாவிற்கு எதிராகவும் வழக்குத் தொடர திட்டமாம்

கொழும்பு, ஓக. 31

சரத் பொன்சேகாவிற்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டமையைப் போன்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கு எதிராகவும் அரசு வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளது என்று செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்துப் போட்டியிட்ட சரத் பொன்சேகாவிற்கு எதிராகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளுக்கு நிகரான வகையில் பல வழக்குகள் சந்திரிகா பண்டாரநாயக்கவிற்கு எதிராகவும் தொடரப்படவுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சந்திரிகா நிதி அமைச்சராக கடமையாற்றிய காலத்தில் மேற்கொண்ட லோகோ மெட்விச் கொடுக்கல் வாங்கல்கள், எமிரேட்ஸ் எயார்பஸ் கொடுக்கல் வாங்கல்கள், ஏவன்ஸ் இன்டர்நெசனல் கொடுக்கல் வாங்கல்கள் உள்ளிட்ட பல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் வழக்குத் தொடரப்பட உள்ளது எனத் தெரியவருகிறது. (சி)

# நீர்கொழும்பில் புதிய இறங்கு துறை: நிர்மாணப்பணி அடுத்தமாதம் பூர்த்தி

கொழும்பு, ஓக. 31

நீர்கொழும்பு களப்புப் பகுதியில் புதிய இறங்குதுறை ஒன்று நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் பணிகள் அடுத்த மாதமளவில் முற்றாக நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இறங்கு துறையை நிர்மாணிக்க ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு என்ற நிறுவனம் நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது.

30 கோடி ரூபா நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்படும் இந்த இறங்குதுறையின் ஊடாக உல்லாசப் பயணிகள், படகுகளின் மூலம் களப்புப் பகுதிக்குச் செல்ல முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர களப்புப் பகுதிக்கு அப்பால் உள்ள பறவைகள் சரணாலயத்துக்குச் சென்று அரும் பறவைகளின் நடமாட்டங்களை மிக அருகாமையில் இருந்து அவதானிக்க முடியும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் இதன் பணிகள் அடுத்த மாதமளவில் முற்றாக நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்கொழும்பு தற்போது உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் முக்கியமான இடமாக மேல் மாகாணத்தில் திகழ்கிறது என உல்லாசப் பயணத்துறை தெரிவிக்கின்றது.

இந்த நிலையில் கடந்த காலங்களில் நஷ்டத்தில் இயங்கியதன் காரணமாக பல விருந்தகங்கள் தற்போது மீள திருத்தியமைக்கப்பட்டு திறக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

# அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு இடதுசாரிக் கட்சிகள் எதிர்ப்பு

கொழும்பு, ஓக. 31

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை நீடிக்கும் உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தை எதிர்பதென முடிவு செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த அமைச்சர்களான டியூ குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, பிரதியமைச்சரான சந்திரசிறி கஜதீபர, நாடாளுமன்ற உறுப்பினர்களான வாசுதேவ நாணயக்கார, வை.ஜி.பத்மசிறி ஆகியோரே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிகின்றது.

இதுபற்றி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவிக்கையில் எமக்கும் ஆளும் கூட்டமைப்புக்கும் இடையேயான உறவினைப் பாதிக்காத வகையிலேயே எமது தீர்மானம் அமையும் என்றார்.

இடதுசாரிக் கட்சிகள் அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கு ஆதரவு வழங்குவதற்குப் பின்னிற்கும் போது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு முக்கியமானதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

(க)

## விளைந்த கச்சானை நாசமாக்கும் பன்றிகள்

சாவகச்சேரி, ஓக 31

தென்மராட்சிப் பகுதியின் மட்டுவில், கல்வயல், விளைவேலி, சிறுவில்,மட்டுவில் முதலியார் வயல்வெளி ஆகிய வயல் பகுதிகளில் விவசாயிகள் கச்சான் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். கச்சான் விளைந்த நிலையில் பன்றிகள் பல இடங்களிலும் புகுந்து அவற்றை நாசம் செய்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதனால் விவசாயிகள் வயலில் இரவில் பன்றிக் காவலில் ஈடுபட்டுள்ளனர். இதற்காக விறகுகளை குவித்து நெருப்பினை கொளுத்தி இரவு வெளிச்சத்தை ஏற்படுத்தி பயிர்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

(த-131)


## அடிப்படை சுகாதார மருத்துவ கற்கைநெறி

அடிப்படைத் தகைமை: G.C.E. O/L சித்தியடைந்திருத்தல்
பயிற்சிக் காலம்: 6 மாதம் (வார/வார இறுதிநாள்கள்)
பயிற்சிக் கட்டணம்: ரூபா 5000
விண்ணப்ப முடிவுத் திகதி: 07.09.2010
அனுப்ப வேண்டிய முகவரி: இணைப்பாளர்
(சுகவாழ்வுக்கான பயணம்)
3ஆம் ஒழுங்கை, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

★ குறிப்பிட்ட தனியார் வைத்தியசாலைகளில் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்படும்.
★ இக்கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சுகாதாரத் துறையில் தொழில்வாய்ப்பு உள்ளது.
★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
★ மருத்துவ அறிவையும் திறன்களையும் பெற ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

தொலைபேசி இல்:
0213216436 (102693) இணைப்பாளர்.


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை கைலாயநாதன்

(உரிமையாளர், வெல்டிங் தொழிலகம், இணுவில்)



கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கைலாயநாதன் 28.08.2010 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (02.09.2010) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

C.C.T.M.S.வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில் (102694)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேக்கஷேல் தோட்ட நீர்மின்திட்ட வருமானத்தில் பங்குகேட்டு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

## 3ஆம் திகதிவரை நிர்வாகத்திற்கு காலக்கெடு

மஸ்கெலியா,ஓக.31

பொகவந்தலாவை - கேக்கஷேல் லெட்சுமித் தோட்டப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்மின்திட்டத்தில் தமக்கும் பங்கு வழங்குமாறு கோரி கடந்த சனிக்கிழமை தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 13 ஹெக்டேயர் தேயிலைக் காணியில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுவதால் எதிர்காலத்தில் தமக்கு வேலை வாய்ப்பு இல்லாது போகும் அபாயம் தோன்றியுள்ளது என்று தொழிலாளர்கள் குறிப்பிட்டனர்.

எனவே, நீர் மின்திட்டத்தால் பெறப்படும் லாபத்தில் ஒருபங்கை தமக்குத் தரவேண்டும் என்று வலியுறுத்தியே தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இல்லையேல் எதிர்வரும் 3 ஆம் திகதிக்குப் பின்னர் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இங்கு உரையாற்றிய முரளிரகுநாதன் தெரிவித்தவை வருமாறு:-

எமக்கு கட்சிபேதம் தேவையில்லை. மக்களுக்கு எங்கு அநீதி இழைக்கப்பட்டாலும் நான் அங்கு முதல் ஆளாக நிற்பேன்.

இத்தோட்டப்பிரிவில் தற்போது அமைக்கப்பட்டுவரும் நீர்மின் திட்டத்தால் பல ஹெட்டேயர் காணிகளிலுள்ள தேயிலைச் செடிகள் அழித்தொழிக்கப்பட்டுவிட்டன.

எனவே, நீர்மின்சாரத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் லாபத்தில் ஒரு பங்கை தோட்ட நிர்வாகம் தோட்டத் தொழிலளர்களுக்கு நிரந்தரமாக வழங்க வேண்டும்.

இது தொடர்பாக எதிர்வரும் 3ஆம் திகதிக்கு முன் தோட்ட நிர்வாகம் முறையான பதிலைத் தரவேண்டும். இல்லாவிடின் கட்சி பேதமின்றி தோட்டத் தொழிலாளார்கள் பாரிய தொழிற்சங்கப் போராட்டத்தை நடத்து வார்கள் - இப்படி முரளி ரகுநாதன் தெரிவித்தார். (ளி)

# நாவலப்பிட்டி பிரதேசத்தில் தொழில்நுட்பக் கல்லூரி திறக்க ஏற்பாடு

கொழும்பு,ஓக.31

நாவலப்பட்டிப் பிரதேசத்தில் விரைவில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இளைஞர் விவகார பிரதி அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவித்துள்ளார்.

பயிற்சிநெறிகளைப் பூரணப்படுத்தியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை மஹிந்தானந்த அமைப்பு ஒழுங்கு செய்திருந்தது.

அங்கு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பாடசாலைக் கல்வியை முடிக்கும் மாணவர்களில் 16 சதவீதத்தினர் மட்டுமே தொழிற்துறைக் கல்வியை நாடுகின்றனர்.

இது மிகவும் குறைந்த மட்டமாகும். இதனை அதிகரிக்கும் நோக்கில், இவ்வாறான தொழில்நுட்பக் கல்லூரிகளை அமைக்க வேண்டியுள்ளது - இப்படி அவர் தெரிவித்தார். (ளி)

# நுவரெலியா பெருந்தோட்டப் பகுதிகளிலும் டெங்குநோய் விழிப்புணர்வு நடவடிக்கை

நுவரெலியா,ஓக.31

நுவரெலியா மாவட்டத்திலுள்ள தோட்டப் பகுதிகளிலும் டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கினிகத்தேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட லெதண்டி கிராமசேவர் பிரிவில் உள்ள தோட்டப்பகுதிகளில் டெங்கு நுளம்பு ஏற்பாடாத வகையில் சுற்றுச்சூழலைச் சுத்தப்படுத்தும் பணிகள் இடம்பெற்றன.

இந்த நடவடிக்கைகளில் லெதண்டி பிரதேச கிராம உத்தியோகத்தர் ஏ.எஸ்.டாரின் தலைமையில் மால்புரோ தோட்ட மருத்துவ உத்தியோகத்தர்களும், தோட்ட மக்களும், சுகாதாரத் தரப்பினரும் கலந்து கொண்டனர். (ளி)




# குன்றும் குழியுமாக காணப்படும் சாமிமலை நகரின் பிரதான வீதி

நுவரெலியா,ஓக.31

சாமிமலை நகரிலுள்ள பிரதான வீதி பாரிய குன்றும் குழியுமாக உள்ளது என சாமிமலை நகர வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு குன்றும் குழியுமாக உள்ள நெடுஞ்சாலையின் இரு புறங்களிலும் வர்த்தக நிலையங்கள் சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவை உள்ளன.

அவ்வாறு அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில், மழைக்காலங்களில் சேறு கலந்த நீர் தேங்கி நிற்பதால், வாகனங்கள் செல்லும்போது அந்த நீர் வீசியடிக்கின்றது.

இதனால் பாதசாரிகள், பயணிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பெரும் சிரமப்படுகின்றனர்.

இந்த நெடுஞ்சாலையானது நோர்வூட் வீதி அதிகார சபையின் கீழ் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நகரின் வடிகான்கள் அனைத்தும் குப்பைகள் நிறைந்து காணப்படுவதாலும் அவற்றில் நீர் தேங்கி நிற்பதாலும் டெங்குநோய் பரவும் அபாயம் உள்ளது என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இந்நகரில் முற்றிலும் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது என விசனிக்கும் நகர வர்த்தகர்கள் இவற்றைச் சீர்செய்வதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட வர்கள் மேற்கொள்ளவேண்டும் எனக் கோருகின்றனர். (ளி)

# நோயெதிர்ப்பு சக்தியைக் கொண்ட புதியவகை 'பப்பாளி' உருவாக்கம்

கொழும்பு,ஓக.31

வைரஸ் நோய்களால் பீடிக்கப்படுபவர்களின் நோய் எதிர்ப்பு சக்தியை இரட்டிப்பாக்கக்கூடிய புதியவகை பப்பாளியை சப்ரகமுவ விவசாயத்திணைக்களம் உருவாக்கியுள்ளது. சப்ரகமுவ விவசாயத் திணைக்களத்திற்குச் சொந்தமான திம்பொல்கெட்டிய பண்ணையில் விவசாய அதிகாரிகள் குழுவொன்று நீண்டகாலமாக மேற்கொண்டு வந்த ஆராய்ச்சியின் பயனாக இந்த புதிய பப்பாளி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

"வி-100" எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் பப்பாளி வழக்கமான பப்பாளியை விட இருமடங்கு நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டிருக்கும்.

எம்பிலிப்பிட்டிப் பிரதேசத்தில் இது அறிமுகப்படுத்தப்படவிருக்கின்றது. இதன் அறுவடை வழக்கத்தைவிட இருமடங்காக இருக்கும் என பண்ணையின் விவசாய அதிகாரி கே.எஸ்முனசிங்க தெரிவித்தார். (ளி)

---

# மட்டு. சித்தாண்டியிலுள்ள 'மினி கோப்சிற்றி'யை முதலமைச்சருடன் சென்ற பொலிஸார் முற்றுகை

## பாவனைக்குதவாத பெருந்தொகையான பொருட்கள் மீட்பு

மட்டக்களப்பு, ஓக.31

மட்டக்களப்பு சித்தாண்டியிலுள்ள 'மினி கோப் சிற்றி'யில் வைக்கப்பட்டிருந்த பெருந் தொகையான பாவனைக்கு உதவாத பழுதடைந்த பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் சென்ற பொலிஸ் மற்றும் கூட்டுறவு அதிகாரிகள் குழு கடந்த சனிக்கிழமை இப்பொருள்களைக் கண்டுபிடித்துக் கைப்பற்றியுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனிடம் பொதுமக்கள் சிலர் பழுதடைந்த பொருட்கள் தொடர்பாக முறைப்பாடு செய்தனர். இதையடுத்தே இத்திடீர் சோதனை நடத்தப்பட்டது.

கிழக்கு மாகாண முதலமைச்சர், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர், ஏறாவூர் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோர் அடங்கிய குழு உரிய இடத்தை சம்பவதினம் காலை திடீரென முற்றுகையிட்டு பொருள்களைப் பரிசோதனை செய்தது.

அப்போது அங்கிருந்த பொருள்களில் பெருந்தொகையான பொருள்கள் பழுதடைந்து, காலாவதியாகிப் பாவனைக்குதவாதவை எனக் காணப்பட்டதையடுத்து அப்பொருள்கள் அனைத்தையும் பொலிஸாரும் கூட்டுறவு அதிகாரிகளும் கைப்பற்றினர்.

எதிர்வரும் திங்கட்கிழமை மட்டக்களப்பு நீதிமன்றத்திற்கு 'கோப் சிற்றி' முகாமையாளர் உட்பட அதன் அதிகாரிகளை ஆஜராகுமாறும் ஏறாவூர் பொலிஸார் கட்டளையிட்டனர்.

இம் 'மினி கோப் சிற்றி' கூட்டுறவு அதிகாரிகளால் சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டது. இங்கிருந்து பெருந்தொகையான பால்மா மற்றும் 'பிஸ்கட்', 'ஓடிகளோன்', நூடில்ஸ் வகைகள், தேங்காய் எண்ணெய் போன்ற பொருள்களைத் தாம் கைப்பற்றினர் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடி பிரதேசத்திற்குச் சொந்தமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் இம்'மினி கோப்சிற்றி' நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.(ளி)

# பொதுமக்களுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க கிழக்கு மாகாணத்தில் முறைப்பாட்டுக்குழு

மட்டக்களப்பு, ஓக.31

கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களின் முறைப்பாடுகளுக்கு உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு, பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபைத் தவிசாளரின் தலைமையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இக்குழு மாகாணசபை உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் ஆகியவற்றை இக்குழு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை எழுத்துமூலமாகத் தெரிவிப்பதற்கு வசதியாக கிழக்கு மாகாணத்தின் அனைத்து உள்ளூராட்சி மன்ற அலுவலகங்களிலும் முறைப்பாட்டுப் பெட்டிகள் வைக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு முறைப்பாட்டுப் பெட்டிகள் வழங்கும் வைபவம் (வெள்ளிக்கிழமை) மட்டக்களப்பு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி என்.சத்தியானந்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள், அமைச்சுகளின் செயலாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ளி)




# கிழக்கில் சூடு பிடிக்கின்றது நோன்புப் பெருநாள் வர்த்தகம்

மட்டக்களப்பு,ஓக.31

கிழக்கு மாகாண முஸ்லிம் மக்கள் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடுவதற்குத் தயாராகி வருகின்றனர். பெருநாள் பண்டிகைக்குத் தேவையான பொருள் கொள்வனவில் தற்போது இவர்கள் மிகுந்த ஆர்வம் செலுத்துகின்றனர்.

இதனால் பெருநாள் வியாபாரம் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது. அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன. நகர வீதிகளில் மக்கள் கூட்டம் அலை மோதுகிறது.

கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் தற்போது அமைதியான சூழ்நிலை நிலவுகிறது. இதனால் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வியாபாரிகள் கிழக்கு மாகாணத்திற்கு வருகை தந்து தமது வியாபார நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

நடைபாதை வர்த்தகம் பெரிதும் களை கட்டியுள்ளது. அத்துடன் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள புடவை வியாபாரிகளும் வீடுவீடாகச் சென்று தமது பொருள்களைச் சுறுசுறுப்பாக விற்பனை செய்து வருகின்றனர்.

தற்போது நிலவும் அச்சமற்ற சூழ்நிலைக்கு மத்தியில் முஸ்லிம் மக்கள் புனித நோன்புப் பெருநாளை வரவேற்பதற்கு மகிழ்ச்சியுடன் தயாராகி வருகின்றனர். (ளி)

# நீண்டநாள் கொள்ளைக் கோஷ்டி காத்தான்குடிப் பொலிஸாரால் கைது

மட்டக்களப்பு, ஓக.31

நீண்ட நாட்களாகப் பாரிய கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த கொள்ளைக் கோஷ்டியைச் சேர்ந்தவர்களை காத்தான்குடிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து மோட்டார் சைக்கிள், தங்க மாலைகள், பல பவுண் தங்க நகைகள், 35 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம், கையடக்கத் தொலைபேசி ஆகியவை கைப்பற்றப்பட்டுள்ளன எனக் காத்தான்குடி குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி அமரசிறி தெரிவித்தார்.

சந்தேக நபர்களை எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அன்றையதினம் அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் வீ. இராமகமலன் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக காத்தான்குடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கிருந்தோ வருவோரெல்லாம் கடல் வளத்தை அள்ளுவதால் எதிர்காலத்தில் மீன்பிடித்தொழிலே அழியும் அபாயம்

## யாழ். மீனவர்களின் உள்ளக் குமுறல்கள்

குடாநாட்டில் உள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான செல்வச்சந்நிதி முருகன், தெல்லிப்பழை துர்க்கையம்மன், நல்லைக் கந்தன் ஆகியவற்றின் திருவிழாக்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்ற காலங்களில் கடலுணவுகளின் விலை வெகுவாகக் குறைந்து காணப்படுவது வழமை. ஆனால் இம்முறை அப்பிடியில்லை. வழமைக்கு மாறாக கடலுணவுகளின் விலைகள் உச்சக் கட்டத்தில் உள்ளன.

மீன் சந்தைகளுக்கு மீன் வாங்கச் செல்பவர்கள் ஏமாற்றத்துடன் அதிக விலை கொடுத்தே வாங்கிச் செல்கிறார்கள்.

இத்தகைய "சீசன்" காலத்தில் கடலுணவுகளின் விலை அதிகரித்துக் காணப்படுவதற்கு என்னதான் காரணமாக இருக்குமென்று பலரும் பல்வாறு பேசிக்கொள்கிறார்கள்.

தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் இங்கு அதிகம் வருவதால்தான் இத்தகைய விலையேற்றம் என்றும், அத்துடன் தென்னிலங்கைக்கு மீன்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் தான் இந்தமாற்றம் என்றும் ஊகங்கள் வெளிப்படுகின்றன.

இந்நிலையில் உண்மை நிலை எதுவென்று அறிவதற்காக குருநகர், பாசையூர் கடற்கரையோரங்களுக்குச் சென்றோம்.

அங்குள்ள கடற்றொழிலாளர்களையும், மீன் கொள்வனவு செய்பவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினோம்!.

முதலில் குருநகரில் உள்ள கடற்றொழிலாளர்களைச் சந்தித்தோம்.




## கடற்றொழிலில் ஈடுபட்ட பலரும் மேசன் வேலைக்குச் செல்கின்றனர்

30 வருடமாகக் கடற்றொழிலை நம்பிவாழுகின்ற 60 வயதுடைய ஜேசுதாசன் என்பவர்,

இப்ப கடற்றொழில் என்பது படுமோசமான நிலைக்குள் தள்ளப்பட்டு விட்டது. கடலில மீன்களிரை இனமெல்லாம் அழிஞ்சு கொண்டுபோகிறது. மீன் பிடிக்கவெண்டு கடலுக்குள் போகிற நாங்கள் எதிர்பார்த்தளவு கிடைக்காமல் ஏமாற்றத்துடன் குறைந்தளவு மீன்களுடன் திரும்பி வருகின்றோம்.

- என்றார்.



" மீன்களின் இனம் அழிந்து போக என்ன காரணமென்று கருதுகிறீர்கள் என்று கேட்டபோது.

இப்ப மீன் பிடித்தடை தளர்த்தப்பட்டுள்ள நிலையில் நாம் எங்கு சென்றும் மீன் பிடிக்கக் கூடிய நிலையில் இருந்தும் கூட முன்னரை விட தற்போது எமது தொழில் நிலைமைகள் மோசமாக உள்ளது.

இதற்கு முக்கிய காரணம் "றோலர்" படகு மூலம் மீன் பிடிப்பதுதான். மாநகரசபைத் தேர்தல் காலத்தில் "றோலர்" மூலம் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அதனைப் பயன்படுத்தி நாங்கள் சாதரண 'றோலர்' படகுகள் மூலமாகவே மீன் பிடித்துக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால் இந்தியா, தென்னிலங்கை, மன்னார் ஆகிய இடங்களில் இருந்து வருகின்ற மீனவர்கள் "டபுள் றோலர்" படகுகளைப் பாவித்து 'மடி' மூலம் அடிவரை கிளறி எடுக்கிறார்கள். இதனால் கற்பாறைகள் உடைத்தெறியப்பட்டு சிறு சிறு மீன் குஞ்சுகளெல்லாம் அழிந்து போகின்றன. இதனால் எதிர்காலத்தில் கடலில் மீன் இனங்கள் அழிந்துபோய் எமது கடற்றொழிலே இல்லாமல் போகின்ற அபாயகரமான நிலை - யாரும் தடுக்க முடியாத சூழ்நிலை - கூட உருவாகும்.

**கவிநேசன்**

இந்திய மீனவர்கள் "றோலர்"களைப்பாவித்து மீன்பிடிப்பதை தடைசெய்ய வேண்டும் பலதடவை பல்வேறு தரப்பினரிடம் வேண்டுகோள் விடுத்தபோதும் அதுபற்றியாரும் அக்கறை கொண்டதாகத் தெரியவில்லை; நடவடிக்கை எடுத்ததாகவும் நாம் அறியவில்லை என்று மனவேதனையுடன் அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

அண்மையில் கடற்றொழில் அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தபோது "றோலர்" படகு மூலம் மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்படக் கூடாது அத்துடன் இந்திய மீனவர்கள் இங்குள்ள கடல்களில் அத்துமீறி மீன் பிடிப்பது தடைசெய்யப்பட வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் அதுபற்றி இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று மிகவும் வேதனையுடன் அந்தப் பெரியவர் தெரிவித்தார்.

சுமார் 23 வருடகாலமாக மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டு வருகின்ற கெலின் என்பவர்

கடற்றொழிலினை நம்பி சீவியம் நடத்தும் எமது வாழ்க்கை தினம் கண்ணீரில் கரைகிறது.

தண்ணீரில் மீன் அழுதால் அது யாருக்கும் தெரியப் போவதில்லை. அது போலத்தான் எமது வாழ்க்கையும் நகர்ந்து கொண்டிருக்கிறது.

யுத்தம் நடைபெற்ற காலத்திலும் சரி அது முடிவடைந்துள்ள காலத்திலும் சரி எமது துயரங்களும் முடிவில்லாமலே சென்று கொண்டிருக்கிறன.

எங்கேயோ உள்ளவர்கள் எல்லாம் எமது கடல்வளத்தினை நாசம் செய்து கொண்டிருக்கிறார்கள். நாங்கள் மட்டும் நிகழ்காலமும் எதிர்காலமும் கேள்விக் குறியாகித் தத்தளித்துக் கொண்டிருக்கின்றோம்.



தேர்தல் காலம் வந்ததும் அமைச்சர் கள், எம்.பிகள் என்று எம்மைத்தேடி பலர் படையெடுத்து வருவார்கள். அது முடிந்து போனால் அவர்களும் தலை மறைவாகி விடுவார்கள்.

தேர்தல் காலங்களில் வருகின்ற அவர்கள் எங்கள் கடற்றொழிலினை அபிவிருத்தி செய்து நவீன மயமாக்கித் தருவதாக உறுதி மொழிகளை மட்டும் அள்ளி வழங்குவார்கள். ஆனால் அதனை நடைமுறைப்படுத்தி செயல் வடிவம் கொடுக்க எவருமே முன்வருவதாக இல்லை. இந்திய "றோலர்" கள் தினமும் 200 ற்கு மேற்பட்டவை வந்து எமது கடலில் அதுவும் "டபுள் றோலர்களை" பயன்படுத்தி முழுவதையும் அள்ளிச் செல்கின்றன.

முன்பெல்லாம் மீன்பிடிக்கச் சென்றால் 50 இற்கு மேற்பட்ட "கூறு" மீன்களைப் பிடித்து வருவோம். ஆனால் இன்றைய நிலையில் இரண்டு அல்லது மூன்று கூறு மீன் பிடிப்பது கூட அரிதாகவே உள்ளது.

மீன்களைக் கொள்வனவு செய்வதற்கு கொழும்பில் இருந்து வருகின்ற "கூலர்"கள் கூட மீன்களைப் பெறமுடியாமல் செல்கின்றன.

முந்திய காலங்களில் கரைவலை, தூண்டுவலை என்பவற்றைக் கொண்டு தான் மீன்பிடிப்பார்கள். ஆனால் இன்றைய நிலையில் "டைனமெற்" (வெடிபோட்டு மீன் பிடித்தல்) தங்கூசிவலை, றோலர் எனப்பல்வேறு விதமான முறையில் தொழிலில் ஈடுபடுவதால் மீன் இனங்கள் கருவோடு அழிந்து விடுகின்றன.

எதிர்காலத்தில் மீன் பிடித்தொழில் என்பது அருகி அழிந்து போகும் நிலை உருவாகும் சாத்தியம் உள்ளது. இதனால் கடற்றொழிலில் ஈடுபட்ட இளைஞர்கள் பலர் தற்போது மேசன் தொழிலுக்குச் செல்கின்ற நிலை உருவாகியுள்ளது.

கடலில் மீன் பிடிக்கச் சென்றால் ஏமாற்றத்துடன் திரும்பிக் கொண்டிருப்பதால் தற்போது கடல் அட்டை பிடிக்கத்தான் நாம் அதிகம் செல்கின்றோம். அதுதான் இப்போது எமக்குக் கை கொடுக்கிறது.

இந்தச் "சீசனில்" மீன்கள் அதிகம் பிடிபட்டு அதனுடைய விலையும் வீழ்ச்சியடைந்து காணப்படும். ஆனால் இன்று அதனுடைய விலை அதிகரித்துக் காணப்படுவதற்கு இத்தகைய பிரச்சினைகளே முக்கிய காரணமாகும். என்று தெரிவித்தார்.

எமது நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு கடல் வளமும் முக்கிய பங்கினை வகித்துக் கொள்கிறதென்பது எவராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்நிலையில் கடற்றொழிலாளர்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகங்கொடுப்பதோடு அந்தத்தொழிலே இல்லாமல் போகின்றதொரு அபாயகரமான சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 18 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் கடற்றொழிலை நம்பியே தமது சீவியத்தினைக் கழித்து வருகிறார்கள். இவர்களுடைய எதிர்கால நலனைக் கருத்திற் கொண்டு துறைசார் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே இந்த மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கொன்றும்... இங்கொன்றும் பேசலாமா?

கணனி வலையில் கையகப்பட்ட குட்டிமின் ஒன்று... சின்னக்கதை ஆனால் இன்றைய உலகின் மனோநிலை இது தான் என்று' பட்டவர்தனமாகப் படம் பிடிக்கிறது. வளரத் துடிக்கும் வாலிப மகனைப் பார்த்து அவனை விடவும் அதிகம் துடிக்கும் அப்பா கேட்டார் மகனே நீ திருமணம் செய்யவில்லையா? செய்யவேண்டியதுதான் ஆனால் லாபகரமாக இருந்தால் நல்லது. அப்படியானால் பில்கேட்ஸ்சின் மகளை திருமணம் செய்கிறேன் என்றான். அடுத்த விமானத்தில் அமெரிக்கா சென்று பில்கேட்ஸை சந்தித்தார் அப்பா. பில்கேட்ஸிடம் தன் மகனின் கனவினை சொன்னார்.

''மகளுக்கு இன்னும் திருமண வயது ஆகவில்லை. கொஞ்ச நாளாகும். இருந்தாலும் சாதாரண நபருக்கு நான் எப்படி என் மகளை தர முடியும்...'' என பின்னால் வரக் கூடிய சகல கேள்விகளுக்கும் சேர்த்த ஒரே பதிலைச் சொன்னார். சுற்றி வளைக்காமல் சொல்லுங்கள். பெரிய பதவி பெரிய தகுதி என்று நீங்கள் எதிர்பார்ப்பது என்ன என்றார் விடாப்பிடி வேந்தர்.

''குறைந்த பட்சம் ஒருWorld Bank Vice President என்கிற அந்தஸ்து இருந்தால் தானே என் மகளைத் தரமுடியும். உங்கள் மகன் என்ன செய்கிறார். ஒரு கம்ப்யூட்டர் இன்ஜினியரா?'' என்று உதட்டைப் பிதுக்கினார் பில்கேட்ஸ்.'' No No World Bank Vice President நீங்கள் சம்மதித்தால் திருமணம் பற்றிப் பேசலாம்'' என்றார் தடாலடித் தந்தை. ''No Objection அப்படியானால் உங்கள் மகன் என் மாப்பிள்ளையாக முடியும்'' என்று கை குலுக்கினார் பில்கேட்ஸ். ''ஒரு வாரத்தில் சந்திக்கிறேன்'' என்றபடி அங்கிருந்து பயணப்பட்டு World Bank நிர்வாகத் தலைவர் அறைக்குள் நுழைந்தார் விடாக் கண்டர். ''உங்கள் நிறுவனத்தில் மிகச் செல்வாக்கு பெற்ற ஒரு நபரை Vice president ஆக Posting போட்டால் நன்றாக இருக்கும்..'' என்றபடி மகனுடைய C.D யை முன்னால் வைத்தார்.

''இல்லை ஏற்கனவே பலரை நியமித்துள்ளோம். இவற்றைப் பரிசீலிக்கிறோம் நேரம் வரும்பொழுது தகவல் தருகிறோம்'' என்று முடிக்கப் போனவர் ''நீங்கள் குறிப்பிடும் இந்த நபரின் மிக மிக விசேஷமான தகுதி என்ன என்று ஒரு வரியில் சொல்ல முடியுமா?'' என்று இழுத்தார் உலக வங்கித் தலைவர்.

''மிகப் பெரும் கோடீஸ்வரர் பில்கேட்ஸின் மாப்பிள்ளை'' என்றார். அசகாய சூர அப்பா. சட்டென்று நாற்காலியை விட்டெழுந்து'' ''முதலிலேயே சொல்லியிருக்க கூடாதா... உங்களை அநாவசியமாக காக்க வைத்துவிட்டேன். பில்கேட்ஸிடம் இதைப்பற்றி எதுவும் சொல்லி விடாதீர்கள்..'' என்று கூறி பத்தாவது விநாடி மகனுக்கான நியமனக் கடிதம் தகப்பனாரிடம் தரப்பட்டது.

எப்படி இருக்கிறது கதை? எது வேண்டுமானாலும் நடக்கும் அப்படி இப்படி அசைத்துப் பார்த்தால் முடியாதது கூட முடியும்... எல்லோருக்கும் தன்னை விட பெரியவன் எவனோ இருக்க முடியும் என்கிற பயம் அல்லது தாழ்வு மனப்பான்மை இருக்கிறது.. அதில் கை வைத்தால் எதையும் சாதிக்கலாம்.

நன்றி: சுகி சிவம்.

# 64 கலைகள்

பா.வாணி

- **காவியம்** - வாழ்த்து, தெய்வ வணக்கம், உரைக்கும் பொருள் உணர்தல், சிறந்த நாயகனைக் கோடல், நாட்டு வருணனை, நகர வருணனை, மலைச்சிறப்பு, கடல் வருணனை, பருவச்சிறப்பு, சூரிய சந்திர உதய அத்தமன அலங்காரம், திருமணம், முடிசூட்டுதல், பொழில் விளையாட்டு, நீர், மதுபானம், மக்கட்பேறு, கலைவிற் களித்தல், புவியியற் புலத்தல், மந்திரம், தாது, போர் மேற்செலவு, போர் புரிதல், வெற்றி, வழிநடை, பவனி, களவொழுக்கம், கற்பொழுக்கம், ஆற்றுச்சிறப்பு, திணைவளம், சூது, விளையாட்டு, உறுதி கூறல், காண்டம், சுருக்கங்களின் பாகுபாடு, பொருட்டுறை, மெய்ப்பாடு, ஒன்பான் சுவை, வனப்பு, உத்திமதம் என்ற காவிய இலக்கணம் முப்பத்தெட்டும் அமையுமாறு அறிவுடைச் சான்றோரால் யாக்கப் பெற்ற காவிய நூல்களைக் கற்றுணரும் அறிவு, மதம் என்ற காவிய இலக்கணம் முப்பத்தெட்டும் அமையுமாறு அறிவுடைச் சான்றோரால் யாக்கப்பெற்ற காவிய நூல்களைக் கற்றுணரும் அறிவு.
- **அலங்காரம்** - உவமை, உருவகம் முதலிய அணிவகைகளைக் கூறும் அலங்கார சாத்திர ஞானம்.
- **மதுர பாடனம்** - வாயினால் இனிமையாகப் பாடும் இசை ஞானம்
- **நாடகம்** - கதை, கற்பனை நிகழ்ச்சிகளைப் பல பாத்திரங்களின் வாயிலாக மக்களுக்கு அறிவிக்கும் மேடை நாடகக் கலையறிவு
- **திருத்தம்** - நடனக்கலை ஞானம்
- **சத்தப் பிரமம்** - எழுத்தின் ஒலியே தெய்வம் என்றும் கொள்ளும் வாதிகள் புனைந்த நூல் பற்றி அறிவது.
- **வீணை** - வீணை செய்வதற்கேற்ற குற்றம் நீங்கிய மரங்களின் வகை, வீணையின் உறுப்புக்களாகிய கோடு, பத்தர், திவவு, முறுக்காணி முதலிய உறுப்புக்களின் அமைப்புமுறை, வீணையில் பொருத்தப்பெறும் நரம்பின் தன்மைகள், பண், திறம், திறத்தறம் முதலிய இசை அமைப்பு முறைகள், தாள வகைகள், அவைகளைக் கையாளும் முறை ஆகியவற்றை அறிந்திருத்தல்.

*(வளரும்)*

# சோதிடம் பலிக்குமா?



ஒரு காட்டில் ஒரு குரு இருந்தார். அவரிடம் இரண்டு சீடர்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஐயா எங்களுக்கு ஜோதிடம் கற்க வேண்டும் என்று ஆசை. அதுதான் உங்களிடம் வந்தோம் என்றார்கள். சரி சொல்லிக் கொடுக்கிறேன் என்றார்.

ஆறு மாதத்துக்கான எல்லா பாடத்தையும் நடத்தி முடித்தார். அதுக்கப்புறம் சீடர்களைக் கூப்பிட்டார். சீடர்களே இங்கு தெரிய வேண்டியது எல்லாம் தெரிந்துகொண்டீர்கள். வெளியில் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். அதையும் அறிந்து கொண்டு வாருங்கள் என்று அனுப்பி வைத்தார்.

வெளியிடத்துக்கு வந்த சீடர்கள் ஒருநாள் சிற்றூர் வழியே நடந்து போய்க் கொண்டிருந்தார்கள். தாகமாக இருக்குது தண்ணீர் குடித்தால் நன்றாக இருக்கும் என்றான் ஒருவன். அங்கு ஒரு பெண் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துக் கொண்டிருந்தாள். மண்குடத்தில் கயிற்றைக் கட்டித் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த பெண் அம்மா என்று இவர்கள் அழைக்க அதிர்ச்சியில் கயிற்றை விட்டுவிட்டாள். மண்குடம் கீழே விழுந்து துண்டு துண்டானது. சத்தம் கேட்டு ஊர் மக்கள் சிலர் வந்தனர். இரண்டு பேரையும் ஊர்த்தலைவரிடம் கொண்டுபோய் நிறுத்தினார்கள். ஊர்த் தலைவரின் மருமகனிடம் சீடர்கள் தாம் வந்த விதத்தைச் சொன்னார்கள்.

உங்களுக்கு சோதிடம் தெரியுமா? அப்படி என்றால் எனது மருமகனின் ஜாதகத்தைப் பார்க்க வேண்டும். அவரைப் பத்து ஆண்டு காலமாகக் காணவில்லை. அவர் உயிருடன் இருக்கிறாரா? திரும்பி வருவானா? வரமாட்டானா? இரண்டு கேள்விகளுக்கும் பதிலைக் கேட்கிறேன் என்று தலைவர் கேட்டுக் கொண்டார்.

இரண்டு பேருக்கும் தனித்தனியாக ஜாதகம் கொடுக்கப்பட்டது. தனித்தனி அறையில் இருந்து ஆராய்ந்துவிட்டு வெளியே வந்தார்கள்.

ஒரு சீடர் உங்கள் மருமகன் வரவாய்பபில்லை. தேட வேண்டாம் என்றும் மற்றவன் அவர் ஒரு வாரத்திற்குள் திரும்பி வருவான் என்றும் பதில் சொன்னார்கள்.

இரண்டு பேரும் ஒரு குருவிடம்தானே படித்தீர்கள். இரண்டு விதமாக பதில் சொல்கிறீர்கள். சரி ஒரு வாரத்திற்குள் யார் சொல்வது உண்மை என்று தெரிந்துவிடும். இருவரும் இங்கே இருங்கள் என்று தீர்ப்பு வழங்கினார்.

குரு சீடர்களைத் தேட ஆரம்பித்தார். கடைசியாக தலைவர் வீட்டைச் சேர்ந்தார். தலைவருக்கு மகிழ்ச்சி. குருதான் தன் மருமகன் அதுவரை நடந்ததைக் குருவுக்கு விளக்கினார்கள்.

சீடர்கள் விளக்கம் கூறினார்கள். குடம் உடைந்தால் அபசகுணம். அதுதான் கணவன் திரும்பி வரமாட்டான் என்றும் குடம் உடைந்த போது அதன் மண்ணும் மண்ணோடு கலந்தது. அதுதான் கணவர் திரும்பி வருவார் என்றும் பதில் கூறினார்களாம்.

இரண்டு பேர் சொன்னதும் சரிதான். சொன்னபடி நான் வந்து விட்டேன். அதே சமயத்தில் நான் சந்நியாசி ஆகவே கணவன் என்ற உறவில் நான் சேர முடியாது. அதுவும் உண்மைதான் என்று குரு விளக்கம் கூறினார்.

கோ.சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

## தருபவர்: வித்யா

### மேடம்


நினைத்தது போல எல்லாம் நடக்கும் நாள். பெண்கள், விரும்பிய சில பொருள்களை வாங்கலாம். பிரியமான சிலருக்காக உதவிகளைச் செய்வீர்கள். சில காரியங்களில் கடும் அலைச்சல் இருந்தாலும் அதற்கேற்ற ஆதாயத்தைப் பெறுவீர்கள். வழக்கு விவகாரங்கள் சாதகமாக அமையும். பிள்ளைகளை நினைத்துப் பெருமைப் படுவீர்கள்.

### இடபம்

வழிபாடுகள், தர்ம காரியங்களில் நாட்டம் செல்லும். ஆரோக்கியப் பாதிப்புகளைத் தவிர்க்க சரியான நேரத்திற்கு சாப்பிட வேண்டும். பொருளாதார நிலைமையில் திடீர் பற்றாக்குறை ஏற்படலாம். சொந்த பந்தங்களுடன் சேர்ந்து முக்கியமான வேலை ஒன்றைச் செய்வீர்கள். எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். கனவுத் தொல்லையுண்டு.

### மிதுனம்

தொலைபேசி வழிச் செய்திகள் சந்தோஷம் தருவதாக அமையும். நண்பர்கள் வட்டம் விரிவடையும். தொழில் ரீதியாக சிலரிடம் அவசர பண உதவிகள் வாங்கலாம். வியாபாரிகள் புதிய வாடிக்கையாளர்களைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். உறவினர்கள் சிலரிடம் சொந்த விடயங்கள் குறித்து மனம் விட்டுப் பேசுவீர்கள். ஆதாயமான நாள்.

### கடகம்

நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்களைத் தேடி வரலாம். ஆரோக்கியக் குறைவுகளை தவிர்க்க மருத்துவச் சிகிச்சைகளை மேற்கொள்வீர்கள். உடன் பிறப்புகள் விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். எதிர்பாராத திடீர் பணவரவுகளுக்கு வாய்ப்புகள் உண்டு. இருந்த இடத்திலிருந்தே சில வேலைகளை முடிப்பீர்கள்.

### சிங்கம்

கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். கடிதங்கள் மூலம் முக்கியமான தகவல்கள் வந்து சேரும். தொழில் வியாபார ரீதியாக திடீர் பயணங்கள் செல்லலாம். கடன் மிகுதிகளை வசூலிப்பதில் சுணக்கம் ஏற்படலாம். நண்பர்கள் சிலருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி பாசம் அதிகரிக்கும்.

### கன்னி

முயற்சிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய நினைத்தாலும் மற்றொருவர் அதைத் தடுத்து விடலாம். அவசர செலவுகளைச் சமாளிக்க உறவினர்களிடம் கடன் உதவி கேட்கலாம். அயலாரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பெண்கள் விடயத்தில் சபலங்களைத் தவிர்க்க வேண்டும்.

### துலாம்

வியக்க வைக்கும் செய்திகளைக் கேட்கலாம். கடுமையான இழுபறிக்குப் பின்னரே முடியும் என நினைத்த காரியம் ஒன்று எளிதில் முடிந்துவிடலாம். பெரிய மனிதர்கள் மூலம் சில உதவிகள் கிடைக்கும். சகஊழியர்களுடன் சேர்ந்து கூட்டாக மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கொண்டாட்டங்கள் உண்டு.

### விருச்சிகம்

எந்த வேலையையும் நாளை என தள்ளிவைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள். சிலர், உங்களிடம் திடீரென உதவிகள் கேட்டு சிக்கலான நிலைமைக்கு ஆள்படுத்தலாம். வேலைப்பளுவைக் குறைக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு பல வேலைகளைச் செய்யலாம். உங்களுக்கு விரோதமாகச் செயற்படும் ஒருவரை அடையாளம் காண்பீர்கள்.

### தனுசு

ஆலய வழிபாட்டின் மூலம் ஆனந்தம் பெறலாம். மனைவி வழியில் கடும் வாக்குவாதங்கள் ஏற்படலாம். தொலைந்து விட்டதாக நினைத்த பொருள் ஒன்று மீண்டும் கிடைக்கலாம். சுபகாரிய விடயங்களில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களை எதிர்பாராமல் நீங்களே சில வேலைகளைச் செய்வீர்கள். அயலாருக்கு சில உதவிகளைச் செய்வீர்கள்.

### மகரம்

கடந்த கால அனுபவங்களை நினைத்துப் பார்த்து நண்பர்களுக்கு உதவி செய்வீர்கள். உறவினர் ஒருவர் உங்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்கலாம். செலவுகளைக் குறைக்க நினைத்தாலும் ஏதாவது ஒரு வகையில் திடீர் செலவு ஏற்படலாம். வீண் பழிகளைத் தவிர்க்க தொழிலில் கவனம் அவசியம். பிற மதத்தினரால் அனுகூலம் உண்டு.

### கும்பம்

எதிர்பாராத நல்ல நிகழ்ச்சிகள் நடக்கும் நாள். தொழில் போட்டிகளை முறியடித்து வெற்றி பெறுவீர்கள். உங்களின் யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தவர்கள் இப்போது ஆதரவு தெரிவிப்பர். வீட்டுச் செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் பாராட்டுக்களைப் பெறுவர்.

### மீனம்

கௌரவம், வீண் பிடிவாதங்களைத் தவிர்க்க வேண்டும். சிலரிடம் உங்களின் பெருமையைப் பேசி சிக்கலில் மாட்டிக் கொள்வீர்கள். திட்டமிட்ட காரியம் ஒன்றை நாளை செய்யலாம் என தள்ளிவைப்பீர்கள். சிலரின் வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்கலாம். பரிகாசப் பேச்சுக்களை தவிர்க்க வேண்டிய நாள்.

---


## திருமணப் பொன்விழாக்காணும் தம்பதியரை வாழ்த்துகின்றோம்

50th WEDDING ANNIVERSARY 31.08.2010

இறைவன் துணைகொண்டு இல்லற வாழ்வில் இணைந்து இன்று (31.08.2010) செவ்வாய்க்கிழமையுடன் 50ஆண்டுகள் இனிதாகப் பூர்த்தி செய்த சில்லாலை வடக்கைச் சேர்ந்த எம் அன்புக்கும் மதிப்புக்குரிய
''திரு. திருமதி கு.க.யேசுதாசன் மேரி நீற்றம்மா''
தம்பதியினரை இன்றுபோல் என்றும் பல்லாண்டு வாழ இறையருள் வேண்டி வாழ்த்துபவர்கள்.



திரு.திருமதி யேசுதாசன்-அன்னமேரி, பிள்ளைகள்.

இல.25, மூளாய் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (102517)

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி றோட்டிலிருந்து 50 யார் தொலைவில் 2ஆவது காணி, 6 பரப்பு நவீன வசதிகள் கொண்ட 2000 சதுர அடிக்கு மேற்பட்டது. சுற்று மதிலுடன் கராஜ், கொட்டில் வசதிகளுடன் கூடிய வீடு, வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0776522098, 0775099332, 0214921490

## நல்லூரான் உற்சவ தினங்களில் அதிரடி மலிவு விற்பனையில்...

வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட குளியலறை சாதனங்கள், சலமாபிள் வகைகள், கொமட் செட் வகைகள், பைப் வகைகள், "DUKE" பெயின்ற் வகைகள், கால்மிதி பேசன்கள் போன்றவற்றை தரமான, மலிவான விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

போக்குவரத்து வசதி இலவசம்.

ஸ்ரார் செராமிக்ஸ்
இல.05, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 0215672061, 077 7578277.

## கண்ணீர் அஞ்சலி



Dr. யமுனா மார்க்கண்டு
(M.B.B.S., M.D., M.R.C.P. (UK)
MILTON KEYNIS HOSPITAL, U.K)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பரத்தானைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

859B, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
திரு.திருமதி சிவராசா ஞானமலர் குடும்பத்தினர். (சி/570452)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தாயின் மடியில் 18 ★ 10 ★ 1945



ஆண்டவன் அடியில் 01 ★ 08 ★ 2010

அமரர் முத்தையா தணிகாசலம் J.P.
(ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்)

கடந்த 01.08.2010 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (31.08.2010) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்வுக்கு வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும்மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

காளி கோயிலடி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. குடும்பத்தினர்.


## குடிதண்ணீர் விநியோகம் தடை குறித்து முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்.நகர் கோயில் வீதிப் பகுதியில் குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகம் கடந்த சில தினங்களாகத் தடைப்பட்டுள்ளதால் அப்பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பாக உரிய அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்தும் இதுவரை எதுவித பயனும் கிடைக்கவில்லை என்று பிரதேசவாசிகள் முறையிடுகின்றனர். (எ-23)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.31

கிறீன்பீல்ட் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (204)


## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், பூராடம், தனு இராசி, 1978இல் பிறந்த உயரம் 5'5'' கொழும்பில் பிரபல வங்கியில் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 0775559437 (102680)

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்
வல்லி நவரத்தினம்

தோற்றம் 05✱09✱1946
மறைவு 11✱09✱2009

திதி: ஸப்தமி 31.08.2010

அப்பா உங்கள் அன்பான முகம் தேடி கண்கள் பனிக்கின்றன
கனிவான கதை கேட்க மனம் மிக ஏங்குகிறது
நினைத்தும் பார்க்கவில்லை - நாம்
இவ்விதம் உம்மை இழப்போம் என்று
என்றென்றும் உங்கள் நினைவுகள் - எம்
நெஞ்சோடு கலந்திருக்கும்.
'ஓம் சாந்தி சாந்தி சாந்தி''

கலை ஒளி வீதி, சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி. (102675)
மனைவி - ந.வள்ளியம்மை
பிள்ளைகள் - ஸ்ரீதரன் - லதா
தங்கேஸ்வரன் - உஷா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறத்தான் அனுமதியில்லை; பிணத்தையாவது சொந்த இடத்தில் எரிக்க விடுங்கள்!



## இன்னமும் கண்ணீரில்தான் வன்னி மக்களின் வாழ்வு

பதிவு 5

வானம் இன்னமும் தெளிந்தபாடாக இல்லை. மாலை நேரத்து மங்கல் வெளிச்சமும் முகில்களின் கருமையும் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயச் சூழலிலை ஒருவித பரபரப்புக்குள் தள்ளுகிறது. இன்றைக்கும் மழை வரப்போகிறதோ? என்ற ஏக்கத்தோடு அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்வதற்காக ஒவ்வொருவரும் கால்களில் சக்கரத்தைக் கட்டிக்கொண்டவர்கள் போல சுறுசுறுப்படைகிறார்கள். கூடாரங்களில் முன்புறமாக காயப்போட்டிருந்த துணிமணிகளும், விறகுகளும் கூடாரத்துக்குள் பத்திரமாக ஒளிந்துகொள்கின்றன. நேற்றுப் பெய்த மழையால் நிலமெங்கும் சேறாகிப்போன கூடாரத்தை எப்படியேனும் செப்பனிட்டுவிட வேண்டும் என்ற வேகத்தோடு தன்னந்தனியாக சில கம்புகளை நட்டு தறப்பாளை விரிக்கும் முயற்சியில் 30 வயதான பெண் ஒருவர் கண்ணுங் கருத்துமாய் இருந்தார். அவருக்குத் துணையாக எந்தவொரு ஆண் மகனையும் காணவில்லை. சிறு குழந்தைகள் அந்தப் பெண்ணுக்குப் பக்கத்தில் தம்பாட்டில் 'நுள்ளுப்பிறாண்டி, கிள்ளுப்பிறாண்டி, கொக்கா தலையில் என்ன பூ? என்று கூறிக் கைகளைக் கிள்ளிக்கிள்ளி விளையாடிக் கொண்டிருந்தார்கள். போர் அந்தக் குடும்பத்தின் ஆண் மக்கள் அனைவரையும் தனது பசிக்கு இரையாக்கி இருக்க வேண்டும். குடும்பத் தலைவர்களை இழந்திருந்தாலும் தன்னுடைய குழந்தைகளை எப்பாடுபட்டேனும் கரைசேர்த்துவிட வேண்டும் என்ற வேட்கை அந்தப் பெண்ணின் முயற்சியில் தெரிந்தது.

போர் நமது சமூகத்தில் பெண்களைத் தலைவர்களாகக் கொண்ட நிறையக் குடும்பங்களை உருவாக்கிவிட்டது. தனியே தங்கள் குழந்தைகளை, தங்கள் பெற்றோரைச் சுமக்க வேண்டிய பொறுப்பு பெண்களின் தலையில் இதன்மூலம் சுமத்தப்பட்டிருக்கிறது. போர் நமது சமூகத்தில் இருந்துவந்த ஆணில் தங்கியிருத்தல் என்ற நிலையை இதனூடாக மாற்றம் பெற வைத்துவிட்டது. எனினும் எந்தவொரு பொருளாதார ரீதியிலான தளமும் அற்று, கூலிவேலைக்கு இத்தகைய பெண்கள் செல்வதனால் தமது குழந்தைகளைக்கூடச் சரிவரக் கவனிக்கமுடியாமற் போகிறது. கூலிக்குப் போனாலும் இப்போதெல்லாம் சொற்ப சம்பளமே கிடைப்பதாகவும் அவர்கள் சொல்கிறார்கள்.

ஆண்களும் தமது வருமானத்துக்கு வேறு வழியின்றி தமக்குத் தெரியாத வேலைகளுக்கெல்லாம் போகத் தொடங்கிவிட்டார்கள். இல்லாவிட்டால் அவர்களின் வீட்டில் அடுப்புக்குப் பதிலாக பிள்ளைகளின், பெற்றோரின், மனைவியின் வயிறுகளே எரியவேண்டிய நிலை வந்துவிடும். இவ்வாறு தமக்கு முன்பின் தெரியாத தொழில்களுக்குச் செல்லும்போது ஆபத்துக்களையும் அவர்கள் விலைகொடுத்து வாங்க நேரிடுகிறது.

''இந்தப் பிள்ளையைப் பாருங்கோ இவளுக்கு இப்பதான் 23 வயது. ஆனா இந்தச் சின்ன வயதிலை கூலி வேலைக்குப் போன புருசனைப் பறி கொடுத்திட்டு நிக்கிறா. சண்டையிலை எத்தினையோ ஆபத்துகளுக்குள்ளை இருந்தெல்லாம் தப்பிவந்துபோட்டு இப்ப அநியாயமா அவனைப் பறிகொடுத்துப் போட்டா'' என்று அங்கே வெறித்தபடி நின்றிருந்த இளம்பெண் ஒருவர் பற்றி அவரது உறவுக்கார முதிய பெண்ணொருவர் எமக்குக் கூறினார். தன்னுடைய கணவனுடைய மரணம் பற்றித்தான் நாங்கள் கதைக்கிறோம் என்பது அந்தப் பெண்ணுக்கும் தெரிந்திருக்க வேண்டும். எங்கள் உரையாடல் அவள் காதில் விழுந்த அதே கணத்தில் கணவனின் மரணமும் அவள் கண்முன்னே ஞாபகத்துக்கு வந்திருக்க வேண்டும். எந்தவிதச் சலனமும் இல்லாமல் கண்கள் வெறித்திருக்க, சட்டென விழிநீர் அவள் கன்னங்கள் வழியே கோடாக இறங்கியது.

அந்தப் பெண்ணின் கணவனது பெயர் பாலச்சந்திரன் சிவகுமார் (வயது 27). குடும்பத்தைக் காப்பதற்கு வேறு வழியெதுவும் தெரியாத நிலையில் மண்ஏற்றி உழைப்பதற்காகக் கூலி வேலைக்குப் போனார். அப்படித்தான் அன்றைக்கும் மனைவியிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு சென்ற சிவகுமார், இரணைமடுக்குளம் வான்பாயும் இடத்துக்குச் சமீபமாக உள்ள மணற்குவாரியில் மண்ணை ஏற்றிக்கொண்டிருந்தார். ஒரு சிறிய சுரங்க வடிவிலேயே மணலைத் தோண்ட வேண்டியிருந்தது. சுரங்கத்தின் நடுப்பகுதிவரை சென்று தன்னை மறந்தநிலையில் வேலையிலேயே சிவகுமார் ஈடுபட்டிருந்தபோதுதான் அந்த விபரீதம் நிகழ்ந்தது. மின்னாமல் முழங்காமல் சட்டென வருகிற மழைபோல் எந்தவிதமான சப்தங்களுமின்றி பொத்தென்று அந்தச் சுரங்கத்தின் மேலிருந்த மண்திட்டு இடிந்துவீழ்ந்தது. அவ்வளவுதான்! அதற்குள் சிக்குண்டுபோன சிவகுமாரைப் பிணமாகத்தான் மீட்கமுடிந்திருக்கிறது.



அடைமழை வந்து அழித்தாலும் விடாது கட்டப்படும் வீடு

''எங்களைச் சொந்த இடத்துக்கு விட்டிருந்தால் அவன் ஏன் மண்கிள்ளுற கூலி வேலைக்குப் போகப் போகிறான். அங்கை தோட்டத்திலையோ துரவிலோ வேலை செய்தால் இப்பிடியொரு அவச்சாவு வருமோ?'' என்று நிகழ்ந்தவற்றை நமக்குச் சொன்ன முதிய பெண்மணி, தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மண் கிள்ளப்போன இடத்தில் மரணித்துப் போன சிவகுமார் போரின் எல்லாப் பயங்கரங்களையும் தாண்டி எப்படியாவது தன்னுடைய சொந்த இடத்துக்கு - சாந்தபுரத்துக்கு - மீண்டுவிட வேண்டும் என்ற பேரவாவில் இங்கு வந்துசேர்ந்தவர். எனவே அவரது உடலையாவது - இன்னமும் மீள்குடியேற அனுமதிக்கப்படாத - சாந்தபுரத்திலுள்ள மயானத்தில் தகனம் செய்ய வேண்டும் என அந்த இடைத்தங்கல் முகாமில் உள்ளவர்கள் முடிவு செய்தார்கள். சாந்தபுரத்தில் சிவகுமாரின் உடலைத் தகனம் செய்வதுதான் அவருக்குத் தாம் செய்யும் உண்மையான இறுதி மரியாதை என்று சாந்தபுர மக்கள் எண்ணினார்கள். ஆனாலும் அனுமதி கிடைப்பதென்பது அவ்வளவு இலேசாக இருக்கவில்லை. அதிகாரங் கொண்ட எல்லோரது கதவுகளையும் சாந்தபுரத்து மக்கள் தட்டினார்கள்.

''எங்களைத்தான் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த இழுத்தடிக்கிறீர்கள். இடைத்தங்கல் முகாம்களில் தொடர்ந்தும் எங்களைத் தடுத்துவைத்திருக்கிறீர்கள். தன்னுடைய சொந்த இடத்தில் தான் உயிர்போக வேண்டும் என்ற விருப்போடு இவ்வளவு இன்னல்களையும் தாண்டிவந்த சிவகுமாரின் உடலையாவது எங்களூரில் உள்ள மயானத்தில் எரிப்பதற்கு அனுமதி தாருங்கள்'' என்று பிணத்தைத் தகனம் செய்யாமல் - ஒரு போராட்டம் போல - சாந்தபுரத்து மக்களின் தொடர்ச்சியான கோரிக்கை அதிகாரமுள்ளோரின் இதயத்தை இளகவைத்தது. சிவகுமாரின் பிணத்தைச் சாந்தபுரம் மயானத்தில் தகனம் செய்ய அனுமதி கிடைத்தது. கடைசியாகத் தன்னுடைய சாவின்மூலம் சாந்தபுரத்து மக்கள் அவர்களது சொந்த மண்ணைப் பார்ப்பதற்குரிய சந்தர்ப்பத்தைச் சிவகுமார் ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

சிவகுமாரின் இறுதி யாத்திரையைச் சாட்டாக வைத்தாவது தம்முடைய சொந்த இடத்தைப் பலரும் பார்க்க முடிந்தது. நீண்ட நாட்களுக்குப் பின்னர் தங்கள் சொந்த மண்ணைப் பார்த்து மகிழச் சென்றவர்களுக்கு தலையிழந்துபோன தென்னைகளும், சிதைந்துபோன வாழைத்தோட்டங்களும், உருக்குலைந்த வீடுகளுமே காட்சிப்பொருள்களாகக் காணக்கிடைத்தன. தென்னைகளையும் வாழைகளையும் யானை அடித்திருப்பதாகச் சாந்தபுரத்து மக்கள் தெரிவிக்கின்றனர்.

''எங்கடை இடங்களிலை மிதிவெடி இருக்கெண்டு சொல்லித்தான் போகவிடாமல் மறிச்சு வைச்சிருக்கிறாங்கள் ஆனா அது உண்மையில்லை. ஏனெண்டா அண்டைக்கு (சிவகுமாரின் மரணச்சடங்கு அன்று) எங்கடை இடங்களுக்குப் போனனாங்கள் அப்ப எந்த மிதிவெடியும் வெடிக்கேல்லை. ஏன் காரணம் இல்லாமல் இந்தப் பள்ளிக்கூடத்துக்குள்ளை எங்களை அடைச்சு வைச்சிருக்கிறாங்கள் எண்டு தெரியேல்லை. இஞ்சை இருக்கிற நேரம் எங்களைச் சொந்த இடத்துக்கு விட்டிருந்தாலாவது எங்கடை தென்னையளையும், வாழையளையும் ஏலுமட்டும் காப்பாத்தி இருக்கலாம். இப்ப அதுகளையும் அழிச்சு, எங்கடை எதிர்காலத்தையும் அரசாங்கம் அழிக்குதோ எண்டுதான் நினைக்கிறம். முகாமிலை இருந்து வெளியாலை வரேக்கை எங்கடை சொந்த இடத்துக்குப் போய் உயிரைக்குடுத்தாவது வேலைசெய்து ஆறுமாதத்துக்குள்ள எப்பிடியாவது பழைய நிலைக்கு வந்திடுவம் எண்டுதான் நினைச்சம். ஆனா இஞ்சை



உள்ளக்கிடக்கைகளை வெள்ளமாய் வெளிப்படுத்தும் மக்கள்

எல்லாமே தலைகீழ். இப்ப உழைக்க வேணும்; முந்தினதைவிட நல்ல நிலைக்கு வரவேணும் எண்ட நினைப்பு இல்லாமல் போட்டுது. இப்ப ஏதோ தந்ததை வாங்கிச் சாப்பிட்டம். நித்திரை கொண்டோம். எழும்பினோம் பிறகும் பழையபடி தந்ததை வாங்கிட்டுச் சும்மாதான் இருக்கிறம். இஞ்சை இருக்கிறதை விட பேசாமல் முகாமிலையே எங்களை இருத்தியிருக்கலாம்.'' என்று நாலா திக்குகளிலிருந்தும் திராவகத்தின் தாக்கு திறனோடு கூடிய சொல்லம்புகள் எங்களை நோக்கி வரத்தொடங்கின. அந்த மக்களின் ஏக்கம் நனவாக வேண்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர நாங்களும் என்ன செய்ய முடியும்? மக்களின் அங்கலாய்ப்புகள் குறைந்தபாடாக இல்லை. கூலி வேலைக்குச் சென்ற பெண்ணொருவர் அவசரமாக எம்மை நோக்கி வந்தார். அவரும் இன்றைக்கு தன் சொந்த மண்ணில் தனக்கேற்பட்ட வலியை எம்மோடு பகிர்ந்துகொண்டார். அந்த வலியை இரணைமடுக் குளத்தோடு வாழ்க்கையைப் பிணைத்துக்கொண்ட மக்களின் அழுகை ஒலியாகவும் எமக்குப் பட்டது.

(பயணம் தொடரும்)

ஔண்யன் — தமிழரசன்



குனிந்தபடியே தொடரும் இவர்களின் கூடார வாழ்வு

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



சண்டிலிப்பாய் மேற்கு மணிமேகலை முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுவிழா அண்மையில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் விருந்தினர்கள் மாணவர்களின் 'பான்ட்' வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதையும், மாணவி ஒருவர் விருந்தினர்களுக்கு கைலாகு கொடுத்து வரவேற்பதையும் படங்களில் காணலாம். (9)

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



**சீவரத்தினம் தனஞ்செயன்**

மலர்வு 23.04.1940 உதிர்வு 11.09.2009

இரண்டாம் ஆண்டு



திருமதி
**தனஞ்செயன் யோகேஸ்வரி**

மலர்வு 17.11.1942 உதிர்வு 31.02.2008

எம்மை ஆளாக்கி அவைதனில்
முந்தியிருக்கச் செய்த தெய்வங்களே
உம்மை நினைந்து நினைந்து
எந்நாளும் வணங்குகிறோம்
இனி எப்பிறப்பில் உம்மைக் காண்போம்.

சிலம்புப் புளியடி,
சங்கானை.
(102674)

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள்.

# பிரி. சிறைகளிலுள்ள இலங்கையர்களை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை

கொழும்பு, ஓக. 31

பிரிட்டன் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 147 இலங்கையர்களை விடுதலை செய்வதற்கு அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் பிரிட்டனிற்குள் பிரவேசித்து தங்கியிருந்த நபர்களே இவ்வாறு சிறைகளில் வாடுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பிரிட்டன் சிறைகள் மற்றும் தடுப்பு முகாம்களில் 147 கைதிகள் வாடுகின்றனர்.

கைதிகளை விடுதலை செய்வதற்காக பிரிட்டனிற்கான இலங்கைத் தூதரகம் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களைப் பார்வையிட்டுள்ளதுடன், பிரிட்டன் அதிகாரிகளுடன் இலங்கைத் தூரகம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

**ஒத்துமாறல்**

வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்விப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் அதே பாடப் பகுதியில் உள்ள கிளிநொச்சி வலய ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகிறார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்புகளுக்கு
0774650911, 0113050906

## 26ஆவது பிறந்தநாளும் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



அமரர்
**தங்கராஜா சுஜீபன்**


மண்ணில் 31.08.1984 விண்ணில் 16.11.2007

பொக்கிசமாய் எமக்கு
கிடைத்து
பாதியிலே எம்மை
பரிதவிக்கவிட்டுப்
போனாலும், என்றும் உன்
நினைவலைகள்
எம்மைவிட்டு மாறாது.

420, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (102684)

என்றும் உன் நினைவுடன்,
அம்மா, அக்கா (Dr.த.சுபாஜினி)

# அழியாத நினைவில் ஆண்டு இரண்டு



அமரர்

# நித்தியானந்தன் துஷ்யந்தன்

(யா/இந்துக் கல்லூரி A/L Maths 2001 பழைய மாணவன்,
Malaysia UCTI கல்லூரி மாணவன்)

அன்னை மடியில் 14.02.1982

திதி: பிரதமை (09.09.2010)

அரக்கர் பிடியில் 31.08.2008

எம் குடும்பத்தில் விளைந்த முதல் முத்தே துஷ்யந்தன்
என நாமம் சூட்டி சிறப்புடன் வளர்த்து குடும்பத்திற்கு
பெருமை சேர்க்கும் நேரத்தில் பாவிகள் கூட்டம்
உனக்குப் படுகுழி தோண்டினரே!
வஞ்சகரின் சதியால் எம் வைரத்தைத் தொலைத்துவிட்டு
வாழ்நாள் முழுவதும் தேடிக்கொண்டு இருக்கின்றோம்
உன் வசீகரச் சிரிப்பைக் காண முடியவில்லையடா!
எம் கண்ணீரைக் காணிக்கை ஆக்கி தூவுகின்றோம்
ஏற்றுக் கொள்வாயடா!
மீண்டும் பிறப்பெடுத்து எம் துயர்போக்க
எம்மிடமே வந்துவிடு துஷி !!!

120, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (102681)

உன் பிரிவால் மீளாத் துயருறும்
அம்மா, சகோதரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பாதுகாப்பிற்குத் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே திகழ்கிறார் கே.பி.

## பயங்கரவாத ஒழிப்பு நிபுணர் சேனக ஜயசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 31

இலங்கையின் தேசியப் பாதுகாப்பிற்கு விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே திகழ்கின்றார் - என்று சர்வதேச பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான நிபுணர் பேராசிரியர் சேனக ஜயசேகர தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பை இல்லாதொழிக்கும் அரசின் முயற்சிகளுக்கு குமரன் பத்மநாதன் தொடர்ந்தும் அச்சுறுத்தலாகவே திகழ்கின்றார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புலிகளின் சர்வதேச வலையமைப்புடன் குமரன் பத்மநாதன் தொடர்ச்சியாக உறவுகளைப் பேணி வருகிறார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு -

விடுதலைப் புலிகளின் மொத்த சொத்துகளை மதிப்பீடு செய்வதில் சிக்கல் நிலைமை காணப்படுகிறது எனவும், அநேகமான சொத்துக்கள் மறைக்கப்பட்டு அல்லது வேறும் நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

தற்போது பிரிட்டனில் வாழ்ந்து வரும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவர் ரெஜியிடம் 5 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான சொத்துக்கள் காணப்படுகின்றன.

தனி எஞ்சின்களைக் கொண்டு இயங்கக் கூடிய ஆறு விமானங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் எரித்திரியாவில் பாதுகாப் பாக பேணி வருகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டுமானால் ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் புகலிடக் கோரிக்கையாளர் குறித்த சட்டங்களில் திருத்தம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான முகவர் நிறுவனத்தின் பரிந்துரைகளுக்கு ஏற்ற வகையில் உலக நாடுகள் இலங்கையர்களுக்கு அடைக்கலம் வழங்க வேண்டும்.

- இப்படி அவர் தெரிவித்துள்ளார். (சி)

# ஆஸிக்கு ஆள்களைக்கடத்தல்: புலிகளுக்குத் தொடர்பில்லை

## கடற்படைப் பேச்சாளர் தகவல்

கொழும்பு, ஓக. 31

வெளிநாடுகளுக்குச் சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தும் நடவடிக்கைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் தொடர்பில்லை எனக் கடற்படைப் புலனாய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

சமீபத்தில் மாரவிலப் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு வெளியேற முற்பட்ட ஐந்து பேரைக் கைது செய்ததன் மூலம் இந்த உண்மைகள் வெளிப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இந்தச் சட்டவிரோத ஆட்கடத்தல் வர்த்தகம் இடம்பெற்று வந்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் ஆஸ்திரேலியாவிற்கு செல்லும் நோக்கில் மாரவில ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆஸ்திரேலியா மற்றும் ஏனைய நாடுகளுக்குச் செல்வதற்காக நபர் ஒருவரிடம் தலா 12 லட்ச ரூபா அறவீடு செய்யப்படுகிறது என விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பில்லை என கடற்படைப் பேச்சாளர் கப்டன் அதுல செனரத் தெரிவித்துள்ளார்.

நீர்கொழும்பு, கிழக்கு மற்றும் குருணாகல் ஆகிய பகுதிகளில் இந்தச் சட்ட விரோத ஆட்கடத்தும் நடவடிக்கைகளை ஓர் கும்பல் மேற்கொண்டு வந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஓக.31

நல்லைக்கந்தன் ஆலயப்பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றமும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானமும் இணைந்து துர்க்காமணிமண்டபத்தில் நடத்தும் இசையரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு திருமதி விமலாதேவி நாகேஸ்வரனின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

திருமதி சைந்தவி நிஷாகரன் வயலினும், செல்வன் என். மாதவன் மிருதங்கமும் எச்.செந்தூரன் முகர்சிங்கும் வாசிப்பர். (201)

* * *


நல்லைக்கந்தன் ஆலயப்பெருந்திருவிழாக்காலத்தில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் சமயச் சொற்பொழிவுகள் வரிசையில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'ஈழத்தில் முருக வழிபாடு' என்னும் தலைப்பில் புகன் ஸ்ரீந்திரனின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

நீர்வேலி காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, மல்லாகம் காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, கட்டுவன் சிவலோகபதி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம் பெறும்.

* *

நல்லைக்கந்தன் ஆலய உற்சவத்தையொட்டி நல்லூர் சைவமகாசபை நல்லை திருஞானசம்பந்தகுருமூர்த்தி ஆலய மண்டபத்தில் நடத்தும் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. [illegible] என்னும் தலைப்பில் உரையாற்றுவார். (201)



# நல்லூர் பெருந்திருவிழாக் கால சிறப்பம்சம்

## விடிவொன்றைத் தந்துவிடு!

நான்கு திசையிருந்தும் வந்துனை
நாடியே பக்தர் தொழுதிட
நல்லூரிலே நல்லாட்சி புரியும் கந்தா
நாட்டிலே சமாதானம் காட்டி வைத்தாய்
நாடியே உன் அடிக்கு நாமும் வந்தோம்
மொழி கடந்தும் உன் அடி தொழ
அலை மோதும் பக்தர் வெள்ளம்
மீண்டும் உன் வீதியெங்கும் கரகமும்
காவடியும் கற்பூர ஒளியும் பரவ
கொடியேறிக் கோலோச்சும் வேலா
முடியட்டும் தீமையது நிரந்தரமாய்
விடிவொன்றைத் தந்துவிட வரமருள்வாய்

புலோலியூர் வேல்நந்தன்.

## கந்தா அருள்தந்து கா!

தொல்லையிலே மூழ்கித் துயரத் ததிகடைசி
எல்லையிலே அந்தோ இருக்கின்றோம்- நல்லையிலே
வந்தா தரித்தெமது வாழ்வுயரச் சீக்கிரமே
கந்தா அருள்தந்து கா

தத்தம் இடத்தில் தமிழர் நாம் மீண்டேகிச்
சித்தம் களிக்கவுனைத் தேடிவந்தோம்- இத்தருணம்
இந்தா இதுகொள்ளென் றெங்களுக்காய் நல்லூரில்
கந்தா அருள்தந்து கா

நாளும் பொழுதுமெங்கள் ஊரைவிட்டு ஊர்வந்து
வாழும் இழிநிலையும், மாயாமல்- நீளும்
சிந்தா குலமும் துயர் வாழ்வும் நீங்கநல்லைக்
கந்தா அருள்தந்து கா

வ.சின்னப்பா,
தனங்கிளப்பு.

## கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த குமரன்

கார்த்திகை நட்சத்திரமும் ஒளி வீச- முருகன்
கலியுக ஒளியாய் பிறந்தானோ

தாமரை ஆறும் தவம் செய்ததோ- சிவன்
முத்துக்கள் ஏந்தி தாய்மைகொள்ள

அழகு புன்முறுவல் தாமரையில்- உமை
கவர்ந்திட்ட அழகிய திருமகனோ
குழந்தைகள் ஆறும் நிகர் ஒளிர - அன்னை
வாரி அணைத்தான் ஆறுமுகனாய்

அதிசக்திப் பலமாக்கி வேல் ஈந்தாள்- அழகு
கார்த்திகைப் பெண்களிடம் வளரவிட்டாள்
தேவர்துயர் துடைக்க உனை ஈந்தாள் எங்கள்
நல்லூரில் என்றும் குடிகொண்டாய் வேலவனே

மலர் சின்னையா.

## ஆறாத்துயர் ஆற்றுவாய் முருகா!

குன்றினில் ஆடிடும் குமரா போற்றி!
கொடியினில் ஏறியே அருள்வாய் போற்றி!
ஆறு தீப்பொறியில் பிறந்தாய் போற்றி!
ஆறு பெண்கள் அரவணைத்த அமரா போற்றி!
ஆறுபடை வீட்டில் அமர்ந்தாய் போற்றி!
ஆறுநாள் விரதத்தில் அனுக்கிரகிப்பாய் போற்றி!
ஆறு வகைத் தீபச்சுடரொளியில் ஒளிர்வாய் போற்றி!
ஆறு இனமாலைகளில் மிளிர்வாய் போற்றி!
ஆறு எழுத்து மந்திரத்தால் மகிழ்வாய் போற்றி!
ஆறுமுகத்தால் கனிவைச் சுரப்பாய் போற்றி!
ஆறுமுகத்தில் ஒருமுகத்தை எம்பால் திருப்பி
ஆறாத் துயரம் ஆற்றுவாய் போற்றி!

திருமதி மனோன்மணிகுலசிங்கம்
கோண்டாவில்.

## பாரொளியாய் நிற்பான்

ஆறு முகனுதித்தே ஆணவத்தைப் போக்கியதைக்
கூறுங் திருக்கார்த் திகைவிழா- பேறுபெறப்
பேரொளியைத் தந்த பெருமானவ் நல்லூரிற்
பாரொளியாய் நிற்பான் பணி

அமரர் சி.இராசரத்தினம்
வேலணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் பட்டியல் மீளாய்வு பணிகள் இறுதிக் கட்டத்தில்

கொழும்பு, ஓக. 31

அடுத்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் மீளாய்வுப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர் பெயர்ப்பட்டியல்களை வீடு வீடாக விநியோகிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன என தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.

எனினும், தேர்தல் வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு தொடர்பில் இதுவரை 160 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள் என என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டி ஆராய்ச்சி தெரிவித்துள்ளார்.

அதேவேளை, யாழ்ப்பாண மாவட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் சீர்திருத்த நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன என 'கபே' அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் பெயர்ப்பட்டியல் வீடு வீடாக விநியோகிக்கப் பட்டினும் கடந்த 25 ஆண்டுகளுக்குப் பின்னர் சீர்திருத்தப் பணிகள் இடம்பெறுவதன் காரணமாக துரிதமான முறையில் மேற் கொள்ள முடியாத நிலை உள்ளது எனத் தேர்தல்கள் செயலகத் தின் மேலதிக ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

வட மாகாணத்தின் பூர்த்தி செய்யப்பட்ட வாக்காளர் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் தேர்தல் செயலகத்தில் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (சி)


## களுத்தோட்ட பினான்ஸியல் சேர்விஸஸ் (தனி) நிறுவனம்
## KALUTOTA FINANCIAL SERVICES (PVT) LTD

### தற்போது யாழ்.மண்ணில்

வான், கார், பஸ், லொறி, உழவு இயந்திரம் போன்றவற்றுக்கு
ஒருமணி நேரத்தில்
65% லீசிங் பெற்றுத்தரப்படும்.
வாகனப் புத்தகம் மட்டும் பிணையாக ஏற்றுக்கொள்ளப்படும்.
பிணையாளி, வாகன தர நிர்ணயம் தேவையில்லை.
நீண்ட காலத் தவணையில் லீசிங்
வழங்கப்படும். இன்றே நாடுங்கள்

*KALUTOTA FINANCIAL SERVICES (PVT) LTD*
*No.88, Hospital Road, Martin Lane, Jaffna.*
*T.P.No: 0777710585*

## ஒத்து மாறல்

நீர்கொழும்பு வலயப் பிரபல பாடசாலையைச் சேர்ந்த சித்திரபாடப் பட்டதாரி ஆசிரியர் யாழ்.வலயத்தைச் சேர்ந்த அதேபாட ஆசிரியருடன் ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்துமாற விரும்புபவர்கள் தொடர்புகளுக்கு: 0773565059

## விற்பனைக்கு

நல்லூர், நாவலர் வீதிக்கு அண்மையில் 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
*தொடர்பு: 0789136878* (102685)

## சாரதி தேவை

★யாழ்.மாநகர சபைக்குள் வசிப்பவர்களும் அனுபவம் உள்ளவர்களும் விரும்பத்தக்கது.
★மிக்ஷர் உற்பத்தியில் அனுபவம் உள்ளவர்களும் தேவை. தொடர்பு:- 0779789223


## மஹஜன சம்பத — அலுவலக முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2285
திகதி 29.08.2010

வெற்றி எழுத்து / வெற்றி எண்கள்: G 8 1 4 3 2 5

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | G | 8 | 1 | 4 | 3 | 2 | 5 | ரூபா. | 21,904,319/= | பரிசு | - |
| 1ம் பரிசுகள் | | 8 | 1 | 4 | 3 | 2 | 5 | ரூபா. | 20,00,000/= | பரிசுகள் | - |
| 2ம் பரிசுகள் | | | 1 | 4 | 3 | 2 | 5 | ரூபா. | 100,000/= | பரிசுகள் | 05 |
| 3ம் பரிசுகள் | | | | 4 | 3 | 2 | 5 | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 77 |
| 4ம் பரிசுகள் | | | | | 3 | 2 | 5 | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 727 |
| 5ம் பரிசுகள் | | | | | | 2 | 5 | ரூபா. | 100/= | பரிசுகள் | 7073 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 5 | ரூபா. | 20/= | பரிசுகள் | 71,108 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 8 | 1 | 4 | 3 | 2 | | ரூபா. | 10,000/= | பரிசுகள் | 09 |
| 8ம் பரிசுகள் | | 8 | 1 | 4 | 3 | | | ரூபா. | 1,000/= | பரிசுகள் | 73 |
| 9ம் பரிசுகள் | | 8 | 1 | 4 | | | | ரூபா. | 100/= | பரிசுகள் | 717 |
| 10ம் பரிசுகள் | | 8 | 1 | | | | | ரூபா. | 50/= | பரிசுகள் | 7102 |
| 11ம் பரிசுகள் | G | | | | | | | ரூபா. | 20/= | பரிசுகள் | 28516 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா. 23,166,672.00

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,286,580.00
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
தேசிய லொத்தர் சபை
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631
முடிவுகளை அறிய www.nlb.lk

## சமய சந்நிதிகளில்

கோப்பாய், ஓக. 31

வடகோவை ஸ்ரீசக்கராழ்வார் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழாவில் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும் பிற்பகல் 5மணிக்கு உறியடி விழாவும் இடம்பெறும்.

உறியடி விழாவில் தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களானகீளடி, சிலம்படி, தீப்பந்தம் சூழற்றுதல் போன்றன நிகழ்த்தப்படும். மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (204-72)

* * *

கொழும்பு, ஓக. 31

கொழும்பு, கொச்சிக்கடை தம்பையா முதலியார் சத்திரம் சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த அலங்காரத் திருவிழா நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

திருவிழாக்காலங்களில் தினமும் பிற்பகல் 5மணிக்கு சங்காபிஷேகம், மாலை 6மணிக்கு சாயங்கால பூசை, 6.30மணிக்கு வசந்த மண்டபப்பூசை என்பன நடைபெற்று இரவு 7.30 மணிக்கு விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். (204)

## 35 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### கணபதிப்பிள்ளை குணராசா
(ஓய்வுபெற்ற நீதிமன்ற உத்தியோகத்தர்)

அன்னை மடியில் 25.11.1935
இறைவன் அடியில் 28.07.2010

அன்பின் இலக்கணமாய் பண்பின் சுடர்
ஒளியாய்
பாசத்தை ஊட்டிவைத்த எங்கள்-
குடும்பத் தெய்வமே!
தொட்டுவிட முடியாத உங்கள்
நினைவுகள்
மறந்துவிட முடியாத உங்கள்
ஞாபகங்கள்
உறக்கநிலையிலும் நினைவலைகளால்
மிளிர்கின்றதே!

நீங்கள் எங்களைவிட்டுப் பிரிந்து ஒரு மாதம் ஆகியதே!
ஆலவிருட்சமாய் நிமிர்ந்து நின்று அறிவுரைகளை
அரவணைப்புடன் தந்து பார்போற்ற வாழ வழிகாட்டிய
எமது தெய்வமே-உங்கள் நினைவுகள்
எமைவிட்டு என்றும் அகலாது.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (102679) குடும்பத்தினர்.

## தங்க ஆபரணம் கண்டெடுப்பு

கோப்பாய், ஓக. 31

நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் குறித்த எடையுள்ள தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அடையாளத்தைக் காண்பித்து பெற்றுக்கொள்ளலாம் என மண்டப நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (த-72)

## கண்ணீர் அஞ்சலி

### Dr.யமுனா மார்க்கண்டு
(MBBS, MD, MRCP)



அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கும்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவிப்பதோடு
அவரின் ஆன்ம சாந்திக்
காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ் மருத்துவபீடத்தின்
8ஆம் அணி மருத்துவர்கள்.

(102690)

## முக்கிய அறிவித்தல்

மன்னார் மாவட்டம், விடத்தல் தீவு, கற்பகப்பிள்ளையார் கோயில் மற்றும் தருமமடம் தர்ம சாதனமானது ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டு எமது தந்தை வழிபரம்பரையினரால் நிறுவப்பட்டுத் தொடர்ந்தும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. யாழ்ப்பாண மாநகர சபைக்குட்பட்ட கற்குளம் ஒழுங்கை, கொட்டடி, யாழ்ப்பாணத்தில் உள்ள வயல் காணியாகிய ''கற்குளம் கரையும் பள்ளுவிலித் தோட்டமும்'' கற்பகப் பிள்ளையார் கோயில் தருமமடம் தருமசாதனத்துக்குரியது. இவ்வாதனத்தில் ஒரு பகுதியில் திரு.வ. மகாலிங்கத்தைக் குடும்பத்துடன் இருத்தி வைத்திருக்கிறோம்.

இவ்வாதனத்தில் குடியிருப்பதற்காக காணி பங்கீடுசெய்து தருவதாகச் சொல்லி வாக்களித்துப் பணம் கைமாற்றம் செய்வதில் ஒரு சிலர் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகின்றது. அப்படிச் சொல்லிப் பணம் பெறுபவர்கள் எவ்விதத்திலும் இந்தக் காணியின் செயல்பாட்டுக்கு உரித்துடையவர்களல்லர். அவர்கள் செயல் சட்டத்திற்குட்பட்டதுமல்ல. எனவே இத்தகைய தவறான நடவடிக்கைக்குள் யாரும் அகப்பட்டு நட்டமடைய வேண்டாமென்று தர்மகர்த்தா சார்பில் கேட்டுக் கொள்கின்றோம்.

பரம்பரைத் தர்மகர்த்தாவின்
சட்டப்படி தத்துவகாரர்
தி.விஸ்வகுமார், ஜெயதேவி தாமோதரம்பிள்ளை.
(102683)

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் பீதாம்பரம்



மீசாலை மேற்கு, வயற்கரையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் பீதாம்பரம் கடந்த (28.08.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-கதிராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்வி இராசம்மா வல்லிபுரத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கிளிநொச்சி இந்துக் கல்லூரி) அன்புச் சகோதரனும் நகுலினி (ஆசிரியை, ஸ்ரான்லிக் கல்லூரி), கோபிதாஸ், தயாளதாஸ், கமலதாஸ், ரமணதாஸ், சேகரன், லலிதாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (கணக்காளர், பிரதேச செயலகம், நல்லூர்), மோகனா, குமுதினி, பிரதீபா, குகனேஸ்வரி, ஜெயக்குமார் (ஆசிரியர், கிளி/இராமநாதபுரம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனும் சயந்தன், மேசிகன், ஜெனகா, வைசிகா, வைகீஸ், சகானா, சுருதிகா, சாருகா, தட்ஸா, ஹர்சனா, அபிஷன், லபோஷன், இந்துஜா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2010) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.
வயற்கரை, மீசாலை மேற்கு, மீசாலை.
தொ.பே: 0213209386
(102676)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் வந்து குவியும் விண்ணப்பங்கள்; எழுதுவினைஞர் ஒருவர் மட்டுமே கடமையில்!

## கிளிநொச்சி மாவட்டப் பதிவகத்தின் ஆளணியை அதிகரிக்கக் கோரிக்கை

கிளிநொச்சி,ஓக.31

கிளிநொச்சியின் மாவட்ட செயலகத்தின் பதிவாளர் திணைக்களத்துக்கு தினமும் ஏராளமான விண்ணப்பங்கள் வந்து குவிகின்றன. ஆனால் அந்த விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி வழங்குவதற்கு ஓர் எழுதுவினைஞரே சேவையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தில் தொலைந்த பிறப்பு, காணி ஆவணங்களையும் இறப்பு அத்தாட்சிப் பத்திரத்தையும் பெறுவதற்காக தினமும் 250 இற்கும் மேற்பட்ட விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கின்றன. ஆனால் ஓர் எழுது வினைஞரே சேவையில் இருப்பதனால் மக்களின் விண்ணப்பங்களை உடனடியாகப் பூர்த்தி செய்து வழங்க முடியாதுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட காணி மற்றும் மேலதிகப் பதிவாளர் அ.றெஜிஅலோசியஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் 5000 விண்ணப்பங்கள் தமக்குக் கிடைத்ததாகவும் ஓர் எழுதுவினைஞரே கடமையில் இருப்பதால் மேலதிகமாக வேறு திணைக்கள எழுது வினைஞர்களையும் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் கூறினார்.

மாவட்டப் பதிவகத்துக்குத் தினமும் ஏராளமானோர் வருகை தந்து திரும்பிச் செல்கின்றனர். தவிர உரியநேரத்தில் தமது ஆவணங்களையும் பெறமுடியாத நிலையில் இருப்பதால் பதிவகத்தின் ஆளணி வளத்தை அதிகரித்து தமது விண்ணப்பங்களை விரைவாகக் கிடைக்க உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# வட்டக்கச்சி ம.விக்கு இணையத்தளம்

கிளிநொச்சி,ஓக.31

கிளிநொச்சி, வட்டக்கச்சி மாகாவித்தியாலயத்திற்கென புதிய இணையத்தளமொன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் முதல் செயற்படத் தொடங்கியுள்ள இவ் இணையத்தளமானது பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டுள்ளது.

www.kilivmv.sch.lk என்னும் இணையத் தளத்தில் பாடசாலை தொடர்பான விவரங்களை பார்வையிடலாம் என பாடசாலையின் அதிபர் ம.கி.மனுவல் அறிவித்துள்ளார். (க-405)




# தென்பகுதி பஸ்களால் உள்ளூர் பயணிகள் குழப்பம்

கிளிநொச்சி,ஓக.31

தென்னிலங்கையிலிருந்து வடபகுதி நோக்கிவரும் சுற்றுலாப் பயணிகளின் பஸ்வண்டிகளால் ஏ-9 வீதியால் பயணிக்கும் பயணிகள் ஏமாற்றமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தென்னிலங்கையிலிருந்து அதிகளவான தனியார் பஸ்வண்டிகளும், அரச பஸ்வண்டிகளும் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிக்கொண்டு வடபகுதியை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் இவற்றில் இலகுவில் அடையாளம் காணக் கூடியவாறு பெயர்ப்பலகைகள் எதுவும் பொறிக்கப்படவில்லை. இதன் காரணமாக ஏ-9 வீதியில் பயணிக்கும் உள்ளூர்ப் பிரயாணிகள் பஸ்வண்டிகள் வருவதைத் தூரத்தில் கண்டவுடன் கைகாட்டி மறிப்பதற்கு முயற்சி மேற்கொள்வதுடன் ஏமாற்றமும் அடைந்து காணப்படுகின்றனர். சில வேளைகளில் பயணிகள் பஸ் வண்டிகளையும் இவர்கள் தவறாக அடையாளம் காண்பதால் அவற்றையும் தவறவிட்டுப் பின்னர் அங்கலாய்த்தவாறு காணப்படுகின்றனர். (க-405)

# மன்னாரில் செம்மொழி விழா

மன்னார்,ஓக.31

மன்னார் தமிழ்ச் சங்கத்தின் ஓராண்டு நிறைவையொட்டி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள செம்மொழி விழாவுக்கான பூர்வாங்க ஏற்பாடுகள் முழு வீச்சில் நடைபெறுவதாக அதன் தலைவர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

இந்த விழாவையொட்டி நடத்தப்படும் போட்டிக்கு ஏராளமான கவிதைகள், சிறுகதைகள் வந்துள்ளதாகவும், முடிவு திகதிக்கு முன்னர் இன்னும் பல ஆக்கங்களை எதிர் பார்ப்பதாகவும், இந்த மூன்று நாள் விழாவில் மலர் வெளியீடும், மன்னார் மக்களின் புத்தகக் கண்காட்சியும், விற்பனையும் இடம் பெறவுள்ளதாக அவர் மேலும் கூறினார். மேலும் மன்னாரில் தமிழ் வளர்த்த வாழ்ந்தும், மறைந்துமுள்ள தமிழ் ஆர்வலர்களும், கல்விமான்களும், எழுத்தாளர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவிருக்கின்றனர். அத்துடன் வெளிமாவட்டங்களில் வாழ்ந்து வரும் தமிழ் அறிஞர்கள் கௌரவிக்கப்படும் நிகழ்வும் இந்த விழாவில் இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (க-80)

# நெல் வயல்களில் 'சந்துகுத்தி'

கிளிநொச்சி,ஓக.31

கணேசபுரத்திலுள்ள நெல் வயல்களில் சந்துக்குத்தி நோயின் தாக்கம் அதிகமாகக் காணப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டம் கணேசபுரத்திலுள்ள நெல்வயல்களில் சந்துக்குத்தி நோயின் தாக்கம் காணப்படுவதால் நெல் விளைச்சலில் பாதிப்பு ஏற்படுமென அச்சம் தெரிவிக்கப்படுகின்றது. விவசாயிகள் கிரமமான முறையில் பூச்சி கொல்லிகளையும், உரவகைகளையும் இட்டுப் பயிர்களைப் பாதுகாத்தபோதும் இறுதி நேரத்தில் இந்த நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளமை அவர்களிடையே அதிர்ச்சியைத் தோற்றுவித்துள்ளது. மக்கள் இந்தப் பகுதியில் மீளக்குடியேறியபின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலாவது நெற்செய்கை இதுவாகும்.

இதேவேளை-

கடந்த சில நாள்களாகப் பெய்த மழையினால் அறுவடைப் பருவத்திலுள்ள நெற்பயிர்கள் பாதிப்படைந்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-405)

# மன்னார் கடல் பிரதேசத்தில் குறைந்து செல்லும் மீன்வளம்

மன்னார்,ஓக.31

மன்னார் இவ்வாண்டுமீன் உற்பத்தியில் பாரிய பின்னடைவு ஏற்படுமென மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கையில் 2004 இல் நிகழ்ந்த கொடிய சுனாமி அனர்த்தங்களின் பின்னரே இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் யுத்தம் முடிந்த பின்னர் கடல் வலயம் திறக்கப்பட்ட பின்னரே அதை மீனவர்கள் உணர்ந்து கொண்டதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

மீன் வளத்திற்குப் பெயர்போன மன்னார் குடாவில் அமைந்துள்ள மன்னார் வடகடலிலும் இந்து மகா சமுத்திரத்தில் அமைந்துள்ள தென் கடலிலும் யுத்தத்திற்கு முந்திய காலங்களில் மீன் பிடிக்கப்பட்டு பலநூறு பார ஊர்திகளில் மீன் உணவுகள் ஏற்றுமதி செய்யப்பட்டு மன்னார் மீனவர்கள் பெரும் செல்வந்தரானார்கள். இன்று அவர்கள் எவ்வித வருமானமின்றி அன்றாடங்காய்ச்சிகளாக மாறி வருகின்றனர்.

நிலைமை இப்படியே போனால் மன்னாரில் 60 வீதமான மீன்வளத்தை நம்பி வாழ்ந்த மீனவர்கள் வேறு தொழிலை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம் என்று கூறப்பட்டது. (க-80)

# மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதி விரைவில் அகலமாக்கப்படும்

கிளிநொச்சி,ஓக.31

துணுக்காய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதியின் அகலம் வீதியின் மத்தியில் இருந்து 15 மீற்றராகவும் வீதியின் மொத்த அகலம் 30 மீற்றராகவும் அமைய வேண்டுமென முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் அறிவித்தார் என துணுக்காய் பிரதேச சபையின் விசேட ஆணையாளர் கு.விக்ரர் ஜெயசிங்கம் தெரிவித்துள்ளார்.

பொது மக்கள் வீதி எல்லைக் கோட்டைப் பாதிக்காதவாறு கட்டட விண்ணப்பங்களை சமர்ப்பித்து எம்மிடம் அனுமதி பெற்றே கட்டடங்கள் கடைகளை அமைத்துக் கொள்ளுமாறும் இச் செயற்பாட்டிற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பைக் கோரியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-322)

# கரைச்சிப் பிரதேச சபையின் ஏற்பாட்டில் டெங்கு ஒழிப்புச் சிரமதானப் பணி

கிளிநொச்சி,ஓக.31

கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் கிருஷ்ணபுரம், விவேகானந்த நகர், பொன்நகர், மலையாளபுரம், பாரதிபுரம் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் நாளை முதலாம் திகதியும், பரந்தன், கோரக்கன் கட்டு, ஊரியான், முரசுமோட்டை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 02 ஆம் திகதியும், உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, கனகபுரம், அம்பாள் குளம், செல்வா நகர் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் 03 ஆம் திகதியும், திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, கணேசபுரம், ஜெயந்திநகர், பெரிய பரந்தன் ஆகிய பிரிவுகளில் 04 ஆம் திகதியும், கண்டாவளை, பெரியகுளம், கல்மடுநகர், புளியம் பொக்கணை ஆகிய இடங்களில் 05 ஆம் திகதியும், திருவையாறு, திருவையாறு மேற்கு, கனகாம்பிகைக் குளம், அம்பாள் நகர் ஆகிய பிரிவுகளில் 06 ஆம் திகதியும், மருதநகர், கிளிநொச்சி நகரம், ஆனந்தபுரம், தொண்டமான் நகர், இரத்தினபுரம் ஆகிய பிரிவுகளில் 07 ஆம் திகதியும், உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் வடக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர் ஆகிய பிரிவுகளில் 08 ஆம் திகதியும், குமரபுரம், உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, ஆனையிறவு ஆகிய பிரிவுகளில் 09 ஆம் திகதியும், வட்டக்கச்சி, சிவிக்சென்ரர், பன்னங்கண்டி ஆகிய பிரிவுகளில் 10 ஆம் திகதியும், இராமநாதபுரம், முரவடியம்மன், மாயவனூர் ஆகிய பிரிவுகளில் 11 ஆம் திகதியும், தர்மபுரம் கிழக்கு, தர்மபுரம் மேற்கு, புன்னை நீராவி,பிரமந்தனாறு ஆகிய பிரிவுகளில் 12 ஆம் திகதியும், வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான், கண்ணகைபுரம், ஸ்கந்தபுரம், அக்கராயன் குளம் ஆகிய பிரிவுகளில் 13 ஆம் திகதியும், கோணாவில், ஊற்றுப்புலம், புதுமுறிப்பு ஆகிய பிரிவுகளில் 14 ஆம் திகதியும் சிரமதானப் பணிகள் நடைபெறும். (க-432)







நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கிளிநொச்சி ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கற்றல் உபகரணங்களுடன் நாடாளுமன்ற [illegible] முதலாவது படத்திலும், மாணவி ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் கற்றல் [illegible] தை இரண்டாவது படத்திலும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவ,மாணவிகளை இறுதிப் படத்திலும் காணலாம். (படங்கள்:- கிளிநொச்சி செய்தியாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக் குமரன் ஆலய வளாகத்தில் மீண்டும் விழாநாயகனாக நாவலர் பெருமான்

**நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் தற்போது பேணப்பட்டு வரும் நாவலர் பெருமானின் திருவுருவச் சிலை இன்று காலை 7 மணியளவில் அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலய சூழலில் அமைந்துள்ள நாவலர் மணி மண்டபத்தில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது. அதனையொட்டி இச்சிறப்பம்சம் இங்கு பிரசுரமாகிறது**


ஊர்வலத்தில் சென்ற அழகு ரதங்களில் சில...

நமது சைவசமயத்தின் ஐந்தாம் குரவரான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை அறிஞர்கள் 'இந்துக்களின் சீர்திருத்தவாதி' எனவும் 'நல்லை நாவலர் தோற்றிலரேல் சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே' எனவும் பலவாறு


திருவுருவச் சிலையின் பவனியுடன் அதன் பொறுப்பாளர்கள் பொ.அட்சரமூர்த்தியும் பொ. தேவதாசனும்.

புகழ்ந்துரைத்தனர். முருகப் பெருமான் மீது தீவிர பக்திகொண்ட இவர், தமது சமயப் பணியை முன்னிலைப்படுத்த நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலில் சைவப்பிரகாச மடலாயம் ஒன்றையும் ஸ்தாபித்தார். இம்மடலாயத்தை ஸ்தாபிக்க விரும்பிய நாவலர் இதற்குரிய 5 பரப்பும் 12 குளியும் கொண்ட 'அம்மையன் வளவு' என்ற காணியை தமது பணத்தில் 2000 ரூபாவைக் காணிச் சொந்தக்காரரான சுப்பையா கார்த்திகேசு என்பவருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்டார். நாவலர் மறைவோடு அவர் பணிகள் முடங்கின.

1961இல் அரசாங்கமும் இதனைப் பொறுப்பேற்றது. நாவலருக்குச் சிலை அமைக்க விரும்பிய நாவலர் சபையினர் இதனை மீண்டும் அரசாங்கத்திடமிருந்து 99 வருடக் குத்தகைக்குப் பெற்று 1969 இல் இவ்விடத்தில் நாவலர் பெருமானுக்குச் சிலை வைத்தனர். நாவலரின் திருவுருவச் சிலை கொழும்பிலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்ட நிகழ்ச்சி பின்வருமாறு வர்ணிக்கப்பட்டுள்ளது.

1969ஆம் ஆண்டு 24ஆம் திகதி கொழும்பில் பெருவாழ்த்து வணக்க விழாவுடன் ஆரம்பமாகி அரச மரியாதைகளுடன் அரச பவனியாக வழியனுப்பப்பட்ட நாவலர் சிலை தேச பவனியாக யாழ்.குடாநாடெங்கும் ஊரூராகக் கொண்டு செல்லப்பட்ட பின்னரே ஜூன் 29 இல் ஸ்தாபிதம் செய்யப்பட்டது.

யாழ்.குடாநாடே சிலை வைப்பைக் காண்பதற்குத் திரண்டு வந்து நின்றது. நல்லூர் தொடங்கி முற்றவெளிவரை ஒரு கிழமைக்கு மேலான காலம் ஒரே விழாக்கோலமும் பெருஞ்சனச் செறிவுமாகவே காணப்பட்டது. இந்நிகழ்ச்சிகளை அந்நாளில் இலங்கை வானொலி நேரடி அஞ்சல் செய்தமையும் நினைவு கூரத்தக்கதாகும். யாழ்ப்பாணத்து அரசர் காலத்திற்குப் பின் சைவத்தின் பெயரால் இம்மண்ணில் நடந்த முதற்பெருவைபவம் இதுவாகும் எனவும் பொதுமக்கள் மத்தியில் பேசப்பட்டது.

இத்தகைய மகிமை வாய்ந்த சிலையை இதனைப் பிரதிஷ்டை செய்த நாவலர் சபையினரே 1985ஆம் ஆண்டில் தற்போதைய நாவலர் கலாசார மண்பத்திற்கு எடுத்துச் செல்ல நாவலர் மணி மண்டபம் பொலிவிழக்க, 2003ஆம் ஆண்டில் இந்து சமய கலாசாரத் திணைக்களம் இதனைப் பொறுப்பேற்றாலும் கூட சிலை அற்ற மண்டபம் பொலிவிழந்து காணப்பட்டதை அறிந்து சைவ ஆர்வலர்கள் மனந்நொந்தனர்.

இம்மணி மண்டபத்தின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்காக கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 24.08.2010 ஆம் திகதியன்று நல்லூர் மாநகரசபை மண்பத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம்


சிலைத் திறப்பு விழாவில், நாவலர் உருவச் சிலைக்கு மதுரை மகா சந்நிதானம் அவர்களும் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத்தம்பிரான் சுவாமி, சிவநெறிச் செம்மல் ம.ஸ்ரீகாந்தா, நீதியரசர் சிவசுப்பிரமணியம், மெய்கண்டான் நா.இரத்தினசபாபதி ஆகியோர் அஞ்சலி செலுததியபோது.

நடத்தப்பட்டது.

சைவ மன்றங்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களின் அடிப்படையில் கௌரவ அமைச்சர் அவர்களின் பெரு முயற்சியால் பின்வரும் தீர்மானங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

1) நாவலர் சிலையை மீண்டும் பழையபடி நாவலர் மணி மண்டபத்திற்குப் பவனியாக எடுத்துச் சென்று பிரதிஷ்டை செய்தல்.

2) மண்டப மதில்களை ஆலய வசதிக்காக அகற்றி திருவிழாக் காலங்களில் மட்டும் கழற்றிவைக்கும் ஓர் உலோகத்திலான காப்பரணை அமைத்தல்.

பேராசிரியர் சி.க.சிற்றம்பலம்
தலைவர், இந்து சமயப் பேரவை

3) நாவலர் காணிக்குரிய நிலத்தை ஆலய நிர்வாகம் முறைப்படி தமது பொறுப்பிலுள்ள வீதியின் தெற்குப் பக்கத்தில் உள்ள நிலத்தில் வழங்க நல்லதொரு மண்டபத்தை அமைத்துத் தந்த பின்னர் இச்சிலையை புதிய மண்டபத்திற்கு மாற்றுதல்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் இந்து சமயப்பெரியோர்கள், நிறுவனங்கள், ஆலய அறங்காவலர், யாழ்.நகர முதல்வர், அறிஞர்கள், பற்பல நிறுவனங்கள் ஆகிய எல்லோரதும் ஒருமித்த கருத்திற்கமைய நாவலர் பெருமான் மறுபடியும் நல்லூர் மணி மண்டபத்தை அடையவிருப்பது நம் எல்லோரையும் மகிழ்வுறச் செய்கின்றது. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடைபெற்ற பிரிவுகளுக்கான இறுதிக் கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், காலி வித்தியலோகா கல்லூரியும் மோதும் காட்சியைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# யாழ். இந்துக் கல்லூரியை வீழ்த்தி சம்பியன் வென்றது காலி வித்தியலோகா

யாழ்ப்பாணம்,ஒக.31

அகில கிம்சன் தில்ஹார ஆட்டமிழக்காது பெற்ற அரைச்சதத்தின் உதவியுடன் காலி வித்தியலோகா கல்லூரி சம்பியனாகியது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே பிரிவு 3 இல் நடத்திய கிரிக்கெட் போட்டி ஆட்டத்தின் இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியும், காலி வித்தியலோகா கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் மோதிக்கொண் டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

மதுசன் 5 நான்குகள், ஒரு ஆறுடன் 32 ஓட்டங்களையும் சஜிகன் 20 ஓட்டங்களையும் பிருந்தாபன் 11 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 35 ஓட்டங்களும் பெறப்பட்டன.

காலி வித்தியலோகா கல்லூரியைச் சேர்ந்த பதும் 10 ஓவர்கள் பந்து வீசி 3 ஓட்டமற்ற ஓவர்களுடன் 26 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுக்களையும் நெலும், இசும் முறையே 16, 17 ஓட்டங்களைக் கொடுத்து தலா 2 விக்கெட்டுக்களையும்,

பௌசன் 2 ஓவர்கள் பந்துவீசி 2 ஓட்டங் களுக்கு ஒரு விக்கெட்டையும் , நௌவாத் 29 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

128 ஓட்டங்களை வெற்றியெனக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய காலி வித்தியலோகா கல்லூரி 31.4 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப்பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

அகில கிம்சன் தில்ஹார 76 பந்துகளில் ஆட்டமிழக்காது ஒரு ஆறு, 06 நான்குக ளுடன் 51 ஓட்டங்களையும் ,பத்தும் 29 ஓட்டங்களையும், லகிறு 12 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரி களாக 21 ஓட்டங்களும் பெறப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சிந்துஜன் 5 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், மதுசன் 19 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

## தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.31

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தினால் உடுவில் ஆலடி சிந்து விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் தாச்சி சுற்றுப்போட்டியில் நாளை புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடி வளர்மதி அணியை எதிர்த்து மயிலிட்டி நியூகிட் அணி மோதவுள்ளது.

மேலும் இதில் வெற்றிபெறும் அணி எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு பண்டத்தரிப்பு சாந்தை விநாயகர் 'ஏ' அணியுடன் மோதவுள்ளது. (த)




# 800 மீற்றர் ஓட்டத்தில் செபமலரின் சாதனை பதிவு

வலி.வடக்கு,ஒக.31

வடமாகாண விளையாட்டுத் திணைக்களம் மாவட்ட அணிகளுக்கு இடையே நடத்திய தடகளப் போட்டிகளில் 800 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ரி.செபமலரின் 2007 ஆம் ஆண்டு பெறுபேறு வடமாகாணத்தின் சிறந்த சாதனையாகப் பதிவு செய்யப்படவுள்ளது.

வடமாகாணத்தின் புதிய சாதனையைப் பதிவு செய்யும் நடவடிக்கை கடந்த மூன்றாண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் இடம்பெற்று வருகின்றது.

இதன் அடிப்படையில் 2007 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த ரி. செபமலர் 02:31:07செக்கனிலும், 2009 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பி.கல்பனா 02:38:09 செக்கனிலும், இவ்வாண்டு வவுனியா மாவட்டதைச் சேர்ந்த எஸ். நிலானி 02:38:03 செக்கனிலும் ஓடிப் பெறுபேறுகளைப் பதிவு செய்துள்ளனர்.

இப்பெறுபேறுகளின் அடிப்படையில் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த செபமலரின் 2007 ஆம் ஆண்டு சிறந்த பெறுபேறான 02:31:07 செக்கன் வடமாகாணத்தின் 800 மீற்றர் ஓட்டப் போட்டியின் சாதனையாகப் பதிவு செய்யப்பட்டவுள்ளது. (த-86)

# மனித உரிமைகள் இல்லம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுத்தொடரின் இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம்,ஒக.31

வாக்குப்பதிவையும் வாக்களிப்பின் முக்கியத்துவத்தையும் ஊக்கப்படுத்து முகமாக மனிதஉரிமைகள் இல்லத்தில் நடத்தப்பட்டு வருகின்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தேசிய மட்டத்திலான போட்டி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார்,மட்டக்களப்பு, அம்பாறை, ஹற்றன்,திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களில் வெற்றிபெற்ற அணிகள் பங்குகொள்ளவுள்ளன.

இந்தப் போட்டிகளின் இறுதியாட்டம் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி சாள்ஸ், சிறப்பு விருந்தினராக வன்னி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ரி.சுதாகரன், மனித உரிமைகள் இல்லத்தின் பணிப்பாளர் செறின்சேவியர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-23)

# அகில இலங்கைப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி நீர்கொழும்பில்

வலி.வடக்கு,ஒக.31

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையேயான ஆண்கள், பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டிகள் அடுத்த மாதம் 11 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டியில் வடமாகாணத்தைச் சேர்ந்த 6 அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகள் நீர்கொழும்பு மீகமுவ மரியஸ்ரெலா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் வீரர்கள், வீராங்கனைகள் சுமார் 550 பேருக்கும் மேற்பட்டவர்கள் மாகாண ரீதியாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

வடமாகாணத்தில் இருந்து ஆண்கள் பிரிவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி,ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகியவை கலந்துகொள்ளவுள்ளன.

பெண்கள் பிரிவில் வடமாகாணத்தின் சார்பில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயம்,மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம் ஆகியவை கலந்துகொள்ளவுள்ளன. (த-86)



காரைநகர் சுப்பிரமணியம் வீதியில் அமைந்துள்ள காரை கிட்ஸ் பார்க் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

விருந்தினர்கள் சிறார்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும், யாழ்.இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதை இரண்டாவது படத்திலும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தைகள் திணைக்கள ஆணையாளர் தி.விஸ்வரூபன், காரைநகர் உ[illegible] ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த இரண்டு படங்களிலும், ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பரிசில் வழங்குவதை இறுதிப்படத்திலும் காணலாம். (படங்கள்: டர்ஸிகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களுடன் சரணடையும் நக்ஸல்களுக்கு ரூபா 2 லட்சம்!

## மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவு

புதுடில்லி,ஓக.31

நக்ஸலைட்டுகள் ஆயுதங்களுடன் சரணடைந்தால் ரூபா 2 லட்சம் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு சலுகைகள் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்தும்படி மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

மேற்கு வங்கம், பீகார், சதீஷ்கார், ஜார்கண்ட் மற்றும் ஒரிசா போன்ற மாநிலங்களில் நக்ஸலைட்டுகளின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் ஒரு பக்கம் நக்ஸலைட்டுகளை ஒடுக்குவதற்கு நடவடிக்கை தொடர்ந்தாலும், வறுமையின் பிடியில் சிக்கி இயக்கத்தில் இணைந்துள்ள இளைஞர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தையும் மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்திருந்தது.

அதன்படி, ஆயுதங்களை ஒப்படைத்து சரணடையும் நக்ஸலைட்டுகளுக்கு ரூபா 2 லட்சம் வரை ரொக்கப் பணம் வழங்குவது உள்ளிட்ட பல்வேறு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை கடந்த ஆண்டு மத்திய அரசு அறிவித்திருந்தது. அதுபோன்ற திட்டங்களை மாநில அரசுகளும் உருவாக்கி உடனடியாக அமுல்படுத்தும்படி மத்திய உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

நக்ஸலைட்டுகளுக்கு எதிரான நடவடிக்கையைத் தொடரும் அதே நேரத்தில், வறுமை மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வால் விரக்தி அடைந்து புரட்சி இயக்கங்களில் இணைந்துள்ளவர்களின் குறைகளைப் போக்கும் வகையில் இந்த நிவாரணத் திட்டத்தை நிறைவேற்றும்படி உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய அரசின் திட்டத்தின் படி, சரண் அடையும் நக்ஸலைட்டுகளுக்கு, அவர்கள் பெயரில் ரூபா 1 லட்சத்து 50 ஆயிரம் உடனடியாக வைப்புச் செய்யப்படும். தொடர்ந்து 3 ஆண்டுகள் அவர்கள் தொழிற் பயிற்சி பெறுவதற்காக மாதந்தோறும் ரூபா 3 ஆயிரம் வீதம் உதவிப்பணம் அளிக்கப்படும்.

3 ஆண்டுகளுக்குப்பின் அவர்களுடைய நடத்தை திருப்திகரமாக இருந்தால், அதிகாரிகள் அனுமதியுடன் ரூபா ஒன்றரை லட்சம் வைப்புப் பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொள்ளலாம்.

மேலும் ஆயுதங்களை ஒப்படைக்கும் தீவிரவாதிகளுக்கு, அவற்றின் தன்மைக்கு ஏற்ப ஊக்கத்தொகை வழங்கப்படும். ஏ.கே. - 47 ரக துப்பாக்கியை ஒப்படைத்தால் ரூபா 15 ஆயிரம், 'ஆர்.பி.ஜி.' அல்லது 'ஸ்னைப்பர்' துப்பாக்கிக்கு ரூபா 25 ஆயிரம், ரொக்கெட்டுக்கு ரூபா 1000, 'ரிமோட் கொன்ட்ரோல்' கருவிக்கு ரூபா 3 ஆயிரம், நவீன வெடிகுண்டுக்கு ரூபா 1000, கண்ணி வெடிக்கு ரூபா 3 ஆயிரம் 'எஸ்.ஏ.எம்.' ஏவுகணைக்கு ரூபா 25 ஆயிரம், செய்மதித் தொலைபேசிக்கு ரூபா 10 ஆயிரம் வீதம் நிவாரணத் தொகை வழங்கப்படும்.

மத்திய அரசின் இந்த திட்டம் மற்றும் வட கிழக்கு மாநிலங்களின் திட்டத்தை ஆய்வு செய்து புதிய திட்டத்தை உருவாக்கி அமுல்படுத்தும்படி மாநிலங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச பொலிஸார் தேடும் 650 இந்தியர்கள்

புதுடில்லி,ஓக.31

சர்வதேச பொலிஸாரால் (இண்டர்போல்) தேடப்பட்டு வரும் குற்றவாளிகளின் பட்டியலில் 650 இந்தியர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

இதுதொடர்பாக இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சா வழியினருக்கு 656 கைது உத்தரவு நோட்டீஸை உலகக் குற்றவியல் கண்காணிப்பு அமைப்பான இண்டர்போல் அனுப்பியுள்ளது. இவர்கள் அனைவரும் பிறநாடுகளில் குற்றம்புரிந்தவர்கள்.

கடந்த 2005 முதல் 2010 மே வரையில் 656 கைது உத்தரவு நோட்டீஸ்கள் இந்தியர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அதிகபட்சமாக 2007 இல் 133 பேருக்கும், 2006 இல் 119 பேருக்கும், 2008 இல் 85 பேருக்கும், 2005 இல் 95 பேருக்கும், 2010 ஆம் ஆண்டு மே வரையில் 75 பேருக்கும் இந்த நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன.

சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு, ஓமன், அமெரிக்கா, ஹொங்கொங், ரஷியா, பெலாரஸ், எகிப்து, ஆஸ்திரேலியா, பெல்ஜியம் ஆகிய நாடுகளில் தான் அதிக குற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

## இந்தியச் செய்திகள்

# சத்தீஷ்கரில் நக்ஸல்களுடன் நடந்த சண்டையில் 5 பொலிஸார் மரணம்

## மூன்று நக்ஸலைட்டுகளும் பலியாம்

இராய்ப்பூர்,ஓக.31

சத்தீஷ்கர் மாநிலத்தில் நக்ஸலைட்டுகளுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 5 பொலிஸார் பலியாகினர்.

இந்தச் சண்டையில் நக்ஸலைட்டுகள் தரப்பில் மூன்று பேர் கொல்லப்பட்டனர் எனவும், தப்பி ஓடிய தீவிரவாதிகள் அவர்களின் சடலங்களைத் தூக்கிச் சென்றுவிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சத்தீஷ்கர் மாநிலம் காங்கர் மாவட்டம் துர்க்கொண்டலில் இந்தச் சம்பவம் நடைபெற்றது. எல்லைப் பாதுகாப்புப் படை மற்றும் மாவட்டப் பொலிஸார் இணைந்த குழுவினர், அந்தப் பகுதியில் வழக்கமான தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு இருந்தனர். நேற்றுமுன்தினம் அதிகாலையில், புஸ்கி என்ற கிராமம் அருகே சென்றபோது, அங்கு மறைந்திருந்த நக்ஸலைட் தீவிரவாதிகள் பொலிஸாரை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர்.



இந்தத் திடீர் தாக்குதலால் நிலைகுலைந்த பொலிஸார் பின்னர் சுதாரித்துக் கொண்டு திருப்பித் தாக்கினார்கள். இரு தரப்பினருக்கும் இடையே பயங்கர துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

இந்தத் துப்பாக்கிச்சண்டையில் 5 பொலிஸார் பலியானார்கள். அவர்களில் 3 பேர் எல்லைப் பாதுகாப்புப் படையினர். ஒரு பொலிஸார் குண்டு பாய்ந்து படுகாயம் அடைந்தார். தகவல் அறிந்ததும் அந்தப் பகுதிக்கு கூடுதல் படையினர் அனுப்பி வைக்கப்பட்டனர். ஏறத்தாழ 100 நக்ஸல்கள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து இந்தத் தாக்குதலில் ஈடுபட்டனர்.

சத்தீஷ்கர் மாநிலத்தில் எல்லைப் படையினர் நக்ஸலைட்டுகளின் தாக்குதலுக்குப் பலியாகியிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# தற்போது இலங்கைக் கடலில் மீன்பிடிக்க பிரச்சினையும் இல்லை, மீனும் இல்லை

## கரை திரும்பிய தமிழக மீனவர்கள் கவலை

இராமேஸ்வரம், ஓக.31

இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன் பிடிக்க நுழைந்த தமிழக மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படை கடந்த சனியன்று அனுமதி வழங்கியது. எனினும் மீன்வரத்து குறைவடைந்து விட்டதால் எதிர்பார்த்ததைவிட குறைந்த அளவிலேயே மீன்கள் கிடைத்தன - என்று கரை திரும்பிய மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.

இலங்கை மீனவர்களின் தாக்குதல் அச்சத்தால், இலங்கைக் கடற்பகுதிக்குள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல், தொடர் நஷ்டத்தைச் சந்தித்து வந்த இராமேஸ்வரம் மீனவர்கள், ஓகஸ்ட் 13 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இலங்கை மீனவப் பிரதிநிதிகள் குழுவினரிடம், தமிழக மீனவர் சங்கப் பிரதிநிதிகள் நடத்திய பேச்சைத் தொடர்ந்து, கடந்த சனியன்று காலை இராமேஸ்வரத்திலிருந்து 600 இற்கும் மேற்பட்ட படகுகளில் மீனவர்கள் மீன்பிடிக்கக் கடலுக்குச் சென்றனர். அன்று மாலை இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்ற மீனவர்களை, கடல் எல்லையில் ரோந்துப் பணியில் இருந்த இலங்கைக் கடற்படையினர் எதுவும் செய்யாமல் மீன்பிடிக்க அனுமதித்தனர்.

இதனால் கச்சதீவு கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்ற மீனவர்கள், மீன் பிடித்துத் திரும்பினர். ஆனால், கடலில் மீன்வரத்து குறைந்து விட்டதால், எதிர்பார்த்ததை விடக் குறைந்த அளவு இறால் மீன்களே கிடைத்துள்ளன. இந்நிலை நீடித்தால் மீன்பிடித் தொழிலில் பலத்த நஷ்டம் ஏற்படும் என கரை திரும்பிய மீனவர்கள் தெரிவித்தனர்.

# உலக வங்கியிடம் கடன் பெறும் நாடுகளில் இந்தியா முதலிடம்!

புதுடில்லி,ஓக.31

உலக வங்கி உட்பட சர்வதேச நிதியங்களிலிருந்து கடன் பெறும் கடன்பெறும் ஏழை நாடுகள் வரிசையில் இந்தியா முதலிடம் வகிக்கிறது என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு அதிகாரிகள் கூறியவை வருமாறு -

வளரும் மற்றும் ஏழை நாடுகளில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், வறுமையை ஒழிப்பதற்கும் உலக வங்கி உட்பட சர்வதேச நிதியங்கள் வட்டியில்லாமல் கடன் வழங்குகின்றன. இந்தக் கடனுதவிகள் முறைப்படி செலவிடப்படுகின்றனவா என்பதையும் அந்த அமைப்புகள் கண்காணிக்கின்றன. இதில் நலத்திட்டங்களை சிறப்பாக செயற்படுத்தும் நாடுகளுக்குக் கடனுதவி அதிகரித்து வழங்கப்படுகிறது. இந்த வகையில் ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் உதவியைச் சிறப்பாகக் கையாண்டதற்காக இந்தியாவுக்கு சர்வதேச நிதியங்கள் தாராள கடன் வழங்கியுள்ளன.

இதனால், 2009 -2010 ஆம் நிதியாண்டில் உலக வங்கி உட்பட சர்வதேச நிதியங்களிடமிருந்து, 33 ஆயிரம் கோடி ரூபா கடனுதவியைப் பெற்று கடன்பெறும் ஏழை நாடுகள் வரிசையில் இந்தியா முதலிடம் பிடித்துள்ளது. இதற்கடுத்து மெக்சிகோ 31 ஆயிரம் கோடி கடனுதவியைப் பெற்று இரண்டாம் இடம் வகிக்கிறது. தென்னாபிரிக்கா (18,620 கோடி), பிரேஸில் (18,130 கோடி), துருக்கி (14,700 கோடி) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. - இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

# போதை மருந்து இரகசியக் குறியீடுக்கு நடிகைகள் பெயரைப் பாவித்த கும்பல்!

## விலையுயர்ந்த போதைக்கு அனுஷ்கா, திரிஷா பெயர்கள்

ஐதராபாத்,ஓக.31

போதை மருந்துகளின் இரகசியக் குறியீட்டுக்கு நடிகைகளின் பெயர்களைப் போதைக் கும்பல் பயன்படுத்தியுள்ளமை தற்போது அம்பலமாகியுள்ளது.

பிரபல தெலுங்கு நடிகர் ரவிதேஜாவின் இரு சகோதரர்கள் போதை மருந்து வழக்கில் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து, ஐதராபாத் பொலிஸார் அதிரடி நடவடிக்கை மேற்கொண்டனர். போதைக் கும்பலுக்கு விபசாரம், கொலை மற்றும் ஆயுதக் கடத்தல் போன்ற சட்டவிரோத மாபியா நடவடிக்கைகளில் தொடர்பு இருக்கும் என்பதால் கடந்த ஒரு மாதத்தில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் தெலுங்கு பட உலகை உலுக்கி உள்ளது.

நைஜீரியா நாட்டைச் சேர்ந்த 4 இளைஞர்கள் உள்ளிட்ட வெளிநாட்டைச் சேர்ந்த பலரும் இந்தப் போதைத் தடுப்பு வேட்டையில் சிக்கினர். சாய்ராபானு, ஜோதி என்ற இரு நடிகைகள் விபசார வழக்கிலும் கைது செய்யப்பட்டனர். தெலுங்கு சினிமா உலகிலுள்ள ஏறத்தாழ 2 ஆயிரம் பேரில் 30 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் போதைப் பொருள் கும்பலின் பிடியில் சிக்கியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

தற்போது துணை நடிகர் - நடிகைகள் மட்டத்தில்தான் பொலிஸாரின் பிடியில் சிக்கி உள்ளனர். கதாநாயகன் - கதாநாயகி அந்தஸ்தில் உள்ள முன்னணி நடிகர், நடிகைகளுக்கும் இந்தக் கும்பலுடன் தொடர்பு இருக்கலாம் என்று கருதப்படுகிறது.



அது தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டு அவர்களை பொலிஸார் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள். டக்குபதி ராணா, காம்னா ஜெத்மலானி, பூனம் கவுர், உதய் கிரண், நானி போன்ற முன்னணி நடிகர், நடிகைகளின் பெயர்ப் பட்டியல் போதை மருந்துக் கும்பலிடம் இருக்கிறது எனத் தெரியவந்துள்ளது.

ஆனால், இந்தத் தகவலை நடிகர்கள் மறுத்து வருகிறார்கள். இதற்கிடையில் போதைப் பொருள்களின் பெயரை நேரடியாக குறிப்பிடாமல் பிரபல நடிகைகளின் பெயரை ரகசியக் குறியீடாகப் பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்டிருந்து தகவலும் வெளியாகி உள்ளது.

விலை உயர்ந்த போதைப்பொருளான 'எஸ்டஸி'க்கு அனுஷ்கா பெயரும், ஓபியத்துக்கு நடிகை திரிஷா பெயரும் சூட்டப்பட்டு உள்ளன. மலிவான போதைப் பொருள்களை கவர்ச்சி நடிகை முமைத் பெயரில் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சில இடங்களில் போதை பொருட்களுக்கு கடவுளின் ([illegible]) பெயரையும் [illegible] எனத் தெரிய வந்துள்ளது. (ர)

# திருப்பதி மலையிலிருந்து பள்ளத்தில் விழுந்த பக்தர் ஒரு வாரத்துக்குப் பின் உயிருடன் மீட்பு

திருமலை, ஓக.31

ஏழு மலையானைத் தரிசித்து விட்டு மலைப்பாதை வழியாக திருப்பதிக்கு நடந்து வந்து கொண்டிருந்தபோது பள்ளத்தில் விழுந்த பக்தர் ஒருவர் ஒருவாரத் திற்குப் பின்னர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளார்.

ஆந்திர மாநிலம் குண்டூரைச் சேர்ந்த ராம்கோபால் சீனிவாஸ் (வயது - 32) என்பவர் கடந்த 23 ஆம் திகதி திருமலைக்கு சென்று ஏழு மலையானை தரிசித்து விட்டு மலைப்பாதை வழியாக திருப்பதிக்கு நடந்து வந்தார். வழியில் ஸ்ரீவாரி மேடு என்ற இடத்தின் அருகே அவர் மலைப் பாதையின் ஓரத்தில் நின்று இயற்கை அழகை ரசித்து பார்த்துக் கொண்டிருந்த போது திடீரென்று தவறி கிடு கிடு பள்ளத்தில் விழுந்து விட்டார்.

அந்தப் பாதையில் சென்று கொண்டிருந்த மற்றொரு பக்தர் இதுபற்றி தீயணைப்புப் படையினருக்கு தகவல் தெரிவித்தார். அவர்கள் வந்து பள்ளத்தில் இறங்கி ராம்கோபால் சீனிவாசை தேடும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு வார கால போராட்டத்துக்குப் பின்னர் கை, காலில் முறிவு ஏற்பட்ட நிலையில் பள்ளத்தில் கிடந்த ராம்கோபால் சீனிவாசை தீயணைப்புப் படையினர் நேற்று முன்தினம் மீட்டு மேலே கொண்டு வந்து சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர் என திருப்பதி தேவஸ்தானக் கண்காணிப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 90 ஆயிரம் சிப்பாய்கள் திரும்பிய நிலையில் எட்டு வருடகால ஈராக் போர் முடிவுற்றது

## அமெ. ஜனாதிபதி வானொலிப் பேட்டியில் தெரிவிப்பு

வாஷிங்டன், ஓக. 31

ஈராக்கில் இருந்த அமெரிக்க இராணுவச் சிப்பாய்கள் 90 ஆயிரம் பேர் நாடு திரும்பிய நிலையில், எட்டு வருடகால ஈராக் போர் முடிவுக்கு வருகிறது. என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்திருக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள நியூயோர்க் நகரிலுள்ள 111 மாடி உலக வர்த்தக மைய இரட்டைக் கட்டடங்கள் கடத்தப்பட்ட விமானங்கள் மூலம் தகர்க்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பின்லேடனை பிடிப்பதற்காக ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியது.

பின்னர் பேரழிவு ஆயுதங்களை ஈராக் பதுக்கி வைத்திருக்கிறது எனக் கூறி அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஈராக் மீது 2003ஆம் ஆண்டு தாக்குதலை தொடங்கினார். கிட்டத்தட்ட 8 ஆண்டுகள் நடந்த இந்த போர் இப்போது முடிவுக்கு வந்து இருக்கிறது என அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அறிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக அமெரிக்காவிலிருந்து ஒலிபரப்பாகும் ஒரு வானொலிக்கு அவர் கூறியவை வருமாறு:-

''நான் ஜனாதிபதிப் பதவிக்குப் போட்டியிட்டபோது, ஈராக் போரை முடிவுக்குக் கொண்டு வருவேன் என்று கூறினேன். அதன்படி நான் பதவி ஏற்றது முதல் 90 ஆயிரம் இராணுவச் சிப்பாய்களை திரும்பப்பெற்றேன்.

''ஈராக்கிலுள்ள நூற்றுக்கணக்கான இராணுவ முகாம்களை மூடினோம். அந்த நாட்டின் பல பகுதிகளில் ஈராக்கியர்கள் பாதுகாப்புப் பொறுப்பை ஏற்றுள்ளனர். இப்போது ஈராக்கில் 50 ஆயிரம் அமெரிக்கச் சிப்பாய்கள் மட்டுமே எஞ்சி இருக்கிறார்கள்.

''அவர்களும் யுத்தத்தில் ஈடுபடமாட்டார்கள். அவர்கள் ஈராக் இராணுவச் சிப்பாய்களுக்குப் பயிற்சி அளிக்கும் வேலையை மட்டும் செய்வார்கள். போர் முடிவுக்கு வருவதையொட்டி, எந்த ஒரு சுதந்திர நாட்டையும் போல ஈராக் தன் வழியை தானே பார்த்துக்கொள்ளலாம்.

''அடுத்த ஆண்டு இறுதியில், அமெரிக்கத் துருப்புகள் அனைத்தும் நாடு திரும்பி விடும். இருந்தாலும் தீவிரவாதத்துக்கு எதிரான போரில் பங்குதாரர் என்ற முறையில் ஈராக்குக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்வோம்'' இவ்வாறு ஒபாமா கூறியுள்ளார்.

# தலிபான் தளபதி உட்பட 6 பேர் பலி

இஸ்லாமாபாத், ஓக. 31

பாகிஸ்தானில் பயங்கரவாதக் குழுக்களுக்கிடையே நடந்த சண்டையில் பஞ்சாப் மாகாணத்தைச் சேர்ந்த தலிபான் தளபதி உட்பட ஆறு பேர் கொல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் பஞ்சாப் மாகாணத்தில் தலிபான் தளபதியாகச் செயல்பட்டு வந்தவர் உஸ்மான். பழங்குடிகள் அதிகம் வசிக்கும் வடக்கு வசிரிஸ்தானிலுள்ள பாடசாலையில் தன் நண்பர்களுடன் உஸ்மான் தங்கியிருந்தார்.

சனிக்கிழமை இந்தப் பாடசாலையின் மீது, போட்டி தலிபான்கள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில், உஸ்மான் உட்பட ஆறு பேர் பலியாயினர்.

# 400 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தோனேசியாவில் எரிமலை

ஜகர்த்தா, ஓக. 31

இந்தோனேஷியாவிலுள்ள சுமத்ரா தீவில் உள்ள சினாபுங் என்ற எரிமலை 400 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக குமுறத் தொடங்கியுள்ளது. இதன்காரணமாக அந்த எரிமலையிலிருந்து எழுந்த கரும்புகை 5 ஆயிரம் அடி உயரத்துக்குப் பரவியுள்ளது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவு முதல் எரிமலை சீறத் தொடங்கியுள்ளது. அதிலிருந்து எரிமலை குழம்பு வெளிப்பட்டது. கடைசியாக இந்த எரிமலை, 1600ஆம் ஆண்டு வெடித்தது. அதற்குப் பின்னர் அமைதியாகவிருந்த இந்த எரிமலை இப்போது சீறத் தொடங்கியுள்ளது.

8 ஆயிரம் அடி உயரமுள்ள இந்த எரிமலையின் அடிவாரத்தில் வசித்த மக்கள் 12 ஆயிரம் பேரை அரசு பாதுகாப்பான இடத்துக்கு வெளியேற்றியுள்ளது. இந்த மலையைச் சுற்றியுள்ள பகுதி பெரும்பாலும் விவசாய பூமியாக இருப்பதால் மக்கள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை.

இந்த எரிமலைக்கு அருகிலுள்ள பெரிய நகரம் மெடான் ஆகும். அந்த நகரத்துக்கு விமானங்கள் வந்து செல்வது பாதிக்கப்படவில்லை.

சுகாதாரத்துறை அதிகாரிகள், அந்தப் பகுதி மக்களுக்கு சர்ஜரி முகமூடிகளை இலவசமாக விநியோகித்துள்ளனர். (எ)

# தென்கொரியப் பிரதமராக தெரிவு செய்யப்பட்டவர் இராஜிநாமா

சியோல், ஓக. 31

தென் கொரியாவின் அடுத்த பிரதமராக தெரிவுசெய்யப்பட்ட கிம் டே-ஹோ (வயது - 47) கடந்த ஞாயிற்றுக்கிழமை இராஜிநாமா செய்தார்.

தெற்கு ஜியோங்சங் மாகாண ஆளுநராக இருந்தபோது ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என அவர் மீது முறைப்பாடு எழுந்ததையடுத்து அவர் தனது பதவியை இராஜிநாமா செய்துள்ளார். இதே போன்று ஏற்கனவே இரண்டு அமைச்சர்கள் பதவியை இராஜிநாமா செய்துள்ளனர்.

தென் கொரிய ஜனாதிபதி லீ மியூங் பக் தனது அமைச்சரவையை சமீபத்தில் மாற்றி அமைத்தார். அதில் தெற்கு ஜியோங்சங் மாகாண ஆளுநராக இருந்த கிம் டே-ஹோவை பிரதமராக நியமித்தார்.

இதற்கு தென் கொரிய நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்கியது. இந்நிலையில் அவர் மீது ஊழல் குற்றச்சாட்டு எழுந்ததையடுத்து அவர் தனது பதவியை இராஜிநாமா செய்தார்.

இதுகுறித்து கிம் கூறுகையில், ''எனக்கு பிரதமர் பதவி அளித்த ஜனாதிபதி லீ யின் தலைமையிலான அரசுக்குப் பாதிப்பு ஏற்படுத்த விரும்பவில்லை. அதனாலேயே இராஜிநாமா செய்துள்ளேன். தென் கொரிய மக்கள் என் மீது நம்பிக்கை வைக்காத நிலையில், அவர்களுக்கு நான் என்ன செய்ய முடியும்'' என்றார்.

# மும்பைத் தீவிரவாதத் தாக்குதல் தொடர்பாக சாட்சிகளிடம் விசாரணை நடத்த பாக். முடிவு

இஸ்லாமாபாத், ஓக. 31

மும்பைத் தாக்குதல் சம்பவ சாட்சிகளிடம் விசாரணை நடத்துவதற்காக குழு ஒன்றை அனுப்ப பாகிஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு நவம்பர் 26ஆம் திகதி மும்பையில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இவற்றில், 160 இற்கும் மேற்பட்ட அப்பாவிகள் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலின் போது கைதான தீவிரவாதி அஜ்மல் கசாப்பிற்கு சிறப்பு நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

இதற்கிடையில், மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தானைச் சேர்ந்த சிலருக்குத் தொடர்பு இருக்கிறது என இந்தியா கொடுத்த ஆதாரங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் அரசும் சிலரை கைதுசெய்து வழக்குத் தொடர்ந்துள்ளது.

இந்த வழக்கு பாகிஸ்தானின் பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. அதே நேரத்தில், மும்பைத் தாக்குதல் வழக்கில் தண்டனை பெற்ற அஜ்மல் கசாப்பை பாகிஸ்தானுக்கு அனுப்பி, பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கச் செய்ய வேண்டும் என பாகிஸ்தான் அரசு கோரிக்கை விடுத்துள்ளது. இக்கோரிக்கையை ஏற்க இந்திய அரசு மறுத்து விட்டது.

இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரகுமான் மாலிக் கூறுகையில், ''மும்பைத் தாக்குதல் தொடர்பாக லஷ்கர்-இ-தொய்பா கொமாண்டர் ஜாகீர் ரகுமான் லக்வி உட்பட ஏழு பேருக்கு எதிராகப் பாகிஸ்தானில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அந்த வழக்கு பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்நிலையில், ஆணைக்குழு ஒன்றை அமைக்கும்படி கோரி, பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தை அணுக பாகிஸ்தான் அரசு முடிவு செய்துள்ளது.

அந்த ஆணைக்குழு இந்தியாவுக்குச் சென்று, மும்பைத் தாக்குதல் சம்பவ சாட்சிகளிடம் விசாரணை நடத்தும்.

மும்பைத் தாக்குதல் வழக்கை விசாரித்த நீதிபதி தீவிரவாதி கசாப்பின் வாக்குமூலத்தை பதிவுசெய்த பொலிஸ் அதிகாரிகள் என பலரிடமும் விசாரணை நடத்தி, அவர்களின் வாக்குமூலத்தை பதிவு செய்யும்.

ஆணைக்குழு அமைக்க பாகிஸ்தான் சட்ட விதிகளும் அனுமதிக்கின்றன. இந்தியாவும், பாகிஸ்தான் நீதிமன்றமும் ஆணைக்குழு அமைக்க ஒப்புக்கொண்டால், அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

சில சட்ட ரீதியான பிரச்சினைகளைக் கையாள ஆணைக்குழு அமைக்க வேண்டியது அவசியமான ஒன்று'' எனக் குறிப்பிட்டுள்ளார்.



அமெரிக்கா மாஸ் மாகாணத்தின் பொர்ன் கேப் கோட் கடற்கரை விமானத் தளத்தில், ஜனாதிபதி ஒபாமா, அவரது மனைவி மிசெலே ஒபாமா அவர்களது பிள்ளைகள் ஆகியோர் விடுமுறை நாட்களை கழித்துவிட்டு திரும்புகின்றனர்.

# இந்தியாவின் வெள்ள நிவாரண உதவியை ஐ.நா. மூலம் பெற பாகிஸ்தான் இணக்கம்

இஸ்லாமாபாத், ஓக. 31

பாகிஸ்தான் வெள்ள நிவாரணத்துக்காக, இந்தியாவின் சார்பில் அளிக்கப்படும் உதவிகள், ஐ.நா. மூலம் அளிக்கப்பட வேண்டும் என பாகிஸ்தான் வற்புறுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் சிந்து மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் பெய்த பலத்த மழையால், ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு நூற்றுக்கணக்கான கிராமங்கள் மூழ்கின. ஆயிரத்து 700இற்கும் அதிகமான மக்கள் பலியாயினர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நாடுகள் நிவாரண உதவிகளை வழங்கி வருகின்றன. இந்தியாவின் சார்பில் 25 கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டன.

எனினும், இந்த உதவியைப் பெறுவதற்கு பாகிஸ்தான் அரசு தயங்கியது. அமெரிக்காவின் வற்புறுத்தலால் இந்த உதவியை ஏற்க பாகிஸ்தான் சம்மதித்துள்ளது. இந்தியாவின் நிவாரண உதவி குறித்து பாகிஸ்தானின் பல்வேறு தரப்புகளில் விமர்சனம் செய்யப்பட்டது.

காஷ்மீர் மக்களின் இரத்தக் கறை படிந்த இந்த உதவி தேவையில்லை என ஒரு சில பத்திரிகைகள் தெரிவித்துள்ளன. பொருளாதாரத்தில் முன்னேறியுள்ள இந்தியாவின் நிவாரண உதவி, மிகக்குறைவாக உள்ளது என மற்றொரு சாரார் குறிப்பிட்டுள்ளனர்.

பாகிஸ்தானுக்கு இந்தியா அளிக்கும் உதவி நேரடியாக வரக்கூடாது என்றும் ஐ.நாவின் சார்பில் செயல்படும் அமைப்புகள் மூலம் வழங்கப்பட வேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து பாகிஸ்தான் அரசும் இந்திய உதவியை ஐ.நாவின் மூலம் பெற விருப்பம் தெரிவித்துள்ளது.

## உலக அரங்கில்

# அல்ஜீரியாவில் தாக்குதல்: 10 தீவிரவாதிகள் மரணம்

அல்ஜீயர்ஸ், ஓக. 31

ஆபிரிக்காவிலுள்ள அல்ஜீரியாவின் கிழக்குப் பகுதி, அல்-குவைதாவின் வட ஆபிரிக்கப் பிரிவின் செல்வாக்கு மிக்க பகுதியாகவுள்ளது.

பெனி யென்னி என்ற கிராமம் அருகிலுள்ள கபிலி என்ற இடத்தில் இராணுவத்துக்கும், தீவிரவாதிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலில் 10 தீவிரவாதிகள் பலியாயினர். அவர்களிடமிருந்த பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

# ஆப்கானில் குண்டுவெடிப்பு: 7 அமெ. சிப்பாய்கள் பலி!

காபூல், ஓக. 31

ஆப்கானிஸ்தானில் 3 வெவ்வேறு இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல்களில், அமெரிக்கப் படைச் சிப்பாய்கள் 7 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள வெளிநாட்டுச் சிப்பாய்களை தீவிரவாதிகள் குறிவைத்துத் தாக்குகின்றமை தொடர்கதையாகி வருகிறது.

இந்நிலையில், தெற்கு ஆப்கானிஸ்தானின் ஹீரத் பகுதியில் கடந்த இரு நாட்களில் 3 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 7 அமெரிக்கச் சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

ஒகஸ்ட் மாதத்தில் மட்டும், ஆப்கானிஸ்தானில் மொத்தம் 42 அமெரிக்கச் சிப்பாய்கள் பல்வேறு பயங்கரவாதச் சம்பவங்களில் உயிரிழந்துள்ளனர். இதுதவிர பிரிட்டிஷ் சிப்பாய்கள் 7 பேர் உட்பட 20 வெளிநாட்டுப் படையினரும் இந்த மாதத்தில் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். போதனா வைத்தியசாலை

## மாணவ தாதியர்களை ஆள்சேர்த்துக் கொள்ளல்-2010

சுகாதார அமைச்சின் (கொழும்பு), அறிவுறுத்தலுக்கு அமைவாக மாணவ தாதிய பயிற்சியின் பொருட்டு ஆள்சேர்த்துக் கொள்வதற்கு கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டுள்ள வடமாகாணத்தில் வாழும் இலங்கை பிரஜைகளிடமிருந்து (விவாகமாகாத) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டுத் திருப்திகரமாக பயிற்சியை முடிப்பவர்கள் வடமாகாணத்தில் இவ்வமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் வைத்தியசாலைகளில் தாதியர்களாக நியமிக்கப்படுவர்.

I. கல்வித்தகைமைகள்.

* க.பொ.த.சா.தரம்.

க.பொ.த.சா.தரப் பரீட்சைகளில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் உட்பட நான்கு திறமைச்சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

* க.பொ.த.உயர்தரம்.

2006, 2007, 2008 ஆம் ஆண்டுகளில் உயர்தரப் பரீட்சைக்கு தமிழ்மொழி மூலம் தோற்றி ஏதாவதொரு பாடநெறியில் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை) குறைந்த பட்சம் மூன்று பாடங்களில் தேர்ச்சிபெற்றிருத்தல்.

II. ஏனைய தகைமைகள்.

* வயது-09.09.2010ஆம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.
* உயரம் - 4' 10'' (146 Cm) இற்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.
* திருமணமாகாதவராக இருக்க வேண்டும்.
* வடமாகாணத்தில் சேவையாற்றுவதற்கு விரும்புபவராகவும், நல்ல தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
* தான் விண்ணப்பிக்கும் மாவட்டத்தினுள் மூன்றாண்டுகள் குடியிருப்பை உறுதிப்படுத்துவதற்கு வாக்காளர் பட்டியலில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை இணைத்து அனுப்பவேண்டும். விண்ணப்பதாரியின் பெயர் பெயர்ப் பதிவேட்டில் இல்லாவிடின் அவரது பெற்றோர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருக்க வேண்டும்.

அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பின் அப்பெயர்கள் தனது பெற்றோர்களின் பெயர்கள் என்பதை உறுதிப்படுத்துவதன் பொருட்டு பிறப்புச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

மேற்படி தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

இவ்விண்ணப்பதாரர்கள் 09.09.2010 அன்று காலை 8.00 மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலையுடன் இணைந்திருக்கும் யாழ்.தாதியர் கல்லூரிக்குப் பின்வரும் ஆவணங்களுடன் நேரடியாக சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* தாங்களாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம் (விண்ணப்பப்படிவ மாதிரி இணைக்கப்பட்டுள்ளது)
* ஆள் அடையாள அட்டை.
* பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்.
* கல்வித் தகைமைகள் (மூலப்பிரதி, போட்டோப்பிரதி)

பிற்குறிப்பு - ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் 02.09.2010 ஆம் திகதிக்குப் பதிலாக 09.09.2010ஆம் திகதியில் தாதியர் கல்லூரிக்குச் சமூகம் கொடுக்கவும்.

**மாணவ ஆண்-பெண் தாதிமார் பயிற்சியின் பொருட்டு ஆள்சேர்த்துக் கொள்ளல்-2010 (தமிழ் மொழி மூலம் - வடமாகாணம்)**

1. (அ). முதலெழுத்துக்களுடன் இறுதிப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)
(ஆ). முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) ..............................
2. தபால் முகவரி (ஆங்கிலத்தில்) ..............................
3.I. நிரந்தர முகவரி (ஆங்கிலத்தில்) ..............................
II. மாவட்டம் (ஆங்கிலத்தில்) ..............................
4. பிறந்த திகதி :-.............. ஆண்டு : .............. மாதம் : .............. திகதி : ............
5. பால்

| | |
|---|---|
| ஆண் | |
| பெண் | |

ஏற்புடைய கூட்டில் சரி போடவும்.

6. நீர் இலங்கைப் பிரஜையா?
7. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ..............................
8. உயரம் :- அடி : ...................... அங்குலம் : ......................
9. கல்விப் பொதுத்தராதரப் பத்திரம் (உ/த) பரீட்சையில் தோற்றிய பாடங்கள் மற்றும் (புள்ளிகள் குறிப்பிடப்பட்ட பிரதியை இணைக்கவும்.)

அ. ஆண்டு : .............................. சுட்டிலக்கம் : ..............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

ஆ. க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை
முதலமர்வு :
I. பரீட்சை வருடமும் மாதமும்..............................
II. ஆண்டு : .............................. சுட்டிலக்கம்: ..............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

இரண்டாம் அமர்வு :
I. பரீட்சை வருடமும் மாதமும்
II.சுட்டிலக்கம்..............................

| பாடம் | தரம் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |
| 5 | | |
| 6 | | |
| 7 | | |
| 8 | | |
| 9 | | |
| 10 | | |
| 11 | | |
| 12 | | |

10. நீதிமன்றமொன்றில் எப்போதாவது ஏதாவது குற்றம் தொடர்பில் குற்றம் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீரா?

| | |
|---|---|
| ஆம் | |
| இல்லை | |

ஆம் எனின் விவரம் தருக :

11. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

அ) இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவிற்கு எட்டிய வகையில் உண்மையானவைகள் எனவும், சரியானவைகளெனவும் கௌரவத்துடன் வெளிப்படுத்துகிறேன்.

ஆ) என்னால் தரப்பட்டுள்ள இத்தகவல்கள் பொய்யானவைகள் எனக் கண்டுபிடிக்கப்படின் சேவைக்கு ஆள்சேர்த்துக் கொள்வதற்கு முன்பு தகுதியற்றவன் எனவும் நியமனத்தின் பின்பு அவ்வாறு கண்டுபிடிக்கப்படின் சேவையினின்றும் விலக்கப்படு வேன் என்பதையும் நான் அறிவேன்.

இங்கு ரூபா 500 இற்கான முத்திரை ஒட்டி அதன் மேல் கையொப்பம் இட்டுச் செல்லு படி அற்றதாக்குக.

.............................. ..............................
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

12. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் .............................. .............................. என்பவரை நான் நன்றாக அறிவேன் என்றும் அவர் .............................. ஆந் திகதி என் முன்னிலையில் அவருடைய கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..............................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ..............................
..............................
பதவி : ..............................
முகவரி : ..............................
திகதி : ..............................

பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

30.08.2010 (சி/570468)

### இளைஞர் யுவதிகளுக்கு சுயதொழில் கடன்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ''நிஸ்கோ'' பிரிவு யாழ். மாவட்டத்தில் உள்ள சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு சுய தொழில்கடன்வழங்க முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் உள்ள 18 வயது தொடக்கம் 30 வயதுக் கிடைப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கு ஆகக்கூடுதலாக இரண்டரை லட்சம் ரூபா கடனாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடன்களைப் பெறுவதற்கு ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தமது சுய விவரங்களை பொதுமுகாமையாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், கண்டி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

VISA - வீசா
Consultancy Service
UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,
Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas
Call : 0776 209 887
SIC, 734, Hospital Road, Jaffna.

## Digital Art Work

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கீழ் வரும் பயிற்சிகளை ஒப்பந்த அடிப்படையில் கற்பிக்கக் கூடிய அனுபவம், திறமை வாய்ந்த போதனாசிரியரிடம் இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது. தங்கள் விவரங்களை உள்ளடக்கிய விண்ணப்பத்தினை 10.09.2010 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணப்பணிப்பாளர், கிராம அபிவிருத்தித் திணைக்களம், வடமாகாணம், கன்னியா வீதி வரோதயநகர், திருகோணமலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பயிற்சி நெறியின் பாட விதானம்

கணனி சார் பயிற்சிகள் (Coral Raw, Photo Shop) கைவழி வர்ண முறைகள் (வீட்டு வர்ணம் போன்றன) கைவழி அலங்காரப் பொருள்கள் ஆக்கம், ஸ்கிறீன் பிறிண்டிங், இறப்பர் சீல் தயாரித்தல், பிளாஸ்ரிக் அடையாள அட்டை தயாரித்தல், பிளாஸ்ரிக் தொழில்நுட்பம், விளம்பரப்பலகை தயார்செய்தல் நினைவுப்பொருள்கள், கேடயங்கள் தயாரித்தல், பெயர்பொறித்தல் (கண்ணாடி, கிரனைட் கற்கள் மற்றும் இதர), எம்போசிங்.

மகாணப் பணிப்பாளர்,
கிராம அபிவிருத்தித் திணைக்களம்.

(சி/570469)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி கிழக்கின் அம்பன் பகுதியில் 81 குடும்பங்கள் நேற்று மீள் குடியமர்வு

பருத்தித்துறை, ஒக.31

உயர் பாதுகாப்பு வலயமான வடமராட்சி கிழக்கு அம்பன் கிராமத்தில் 81 குடும்பங்கள் நேற்றுத் திங்கட்கிழமை மீளக் குடியமர்த்தப்பட்டன. குடத்தனை அ.த.க. பாடசாலையில் முற்பகல் 10 மணிக்கு இந் நிகழ்வு ஆரம்பமானது.

512 ஆவது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் டிக்கிரி திஸநாயக்க தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மஹிந்த ஹத்துசிங்க கலந்துகொண்டார்.

சொந்த இடத்தில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்கள், கூரைத் தகடுகள், சிமெந்துப் பைக்கற்றுக்கள் என்பன வழங்கப்பட்டன. 44 குடும்பங்களுக்கு குடத்தனை வலிச் சந்தியில் ஏற்கனவே அரச சார்பற்ற நிறுவனம் வீடுகளைக் கட்டி வழங்கியிருந்தது. அந்த மக்கள் அம்பனில் உள்ள தமது சொந்தக் காணிகளில் விவசாயம் செய்யவும், வருமானங்களைப் பெற்றுக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டது.

இதேவேளை - புலோலி பல்லப்பை இராணுவ முகாமாகப் பயன்படுத்தப்பட்ட 7 வீடுகளும் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந் நிகழ்வில் இராணுவ அதிகாரிகள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், வடமராட்சி கிழக்கு கிராம சேவையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீள் குடியமர்த்தப்படுவது போன்று நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களையும் விரைவில் மீள் குடியமர்த்துவோம் - என்றார்.

(ஒ-6-190-236)

## விதாதா வள நிலையத்தில் கணனி பயிற்சி நெறி.

யாழ்ப்பாணம், ஒக. 31

பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையம், கரித்தாஸ் கியூடெக் ஆகியவற்றின் ஏற்பாட்டில் குறுங்காலக் கணனிப்பயிற்சி நெறிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிநெறிகள் பொலிகண்டி சமுர்த்திவங்கிக்கு அருகிலுள்ள விதாதா வள நிலையத்தில், கிழமை நாள்களில் நடைபெறவுள்ளன.

பயிற்சிநெறிக்காக உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு முடிவுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள், ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தங்கள் பதிவுகளை பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் உள்ள விதாதா வள நிலைய விஞ்ஞான தொழில்நுட்பவியல் உத்தியோகத்தரிடம் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-10)

# கார்த்திகைத் திருவிழாவில் இன்று மாலை நல்லூர்க் கந்தனுக்கு இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஒக. 31

நல்லூர் கந்தனுக்கு இன்று மாலை ஆலயத்தின் எட்டுத்திசைகளிலும் விசேட இசை அர்ச்சனை இடம்பெறவுள்ளது.

நல்லூர் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் 17ஆம் திருவிழாவான கார்த்திகைத் திருவிழா இன்று வெகுவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் விசேட நிகழ்வாக மாலை முருகப் பெருமான் வெளி வீதியுலா வந்தபின்னர் ஆலய உட்பிரகாரம் முழுவதும் கார்த்திகைத் தீபங்களால் அலங்கரிக்கப்பட்டு ஆலயத்தின் எட்டுத் திசையிலும் ஈழத்து இசைக்கலைஞர்கள் மற்றும் இளம் கலைஞர்கள் சேர்ந்து இந்த விசேட இசை அர்ச்சனையை நிகழ்த்தவுள்ளனர்.

இதில் சகல இசைக்கலைஞர்களும் கலந்துகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-16)



சவூதி அரேபியாவில் வீட்டுப் பணிப்பெண்ணாகப் பணிபுரிந்த இலங்கைப் பெண்ணுக்கு உடம்பில் ஆணி ஏற்றியதைக் கண்டித்து நேற்று இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதரகத்துக்கு முன் ஐ.தே.கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தியதைப் படத்தில் காணலாம்.

# காரைநகரில் 'பீச்சுக்கு' அருகில் விபத்து



யாழ்ப்பாணம், ஒக. 31

காரைநகர் கசூரினா ''பீச்சை'' நோக்கிச் சென்றுகொண்டிருந்த தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பயணித்த பஸ்ஸும் 782ஆம் பாதை இலக்க மினிபஸ்ஸும் நேற்றுக்காலை மோதி விபத்துக்குள்ளானதில் மினிபஸ்ஸில் பயணித்த வயோதிபப் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

இந்த விபத்துத் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

காரைநகர் கசூரினா பீச்சை நோக்கித் தொடரணியாகச் சென்றுகொண்டிருந்த தென்னிலங்கைச் சுற்றுலாப் பயணிகளின் பஸ்ஸுடன் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் பழைய கண்டிப் பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் மினிபஸ்ஸில் பயணித்த காரைநகர் மருதபுரத்தைச் சேர்ந்த எஸ்.இராசம்மா (வயது 67) காயமடைந்து காரைநகர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இந்த விபத்தை அடுத்து அப் பகுதியூடான போக்குவரத்துகள் ஒரு சில மணிநேரம் தடைப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-16-250)

# பணிப்பெண் மீது ஆணி அடிப்பு விவகாரம்; சவூதியில் இளம் கணவன், மனைவி கைது!

கொழும்பு, ஒக. 31

இலங்கை பணிப்பெண் மீது 24 ஆணி அடித்து துன்புறுத்தியதாகக் கூறப்படும் 35 வயதாகிய ஆணையும் 29 வயதாகிய அவரது மனைவியையும் சவூதி அரேபிய பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட தம்பதியினர் தமது குற்றத்தினை ஒப்புக்கொண்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி பாதிப்புக்குள்ளாகிய பெண்ணுக்கு நியாயத்தைப் பெற்றுத் தருமாறு இலங்கை, சவுதி அரேபியாவிடம் நிர்பந்தித்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த பெண் வாக்குமூலம் அளிப்பதற்காக சவூதி அரேபியா செல்வதற்கான நடவடிக்கைகளையும் இலங்கை வேலை வாய்ப்புப் பணியகம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

# பஸ்களில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முறைப்பாடு செய்யப் புதிய தொலைபேசி எண்

கொழும்பு, ஒக. 31

பஸ் பிரயாணங்களை மேற்கொள்ளும் மக்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் அசௌகரியங்கள் குறித்து தெரிவிக்க இலங்கை போக்குவரத்து சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக இலங்கை போக்குவரத்துச் சபை விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 0117 555555 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகொண்டு இது குறித்து முறைப்பாடுகள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்க முடியும்.

இந்த தொலைபேசி இலக்கம் 24 மணிநேரமும் சேவையில் இருக்கும் என இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் பந்து சேன தெரிவித்துள்ளார்.

நாளாந்தம் காலை 7 மணிமுதல் இரவு 7 மணிவரை பெறப்படும் முறைப்பாடுகளுக்கு அன்றைய தினமே தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுவதோடு, இரவு 7 மணிக்குப் பின்னர் பெறப்படும் முறைப்பாடுகளுக்கு அடுத்த நாள் அதற்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படும் என அவர் கூறியுள்ளார்.

(ஒ-சி)

# மீண்டும் ஓட்டோ சாரதியானார் கொழும்பு முன்னாள் மேயர்

கொழும்பு, ஓக.31

ஓட்டோ சாரதியாகத் தொழில் புரியும் முன்னாள் கொழும்பு மேயர் மொஹம்மட் இம்தியாஸ், மீண்டும் கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடப் போவதாக ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் மேயர் பகல் நேரங்களில் பகுதிநேர வேலைகளில் ஈடுபடுகின்றார் என்றும், இரவு நேரங்களில் ஓட்டோ செலுத்தும் தொழிலை மேற்கொள்கின்றார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. மேயருக்கான உத்தியோகபூர்வ இல்லத்தில் அவர் தொடர்ந்தும் தங்கியிருக்கிறார். ஜனாதிபதி தெரிவிக்கும்வரை அங்கேயே தங்கியிருக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகரசபை விசேட ஆணையாளர் ஓமர் காமில், இம்தியாஸை பல தடவைகள் உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறும்படி தெரிவித்தும் அவர் விடாப்பிடியாக அங்கு தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

## ஜனாதிபதி நாடாளுமன்றுக்கு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சலுகைகளும் இத்திருத்தங்களின்படி ஜனாதிபதிக்குக் கிடைக்கும்.

அரசமைப்புத் திருத்தங்களுக்கு நேற்றுக் கூடிய விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அமைச்சரவை அங்கீகரித்த அரசமைப்புத் திருத்தங்கள் நீதி ஆலோசனை பெறுவதற்காக உயர் நீதிமன்றத்துக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்படவுள்ளன என அமைச்சர் ராஜித சேனரத்ன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை, ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 17ஆவது அரசமைப்புத் திருத்தத்திலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, அரசசேவை ஆணைக்குழு, ஊழலுக்கு எதிரான ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய குழுக்களை அமைப்பதற்கு நாடாளுமன்றத்தில் ஐந்து பேர் கொண்ட குழு அமைக்கப்படும்.

இக்குழுவில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், சபாநாயகர் ஆகியோர் உட்படப் பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரால் நியமிக்கப்படும் இரு சிறுபான்மை இனத்தவர்களும் அங்கம் வகிப்பர்.

இதற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்க வேண்டும்.

17ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் படி பொலிஸ் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டிருந்த இடமாற்றம் உட்பட்ட அதிகாரங்கள் புதிய திருத்தத்தின் படி பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்படும்.

உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் இனிமேல் தொகுதிமுறை மற்றும் விகிதாசார முறையின் கீழ் நடத்தப்படும். புதிய அரசமைப்புத் திருத்தங்களில் இதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. இதில் விகிதாசார முறைக்கு மூன்றில் இரண்டு பங்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இது தவிர உள்ளூராட்சி சபைகளின் வரவு - செலவுத் திட்டம் தோல்வியடையும்போது தவிசாளருக்கு வழங்கப்பட்டிருந்த வாக்களிக்கும் அதிகாரம் புதிய அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் நீக்கப்பட்டுள்ளது.

மேற்படி மூன்று திருத்தங்களை உள்ளடக்கிய அரசமைப்புத் திருத்தங்களுக்கே நேற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

(அ-சி)

## அரசமைப்புத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீக்கவேண்டும் என்றும் 17ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் நாம் அரசுடன் பேசும் போதெல்லாம் கேட்டுக்கொண்டோம். அதனுடன் தொடர்புபட்ட சில திருத்தங்கள் பற்றி அரசு கூறியது. எப்படியாயினும் அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று நாம் அரசிடம் கூறினோம்.

திருத்த யோசனைகள் தொடர்பாக எம்முடன் பேச்சு நடத்தியதுபோல் ஏனைய அரசியல் கட்சிகள் மற்றும் சமூக, பொது நிறுவனங்கள் போன்றவற்றுடனும் பேச்சுகள் நடத்தவேண்டும் என்று நாம் அரசிடம் கூறுவோம்.

இப்போது அரசு திருத்த யோசனைகளை எம்மிடம் ஒப்படைத்துள்ளது. இது தொடர்பாக எமது கட்சி ஆராய்ந்து எமது நிலைப்பாட்டை நாளை (இன்று) வெளியிடும்.

இருப்பினும், நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் ஏற்படாது. - என்றார்.

(ஒ-சி)

## நச்சுத் திராவகத்தை தவறுதலாக அருந்திய 3 வயதுக் குழந்தை மரணம்!

யாழ்ப்பாணம், ஒக. 31

வீட்டில் விளையாடிக் கொண்டிருந்த மூன்று வயதுக் குழந்தை போத்தலில் இருந்த நச்சுத் திராவகத்தைத் தவறுதலாகப் பருகியதால் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இளவாலையில் இடம்பெற்றது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது :-

நேற்றுக்காலை குறித்த குழந்தையின் பெற்றோர் வழமையான வீட்டுவேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது விளையாடிக் கொண்டிருந்த குழந்தை அங்கிருந்த நச்சுத் திராவகத்தை எடுத்துக் குடித்துவிட்டது. இதை அறிந்த பெற்றோர் குழந்தையை அவசர அவசரமாக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

எனினும் சிகிச்சை பயனின்றி இக் குழந்தை உயிரிழந்துவிட்டது. இந்தச் சம்பவத்தில் சென்.ஜேம்ஸ் இளவாலை யைச் சேர்ந்த ஆர்.ரெபேகா (வயது 3) என்னும் குழந்தையே பரிதாபகரமாக மரணமானது.

(ஒ-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைத் தோற்கடிக்கக் கையாண்ட யுக்தி: ஆராய இந்திய - பாக். இராணுவத்தினர் வருவர்

கொழும்பு, ஒக. 31

தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காகஇலங்கைஇராணுவம்கையாண்ட தந்திரோபாயங்கள் குறித்து ஆராய்வதற்கு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இராணுவங்கள் தீர்மானித்துள்ளன.

இதற்காக இரண்டு நாடுகளினதும் இராணுவக் குழுக்கள் எதிர்காலத்தில் இலங்கை வரவுள்ளன என இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் உதய மெதவல கூறினார்.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்காக இலங்கை இராணுவம் புவியியல் அமைப்புகளைப் பயன்படுத்திய விதம் தொடர்பாக இந்திய, பாகிஸ்தான் இராணுவத்தினர் கவனம் செலுத்துவார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான இறுதிக்கட்ட யுத்தம் நடைபெற்ற வெள்ளாமுள்ளிவாய்க்கால் பகுதியையும் அவர்கள் பார்வையிடவுள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார். (ஒ-சி)

## இலங்கைக்கு வரத் தயாராகும் இந்திய உயர் அதிகாரிகள்

இந்திய வெளிவிவகாரச் செயலர் நிருபமா ராவைத் தொடர்ந்து இராணுவத் தளபதி, விமானப்படைத் தளபதி, பாதுகாப்புச் செயலர் என்று அடுத்தடுத்து பல உயர்நிலை இந்திய அதிகாரிகள் இலங்கைக்கு வரவுள்ளனர்.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் விஜய்குமார் சிங் அடுத்த மாத தொடக்கத்தில் இலங்கைக்கு வரவுள்ளார்.

இவரையடுத்து இந்திய விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்ஷல் பிரதீப் வசந்த் நாயக் மற்றும் இந்திய பாதுகாப்பு செயலர் பிரதீப் குமார் ஆகியோரும் அடுத்தடுத்து இங்கு வரவுள்ளனர். (ஒ-6)

## இனப்பிரச்சினை குறித்து அடுத்த மாதத்தில் அரச - கூட்டமைப்புக் குழுக்கள் ஆராயும்

கொழும்பு, ஒக. 31

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண் பதற்கு விசேட குழு ஒன்றை நியமிப் பதற்கு ஜனாதிபதி உடன்பட்டிருக்கிறார். செப்ரெம்பர் மாதத்தில் அது தொடர்பான பேச்சுக்கள் நடைபெறவுள்ளன. அரசியல் தீர்வு தொடர்பாகஆராயும்அரசகுழுவுக்குதலைவராக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸை ஜனாதிபதி நியமித்துள்ளார். இது சம்பந்தமாக அமைச்சர் பீரிஸ் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தொடர்பு கொண்டு வருகின்றார்.

இதேவேளை இனப்பிரச்சினை சம்பந்தமாக ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தனது சார்பில் குழுவொன்றை விரைவில் நியமிக்கவுள்ளது. அந்தக் குழு நியமிக்கப்பட்டதும் செம்ரெம்பர் மாத முற்பகுதியில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. தமிழத் தேசிக் கூட்டமைப் பின் நாடா ளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந் திரன் இத் தகவலை வெளியிட்டுள்ளார். (அ-10)

## யாழ். ஆஸ்பத்திரியில் சிசுவின் சடலம்

யாழ்ப்பாணம், ஒக. 31

சங்கானை, ஏழாம் கட்டைையச் சேர்ந்த நடராசா யோகேஸ்வரி என்பவருடைய 5 நாள் வயதுடைய ஆண் சிசுவின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சிசுவின் சடலத்தை இதுவரை எவரும் உரிமை கோராது இருப்பதால் உரித்துடையோர் 3 தினங்களுக்குள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார். (ஒ)

## முன்னாள் அமைச்சர் ஜயக்கொடி காலமானார்

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் ஜயக்கொடி நேற்று மாலை காலமானார். புற்றுநோய் காரணமாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே இவர் உயிரிழந்துள்ளார்.

இவர் முன்னாள் கலாசார மற்றும் சமய விவகார அமைச்சராகவும், பிரதி வெளிவிவகார மற்றும் பாதுகாப்பு அமைச்சராகவும் கடமையாற்றியுள்ளார். லக்ஷ்மன் ஜயக்கொடி அத்தனகல பிரதேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவராவார். (ஒ-சி)

### கூட்டமைப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசமைப்பிலுள்ள ஷரத்தை நீக்குதல், உள்ளூராட்சிச் சபைகளுக்கு விகிதாசாரம் மற்றும் தொகுதிவாரி முறை கலந்த தேர்தலை நடத்துதல், அரசமைப்புச் சபைக்குப் பதிலாக ஐந்து பேர் கொண்ட குழுவை நியமித்தல் ஆகியனவும் இந்த அரசமைப்புத் திருத்தத்தில் அடங்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

### தமிழ் மக்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் இலங்கையில் இந்தியாவின் பிரசன்னம் அதிகரித்துள்ளது. இதை விடுத்து இந்தியா இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் தொடர்பில் கரிசனை கொண்டுள்ளதாகக் கூறமுடியாது.

முஸ்லிம் மக்களின் உரிமைகளையும் தேவைகளையும் பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தை எடுத்திருக்கலாம். இந்த முடிவால் மூன்றில் இரண்டுக்கு மேலான பலத்தை அரசு கொண்டுள்ளது.

இதேவேளை, எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பலவீனமடைந்துள்ளன. இது ஜனநாயகத்தைப் பாதிக்கும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இவ்வாறு அவர் அந்தச் செவ்வியில் தெரிவித்தார்.

அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகள் நேற்று மாலை கூடி அரசமைப்புத் திருத்தங்களுக்கு ஆதரவளிப்பதா இல்லையா என ஆராயவிருந்தன.(ஒ-சி)

### தெற்காசிய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

425 மாணவர்களுக்குக் கல்விக்கான உதவித்தொகையாக 5 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது :-

வெளிநாடுகளில் பிரபல்யமான பல்கலைக்கழகங்களை இங்கு ஆரம்பிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக 10 தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிக்கவுள்ளது. இதன்மூலம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்களும் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியும்.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் ஊழியர்கள் கேட்கும் சம்பள உயர்வை அரசினால் வழங்க முடியாத நிலையுள்ளது. எனவே, இத்தகைய தனியார் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்படுவதன் மூலம் அவர்களுக்கும் ஒரு நிவாரணம் கிடைப்பதற்கு சந்தர்ப்பம் உள்ளது.

#### அனுமதி கிடைக்காத மாணவருக்கும் சந்தர்ப்பம்

இத்தகைய தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதன்மூலம் தெற்காசிய மாணவர்களும் இங்கு வந்து கல்வி கற்பதற்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கும். பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத எமது மாணவர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகங்களை உலகின் தரம் வாய்ந்த ஆயிரம் பல்கலைக்கழகங்களுக்குள் கொண்டுவருவதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தனியார் பல்கலைக்கழகம் அமைவதை மாணவர்கள் சிலர் எதிர்க்கின்றனர். ஆனால் தனியார் பல்கலைக்கழகங்களின் வருகை இலங்கையின் கல்வித்துறைக்கு ஓர் ஆரோக்கியமான விடயம் என்பதில் சந்தேகமில்லை - என்றார்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத் தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டார். (ஒ-6-10-14)

### யாழ்நகரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோரும் கலந்துகொள்வர்.

பின்னர் யாழ். துரையப்பா விளையாட்டரங்குக்குச் செல்லும் அவர், அங்கு இந்திய அரசால் இடம்பெயர்ந்த மக்களுக்காக வழங்கப்பட்ட கூரைத் தகடுகளை வழங்கவுள்ளதுடன் இந்து கலாசார மையத்துக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

இறுதியாக யாழ். பொது நூலகத்தில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார். (ஒ-6-15)

### பூஸாவிலுள்ள.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் நேற்றுக்காலை அவசரமாக கொழும்புக்குச் சென்று அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்ற பின்னர், மாலை மீண்டும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டார்.

அங்கு வைத்தே அமைச்சர் இந்தத் தகவலைக் கூறினார்.

அமைச்சர் திஸநாயக்க அங்கு மேலும் கூறியதாவது :-

பூஸா தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மாணவர்களை விடுவிக்குமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் என்னிடம் விடுத்த கோரிக்கையை இன்று (நேற்று) அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதியிடம் முன்வைத்தேன். அவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு உரிய நடவடிக்கைகளைத் தாம் எடுப்பதாக ஜனாதிபதி என்னிடம் உறுதியளித்தார் - என்றார்.

இதேவேளை கைதுசெய்யப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீட மாணவி துவாரகாவை விடுதலை செய்யுமாறு அவரது சகோதரியான வசந்தகலா வழங்கிய மகஜரைக் கையேற்ற அமைச்சர் திஸநாயக்க அவரை விடுவிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் வாக்குறுதி அளித்தார். (ஒ-6-14)

### அரசமைப்புத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. உயர்நீதிமன்றத்தின் ஆலோசனை செவ்வாய்க்கிழமை நேரடியாக சபாநாயகருக்கு அனுப்பிவைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் 160 உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள் என்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை தெரிவித்தார். (ஒ-சி)

### முன்னாள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகவல்களைப் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வவுனியா பம்பைமடுவ புனர்வாழ்வு நிலையத்தில் பயிற்சிகளை நிறைவுசெய்த 500 பேர் அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கவுள்ளனர். இந்நிகழ்வின்போது சுமார் 180 பேருக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

பெற்றோரிடம் ஒப்படைக்கப்படும் இவர்களில் பதினேழு தாய்மார்கள், இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், சிறுவர்கள் மற்றும் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் ஆகியோர் உள்ளடங்குகின்றனர் என்றார் பிரிகேடியர் ரணதுங்க. (ஒ-சி)

படிவங்கள் விற்பனையாகிறது
பட்டதாரிகளுக்கு
5 வேலை வாய்ப்புப் படிவங்கள்
1) BANK OF CEYLON - Management Trainee.
2) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்திச் சபை.
3) இலங்கை உல்லாச பயணத்துறை.
4) இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை.
5) உதவி மறியற்சாலைக் கண்காணிப்பாளர்.
O/L, A/L பரீட்சார்த்திகளுக்கு
1) முகாமைத்துவ உதவியாளர்.
2) ஜேய்லர் - வகுப்பு - II
3) நலன்புரி அலுவலர் - வகுப்பு - II
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். வேம்படி. நல்லூர்.

விற்பனையாகிறது
எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ள வடக்கு மாகாண சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களை ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை வழிகாட்டி நூல்கள்.
ஆசிரியர்கள் :
திரு. தவசேகர் - விலை 250/-
திரு. உமாசங்கர் - விலை 450/-
திரு. கமலதாசன் - விலை 250/-
ஆகியோர்களின் புத்தகங்கள் விற்பனையாகின்றன.
அன்னை புத்தகசாலை.
யாழ்ப்பாணம் - 222 9881
சாவகச்சேரி - 227 0003
நல்லூர் - 077 2487662
விசேட விலைக்கழிவு வழங்கப்படும்

முன்பள்ளி ஆசிரியர்கள் வெற்றிடம்
உரும்பிராய் கிட்ஸ் பார்க், திருநெல்வேலி சிமாட் கிட்ஸ் ஆகிய முன்பள்ளிகளில் வெற்றிடங்கள் உள்ளன.
க.பொ.த. (உ/த) இல் கலைப்பிரிவில் சித்தியடைந்தோரும் மற்றும் முன்பள்ளி கற்பித்தல் அனுபவமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.
ஆங்கில அறிவு மேலதிக தகைமையாகும்.
முடிவுத் திகதி : 07.09.2010
தலைவர்,
உரும்பிராய் கிட்ஸ் பார்க்,
ஞான வைரவர்கோயில் வீதி,
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.

விற்பனையாகிறது
வருகின்ற சனி, ஞாயிறு கிழமைகளில் பரீட்சை நடைபெறவுள்ள
சுகாதார முகாமைத்துவ உதவியாளர் வழிகாட்டி
1) P. உமாசங்கர்
2) P. கமல்தாசன்
3) தவசேகர்
இலவச கையேடு
பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம். வேம்படி. நல்லூர்.

சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களை ஆள்சேர்ப்பு செய்வதற்கான பரீட்சை வழிகாட்டி - 2010
இலவசப்பிரதியுடன் P. கமல்தாசன்
சகல புத்தகசாலைகளிலும்
விலை 250 ரூபா

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
2011 A/L Day Class
மீட்டல் வகுப்புகள்
வழமையான ஆசிரிய குழாம்
ஆரம்பம் : 01.09.2010 (நாளை)
புதன் காலை 7 மணி.

Hacking CEH
Approved Training Providers & Testing Center Certified Ethical Hacker
Free Diploma in Hardware Technology - English, COMPUTER DRIVING LICENCE-ICDL
MCS T.P-772395895 இச்சலுகை இன்னும் சில நாட்கள் வரை மட்டுமே.
Supported By
324,பலாலி வீதி,பரமேஸ்வராசந்தி அருகில்,யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.08.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.